### இராஜ்யத்தின் சித்திரங்கள்

# ஆதியிலே



தேவனுடைய தெய்வீக திட்டத்தை புரிந்துக்கொள்பவர்களுக்கு ஒரு பெரிய நன்மை உண்டு. இவர்கள் தேவனுடைய மற்றும் நம்முடைய கர்த்தராகிய இயேசுவின் உண்மையான தன்மையைப் பற்றியும், அவர்களுக்கு நாம் செய்யவேண்டிய ஊழியத்தைப் பற்றியும் நன்கு புரிந்துக்கொள்ளும் பாக்கியம் பெற்றவர்கள். இவை பெரும்பாலும் தவறாக சித்தரிக்கப்படுவதை போல இது சிறிய ஆசீர்வாதம் அல்ல.

தேவனுடைய திட்டத்தை நம்புகிறவர்களுக்கு, எதிர்காலத்திற்கான அற்புதமான நம்பிக்கை கொடுக்கப்பட்டுள்ளது."எழுதியிருக்கிறபடி: தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷருடைய இருதயத்தில் தோன்றவுமில்லை; நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்; அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார்."(1 கொரிந்தியர் 2:9,10) தேவனுடைய இராஜ்யத்தின் பரிமாணங்களை வேதத்தின் மூலம் நாம் புரிந்துக்கொள்ள துவங்கலாம். தேவனுடைய திட்டத்தின் செய்திகளை இன்று யார் ஒருவர், நித்திய ஜீவனின் எதிர்பார்ப்புடன், ஒவ்வொருவரும் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுப்பப்படுவார்கள் என்று நம்ப முடியும்?

இந்த இதழில் உள்ள கட்டுரைகளின் எண்ணிக்கை நான்காக குறைக்கப்பட்டுள்ளது. இது மிக விரிவான விளக்கங்கள் மற்றும் சில அற்புதமான சித்திரங்களின் விளக்கங்களை நாம் புரிந்துகொள்ள அனுமதிக்கிறது. இந்த கட்டுரைகளை வாசிப்பதோடு, அவற்றை நன்கு ஆராய்வதற்கும் வாசகர்களை நாம் ஊக்குவிக்கிறோம். தேவன் நம்முடைய மன கண்களுக்கு (பார்வை) வெளிப்படுத்தின காரியங்கள் சிறந்த நோக்கம் உடையவைகளாக இருப்பதால் அவைகள் சிலிர்ப்பூட்டுகின்றன.

மனிதன் ஏன் வீழ்ந்தான் என்பதையும், அவன் கீழ்நோக்கி பாவத்தில் சுழல்வதையும், "நித்திய ஜீவனுக்கு வழிவகுக்கும் கோட்பாடுகள்" என்ற முதல் கட்டுரை விவரிக்கிறது. இந்த வேதனையான அனுபவத்தில், அத்தியாவசியக் கொள்கைகள் தெரிவிக்கப்படுகின்றன. பரிசுத்தமான பெரும்பாதையை ஆயத்தம் செய்வதில், இந்த தீமையின் அனுபவம் மனுக்குலத்தின் இருதயத்தில் மனத்தாழ்மையை வளர்க்க உதவும்.

யோசேப்பின் வாழ்க்கையையும், அவரது அனுபவங்களும், இயேசுவின் முதல் மற்றும் இரண்டாம் வருகையையும் எவ்வாறு இணைக்கிறது என்பதை "யோசேப்பின் ஆசீர்வாதமான வேலை" என்ற கட்டுரை விவரிக்கிறது. இதில் காணப்படும் இணைகள் உறைய வைக்கிறது. கட்டுரையின் முடிவில் உள்ள ஒரு விளக்கப்படம், யோசேப்பின் பல அனுபவங்களையும் அவற்றின் சாத்தியமான பொதுவான பயன்பாடுகளையும் பட்டியலிடுகிறது.

"ஒரு புதிய ஆலயத்தைப் பற்றி எசேக்கியேலின் பார்வை", எசேக்கியேலின் கடைசி ஒன்பது அதிகாரங்களில் தேவன் கொடுத்த தரிசனத்தை ஆராய்கிறது. தீர்க்கதரிசி கண்ட தரிசனங்களைப் பற்றி அவருக்கு விளக்கம் அளிக்கப்படவில்லை என்றாலும், ஆசரிப்புக் கூடாரம், புதிய எருசலேம் மற்றும் பொதுவான தேவனுடைய திட்டம் பற்றிய நமது புரிதல், இந்த அழகான தரிசனத்தில் காணப்படும் அடையாளங்களின் பெரும்பகுதியைப் புரிந்துகொள்ள உதவுகிறது. இருப்பினும், பரிந்துரைக்கப்பட்ட விளக்கங்கள் அதிகாரபூர்வமானதல்ல என்றாலும், தொகுப்பாளருக்கு தோன்றுகிறபடி அது நியாயமான பயன்பாடுகளை கொண்டுள்ளது.

தேவனுடைய இராஜ்யத்தின் மாட்சிமையுள்ள தன்மையின் மற்றொரு உள்நோக்கத்தை "புதிய எருசலேம்" என்ற இறுதிக் கட்டுரை வழங்குகிறது. மற்ற வேதாகம அடையாளங்களோடு கணித தொடர்புகளும் விளக்கப்பட்டுள்ளது. கூடுதலாக, ஆலயத்திலிருந்து வெளியேறும் ஜீவ தண்ணீர் மற்றும் எசேக்கியேலின் தரிசனத்திற்கும் ஒரு இணைப்பு செய்யப்படுகிறது. ஆம், இந்த ஜீவனை தான், தேவனுடைய திட்டம் வாக்களிக்கிறது. நம்முடைய நம்பிக்கை, மேம்பாடு மற்றும் அவருடைய மகிமைக்காக இந்த கருத்தை முழு வேதாகமத்தில் அவர் வைத்திருப்பது நம்மை சிலிர்க்க வைக்கிறது. இந்த பிரதி நம் ஒவ்வொருவரையும் தேவனுடைய திட்டத்தில் வைக்கப்பட்டுள்ள மகத்தான எதிர்காலத்தை குறித்து நமது கவனத்தை இன்னும் மேம்படுத்தட்டும்!

**செப்டம்பர் / அக்டோபர் 2019, தொகுப்பு 101, எண் 5**

**நித்திய ஜீவனுக்கான ஏற்பாடுகள்** 2
சிறப்பான ஒரு வாய்ப்பு

**யோசேப்பின் ஆசீர்வாதமான வேலை** 7
வரவிருக்கும் ஆசீர்வாதங்களைப் பற்றிய ஒரு சித்திரம்

**எசேக்கியேலின் வரைபடங்கள்** 18
இரண்டு பக்கங்களில் எசேக்கியேலின் ஆலயம்

**ஒரு புதிய ஆலயத்தைப்பற்றி எசேக்கியேலின் பார்வை** 20
இராஜ்யத்தின் ஒரு சித்திரம்

**புதிய எருசலேம்** 30
இராஜ்யத்திற்கான ஒரு புதிய அரசாங்கம்.

**இன்றைய தீர்க்கதரிசனம்** 37
நிராகரிப்பு (அ) மறுப்புவாதத்தில் எழுச்சி

### சிறப்பான ஒரு வாய்ப்பு

# நித்திய ஜீவனுக்கான ஏற்பாடுகள்



**Tom Ruggirello**

"கர்த்தாவே, சிறுமைப்பட்டவர்களுடைய வேண்டுதலைக் கேட்டிருக்கிறீர்; அவர்கள் இருதயத்தை ஸ்திரப்படுத்துவீர்." (சங்கீதம் *10:17*)

ஏதேன் தோட்டத்தில், மனித குடும்பம் நித்திய ஜீவனைப் பெற இன்னும் ஆயத்தமாகவில்லை. நம்முடைய ஆதி பெற்றோர் அருமையான பரிபூரணத்தில் சிருஷ்டிக்கப்பட்டிருந்தாலும், புரிதலிலும், ஞானத்திலும் அதிகமாக குறைவுப்பட்டிருந்தார்கள். அத்தகைய ஒரு எளிய சோதனையில் தோல்வியுற்றது (ஆதியாகமம் 2:17) மகத்தான சிருஷ்டிகரின் மீதான நம்பிக்கை யின்மையையும் குறிக்கிறது. அவருடைய மனித குடும்பத்திற்கு கற்பிக்க வேண்டிய காரியங்கள் அதிகமாக இருந்ததால், அனுபவத்தினால் பெறப்படும் பாடங்கள் அவர்களுடைய இருதயத்தில் பதிய வைப்பதும் தேவனுடைய திட்டத்தில் அடங்கியிருந்தது. இது துன்பங்கள் நிறைந்த ஒரு கடினமான நேரம். ஆனால் நித்திய ஜீவனைப் பெறுவதற்கான தேவைகளைப் பற்றி மனுக்குலம் கற்றுக்கொள்ளும்போது, இந்த வாழ்கையின் கல்வி அருமையான பலனைத் தரும்.

**தாழ்மைக்குரிய பாடங்கள்**

தாயாகிய ஏவாளிடம் சர்ப்பத்தின் பொய்கள், கற்றுக்கொள்ளும் அனுபவத்தைத் துவக்கியது. "அப்பொழுது சர்ப்பம் ஸ்திரீயை நோக்கி: நீங்கள் சாகவே சாவதில்லை;நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப்போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார் என்றது." (ஆதியாகமம் 3:4-6) ஞானத்திற்கான விருப்பம் தவறல்ல. இருப்பினும், அவள் "தேவர்களாக இருப்பதை" தடுப்பதற்கு தேவன் முயற்சிப்பதை போல சர்ப்பத்தின் வார்த்தைகள் குறிப்பிடப்பட்டது. மிக பெரிய ஏமாற்றுக்காரனின் வார்த்தைகளை நம்பியதே, அவளுடைய முதல் தவறாகும். இது ஒரு கவர்ச்சியான பொய்யை எளிதில் நம்பும், ஒரு குழந்தையின் அப்பாவித்தனத்தைப் போன்றது.

ஏவாள் தனது பதிலில், இயல்பான அவளுடைய லட்சியத்தை வெளிப்படுத்தினாள். ஞானத்திற்கான இந்த விருப்பம், கற்பிக்கப்படவும், சுத்திகரிக்கப்படவும் வேண்டியதாக இருந்தது. பாவமும், மரணமும் இந்த சுத்திகரிப்பின் செயல் முறையைத் தொடங்கியது. "தேவர்களாக" வேண்டும் என்ற சுயநலமான லட்சியம், இயேசுவின் வார்த்தைகளை நிறைவேற்றுவதற்காக மாற்றப்பட்டது. "உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன்." (மத்தேயு 20:27) தலைகீழான மனிதனின் இருதயத்தின் இந்த விருப்பமே, தேவனுடைய நோக்கத்தின் ஒரு பகுதியாகும். இதில் ஒரு ஊழியக்காரரின் மனநிலையைப் பெற்ற ஏராளமான இருதயங்களை கொண்ட ஒரு மனித இனம் முழுமையாக்கப்படும். ஏவாளின் இந்த முடிவிலிருந்து, பெருமை மற்றும் தவறான லட்சியம் மனுக்குலத்திற்கு ஒரு தடைக்கல்லாக இருந்து வருகிறது. இந்த மூல கூறுகள் ஒரு நாளில் வேரோடு அகற்றப்படும்.

**தீமை விரைவாக பிடிக்கும்**

மனித குடும்பம் வளர்ந்தவுடன், ஜனங்கள் மேலும் ஒழுங்கமைக்கப்பட்டார்கள். வேதத்தில் பதிவு செய்யப்பட்ட முதல் பட்டணம், தேவனால் நிராகரிக்கப்பட்ட சிறிது நேரத்திலேயே காயீனால் கட்டப்பட்டது. அவர் கட்டுவதற்காக தேர்வு செய்த இடம் மிக சுவாரஸ்யமானது. "அப்படியே காயீன் கர்த்தருடைய சந்நிதியைவிட்டுப் புறப்பட்டு, ஏதேனுக்குக் கிழக்கான நோத் என்னும் தேசத்தில் குடியிருந்தான். காயீன் தன் மனைவியை அறிந்தான்; அவள் கர்ப்பவதியாகி, ஏனோக்கைப் பெற்றாள்; அப்பொழுது அவன் ஒரு பட்டணத்தைக் கட்டி, அந்தப் பட்டணத்துக்குத் தன் குமாரனாகிய ஏனோக்குடைய பேரை இட்டான்." (ஆதியாகமம் 4:16,17)

நோத் என்ற தேசம் ஏதேனுக்கு வெளியே இருந்தது. "நோத்" என்ற வார்த்தைக்கு "நாடோடி" என்று அர்த்தம். தேவன் காயீனுக்கு கொடுத்த சாபத்தோடு இது தொடர்புடையது. "இப்பொழுது உன் சகோதரனுடைய இரத்தத்தை உன் கையிலே வாங்கிக்கொள்ள தன் வாயைத் திறந்த இந்தப் பூமியில் நீ சபிக்கப்பட்டிருப்பாய். நீ நிலத்தைப் பயிரிடும்போது, அது தன் பலனை இனி உனக்குக் கொடாது; நீ பூமியில் நிலையற்று அலைகிறவனாயிருப்பாய் என்றார்." (ஆதியாகமம்4:11,12)

காயீன் தப்பி ஓடியவனாக ஏதேனை விட்டு ஓடினான். நகரம் (பட்டணம்) என்பதற்கு "காவலர்களால்

பாதுகாக்கப்பட்ட இடம்" என்று பொருள். (Strong's 5892) ஒரு பட்டணத்தை கட்டியெழுப்புவதன் மூலம், காயீன் தன்னை அல்லது அவரது குடும்பத்தினரைத் தாக்கக்கூடிய எவருக்கும் எதிராக ஒரு பாதுகாப்பான நிலையை உருவாக்கினார். அந்த பட்டணத்திற்கு அவரது மகன் ஏனோக்கின் பெயரை சூட்டினார். தனது பெயர் அவமரியாதைக்குரியதாக மாறியதன் காரணமாக அவருடைய சொந்த பெயரைப் பயன்படுத்துவதைத் தவிர்த்திருக்கக்கூடும். காயீன் ஏதேன் மற்றும் "தேவனுடைய பிரசன்னத்தை" விட்டு வெளியேறிய போது, அவர் தனது உறவினர்களிடமிருந்து தன்னைத் துண்டித்துக்கொண்டார். அதற்குபின் அவர் தேவனையும் வணங்கவில்லை. "நோத்" என்ற வார்த்தைக்கு, "நடுக்கம்" அல்லது "தடுமாறுதல்" என்றும் பொருள்படலாம். (See Matthew Henry Commentary for Genesis 4:16.) காயீன் தேவனுடைய சமூகத்திலிருந்து வெகு தொலைவில் இருப்பதன் விளைவாக மனதில் ஒரு அமைதியின்மையை இது குறிக்கிறது.

தனக்கும், அதுவரைக்கும் தேவனை வணங்கிய அவரது தாய், தந்தையின் செல்வாக்கிற்கும் இடையில் ஒதுக்கிவைக்கப்பட்ட இந்நிலை அதிக இடைவெளியை ஏற்படுத்தியது. இவ்வாறாக காயீனும் அவருடைய குடும்பத்தினரும் நீண்ட காலமாக தேவனிடமிருந்து பிரிந்து பாவத்தில் ஜீவித்தனர். காயீனுடைய தனிப்பட்ட கீழ்நோக்கிய போக்கு அவரது சகோதரர் மீது பொறாமை கொண்டு,கொலைக்கு வழிவகுத்தது. மேலும் இறுதியில் இது பயத்தின் வாழ்க்கையை தந்தது. அப்போஸ்தலன் யோவான் காயீனின் வாழ்க்கையிலிருந்து ஒரு பாடத்தைப் பகிர்ந்துக்கொள்கிறார். "நாம் ஒருவரிலொருவர் அன்பு கூர வேண்டுமென்பதே நீங்கள் ஆதிமுதல் கேள்விப் பட்ட விசேஷமாயிருக்கிறது. பொல்லாங்கனால் உண்டாயிருந்து தன் சகோதரனைக் கொலைசெய்த காயீனைப் போலிருக்க வேண்டாம்; அவன் எதினிமித்தம் அவனைக் கொலைசெய்தான்? தன் கிரியைகள் பொல்லாதவைகளும், தன் சகோதரனுடைய கிரியைகள் நீதியுள்ளவைகளுமாய் இருந்ததினிமித்தந்தானே." (1யோவான் 3:11,12) மனிதனின் இருதயத்திலிருந்து -அன்பின் குறைபாடு, பொறாமை மற்றும் போட்டி மனப்பான்மை போன்ற சில குணங்களை அழிப்பதற்காக வடிவமைக்கப்பட்ட தேவனுடைய திட்டத்தை காயீனிடம் காணலாம்.

ஆதியாகமம் 4ல் கொடுக்கப்பட்டுள்ள காயீனின் குறுகிய பரம்பரை ஜலப்பிரளயத்தில் தப்பிக்கவில்லை. காயீனைப் போன்ற அவருடைய சந்ததியில் வந்த லாமேக்கு (வசனம் 23) என்பவர், இன்னொருவரின் உயிரைப் பறித்தார். அவர் "லாமேக்கு தன் மனைவிகளைப் பார்த்து: ஆதாளே, சில்லாளே, நான் சொல்வதைக் கேளுங்கள்; லாமேக்கின் மனைவிகளே, என் சத்தத்துக்குச் செவிகொடுங்கள்; எனக்குக் காயமுண்டாக ஒரு மனுஷனைக் கொன்றேன்; எனக்குத் தழும்புண்டாக ஒரு வாலிபனைக் கொலைசெய்தேன்;" (ஆதியாகமம் 4:23) என்று கூறினார். இது தற்காப்புக்காக இருந்தாலும், இல்லாவிட்டாலும், வன்முறை மிகவும் முக்கியத்தும் பெற்றதை இது குறிக்கிறது. காயீன் தனது சகோதரர் ஆபேலைக் கொன்றதற்குப் பழிவாங்கப் படுவதைப் பற்றி அஞ்சியது போல, லாமேக்கும் பழிவாங்கப்படுவார் என்ற பயத்திற்குள்ளானார். (வசனம் 24) இரண்டு மனைவிகளைக் கொண்டிருப்பதாக வேதத்தில் குறிப்பிடப்பட்ட முதல் மனிதனும் லாமேக் ஆவார். இந்த வாழ்க்கை முறையை ஏற்றுக்கொண்டதன் விளைவாக, காயீனின் பரம்பரை அவரது சகோதரர் சேத்தை விட விரைவாக சந்ததிகளை உருவாக்கியிருக்கலாம். ஆகவே, தேவதூதர்கள், "மனுஷ குமாரத்திகள் அதிக சௌந்திரியமுள்ளவர்கள் என்று கண்டார்கள்" (ஆதியாகமம் 6:2) பெரும்பாலும் காயீனின் சந்ததி, நெபிலிம்களை உருவாக்க தேவதூதர்களுடன் இசைந்து, அதிக ஆதிக்கமும் செலுத்தியிருக்க வேண்டும். தீமை மிகவும் துரிதமாக அதிகரித்ததினால், தேவன் ஒரு ஜலப்பிரளயத்தினால் இந்த இனத்தை அழிக்க தீர்மானித்தார். சேத் சந்ததியில் வந்த நோவா மற்றும் அவருடைய குடும்பத்தினர் மட்டுமே, காக்கப்பட்டனர். இந்த அழிவு இரண்டு நோக்கங்களை நிறைவேற்ற உதவியது. முதலாவது, இது கலப்பின இனத்தின் தீய பாதிப்புகளிலிருந்து உலகை விடுவித்தது. இரண்டாவதாக, ஒரு நீதியான இராஜ்யத்தினால் கூட அவர்களை பரிசுத்தப்படுத்த முடியாத அளவுக்கு தீயதாக மாறக்கூடிய இனத்தை இன்னும் மோசமாக மாறுவதிலிருந்து தடுத்தது. நித்திய ஜீவன் வழங்கப்படுவதற்கு முன், கற்றுக்கொள்ளப்பட வேண்டிய மற்றொரு காரியத்தை இங்கு காணலாம். மனிதன் நீதியை நேசிக்கவும், தூய்மையான வாழ்க்கை முறையைத் தழுவவும் கற்றுக்கொள்ளவேண்டும்.

## தேசங்களை கையாளுதல்

நெ.:.பிலிம்களின் தீய பாதிப்புகளிலிருந்து உலகம் சுத்திகரிக்கப்பட்ட நிலையில், நோவாவும், அவரது குடும்பத்தினரும் பூமியை மறுபடியும் நிரப்பக்கூடிய செயல்முறையைத் தொடங்கினார்கள். நோவா மற்றும் அவரது குமாரர்களின் பரிசுத்தமான செல்வாக்கு இருந்த போதிலும், பெருமை, பொறாமை மற்றும் பேராசை போன்ற

வீழ்ச்சியடைந்த குணங்களுடன் மனுக்குலம் தொடர்ந்து போராடியது. இது பாபிலோனின் பேரரசராகிய நேபுகாத்நேச்சாரில் நன்கு விளக்கப்பட்டுள்ளது.

எல்லா உலக தரங்களின்படி, நேபுகாத்நேச்சார் ஒரு சிறந்த மனிதர். அவர் மத்திய கிழக்கு நாடுகளை வென்ற, திறமையான இராணுவத் தலைவராகவும் இருந்தார். கட்டிடங்களையும், மற்றும் கட்டுமானத்திலும் அசாதாரண திறமையையும், அத்துடன் மிக பெரிய தொழிலாளர் சக்தியையும் நிர்வகித்தார். அவரது திட்டமிடுதல் மற்றும் பொறியியல் தலைமையின் மூலம், பாபிலோன் ஒரு ஐசுவரியமுள்ள வளமான தேசமாக மாற்றப்பட்டது. "நேபுகாத்நேச்சாராகிய நான் என் வீட்டிலே சவுக்கியமுள்ளவனாயிருந்து என் அரமனையிலே வாழ்ந்துகொண்டிருந்தேன்." (தானியேல் 4:4) என்று அவர் சொல்லும் அளவுக்கு அவரது லட்சியத்திற்கு பெரும் செல்வம் பரிசளிக்கப்பட்டது. ஆனால் நேபுகாத்நேச்சாரின் இருதயத்தில் பெருமை இருந்தபடியால், அவருக்கு மட்டும் அல்ல, சகல ஜாதிகளுக்கும், ஒரு தீர்க்கதரிசனமான ஒரு சொப்பனத்தின் மூலம் ஒரு செய்தியை அனுப்புவதற்கு தேவன் தீர்மானித்தார். இது இறுதியில் அவருடைய மீதியுள்ள வாழ்க்கையில் பாதிப்பை ஏற்படுத்தி, அனைத்து புறஜாதி தேசங்களுக்கும் ஒரு கருத்தை பாடமாக கொடுக்கும். கனவு கண்ட ஒரு வருடம் கழித்து அவர் தனது வலிமைமிக்க இராஜ்யத்தைப் பார்த்து, "இது என் வல்லமையின் பராக்கிரமத்தினாலும், என் மகிமைப்பிரதாபத்துக்கென்று, ராஜ்யத்துக்கு அரமனையாக நான் கட்டின மகா பாபிலோன் அல்லவா என்று" (தானியேல் 4:30) சொன்னார்.

## நேபுகாத்நேச்சாரின் சொப்பனம்

"நான் படுத்துக்கொண்டிருந்தபோது என் தலையில் தோன்றின தரிசனங்கள் என்னவென்றால்: இதோ, தேசத்தின் மத்தியிலே மிகவும் உயரமான ஒரு விருட்சத்தைக் கண்டேன். அந்த விருட்சம் வளர்ந்து பலத்து, தேசத்தின் எல்லைபரியந்தமும் காணப்படத்தக்கதாக அதின் உயரம் வானபரியந்தம் எட்டினது. அதின் இலைகள் நேர்த்தியும் அதின் கனி மிகுதியுமாயிருந்தது; எல்லா ஜீவனுக்கும் அதில் ஆகாரம் உண்டாயிருந்தது; அதின் கீழே வெளியின் மிருகங்கள் நிழலுக்கு ஒதுங்கினது; அதின் கொப்புகளில் ஆகாயத்துப் பட்சிகள் தாபரித்துச் சகல பிராணிகளும் அதினாலே போஷிக்கப்பட்டது. நான் படுத்திருக்கையில் என் தலையில் தோன்றின தரிசனங்களைக் காணும்போது, காவலாளனாகிய பரிசுத்தவான் ஒருவன் வானத்திலிருந்து இறங்கக் கண்டேன். அவன் உரத்த சத்தமிட்டு: இந்த விருட்சத்தை வெட்டி, இதின் கொப்புகளைத் தறித்துப் போடுங்கள்; இதின் இலைகளை உதிர்த்து, இதன் கனிகளைச் சிதறடியுங்கள்; இதின் கீழுள்ள மிருகங்களும் இதின் கொப்புகளிலுள்ள பட்சிகளும் போய்விடட்டும். ஆனாலும் இதின் வேர்களாகிய அடிமரம் பூமியில் இருக்கட்டும்; இரும்பும் வெண்கலமுமான விலங்கு இடப்பட்டு, வெளியின் பசும் புல்லிலே தங்கி, ஆகாயத்துப் பனியிலே நனைவதாக; மிருகங்களோடே பூமியின் பூண்டிலே அவனுக்குப் பங்கு இருக்கக்கடவது. அவனுடைய இருதயம் மனுஷ இருதயமாயிராமல் மாறும்படி, மிருக இருதயம் அவனுக்குக் கொடுக்கப்படக்கடவது; இப்படியிருக்கிற அவன்மேல் ஏழு காலங்கள் கடந்துபோகவேண்டும். உன்னதமானவர் மனுஷருடைய ராஜ்யத்தில் ஆளுகைசெய்து தமக்குச் சித்தமானவனுக்கு அதைக் கொடுத்து, மனுஷரில் தாழ்ந்தவனையும் அதின்மேல் அதிகாரியாக்குகிறார் என்று நரஜீவன்கள் அறியும்படிக்குக் காவலாளரின் தீர்ப்பினால் இந்தக் காரியமும் பரிசுத்தவான்களின் மொழியினால் இந்த விசாரணையும் தீர்மானிக்கப்பட்டது என்றான்." (தானியேல் 4:10-17)

இந்த பிரச்சனைக்குரிய கனவுக்கு விளக்கமளிக்க நேபுகாத்நேச்சார், தானியேலை அழைத்தார். கனவு இராஜாவைப் பற்றியது என்பதை தீர்க்கதரிசி வெளிப்படுத்தினார். "அது பெரியவரும் பலத்தவருமாயிருக்கிற ராஜாவாகிய நீர்தாமே; உமது மகத்துவம் பெருகி வானபரியந்தமும், உமது கர்த்தத்துவம் பூமியின் எல்லைபரியந்தமும் எட்டியிருக்கிறது." (வசனம் 22) அந்த மிக பெரிய விருட்சம் நேபுகாத்நேச்சாரையும் அவரது ஐசுவரியத்தையும் அதன் செழிப்பையும் சித்தரித்தது. அதன் கிளைகளில் வசிப்பவர்களுக்கு பாதுகாப்பையும் உணவையும் கொடுக்கும் மரமாக இருந்தது. ஆனால் நேபுகாத்நேச்சாரிடம் காரியங்கள் சரியாக இல்லை. கர்த்தர் தான் இஸ்ரயேலில் மட்டுமே அக்கறை கொண்டவர் அல்ல என்பதை காட்ட விரும்பினார். முக்கியமாக எல்லா மனிதர்களும் தேவனைப் பற்றியும், அவருக்கு முன் நிற்பதற்கான தகுதி நிலையைப் பற்றியும் கற்றுக்கொள்வார்கள். யூதர்களும் புறஜாதியாரும் மனத்தாழ்மையைக் கற்றுக்கொள்ளவேண்டும். இதுவே, தீமையின் அனுமதியின் பிரதான பாடங்களில் ஒன்றாகும்.

கனவின் முழு அர்த்தத்தையும் தானியேல் கூறினார். "ஆனாலும் விருட்சத்தின் வேர்களாகிய அடிமரம் தரையில் இருக்கட்டும் என்று சொல்லப்பட்டது என்னவென்றால்: நீர் பரம அதிகாரத்தை அறிந்தபின், ராஜ்யம் உமக்கு நிலைநிற்கும். ஆகையால் ராஜாவே, நான் சொல்லும் ஆலோசனையை நீர் அங்கீகரித்துக்கொண்டு நீதியைச் செய்து உமது பாவங்களையும், சிறுமையானவர்களுக்கு இரங்கி உமது அக்கிரமங்களையும் அகற்றிவிடும்; அப்பொழுது உம்முடைய வாழ்வு நீடித்திருக்கலாம் என்றான்." (தானியேல் 4:26-27)

நேபுகாத்நேச்சார் தானியேலின் சொல்லை கேட்டிருந்தால், அவர் தாங்கவிருக்கும் மோசமான அனுபவத்தைத் தவிர்த்திருக்க முடியும். ஆனால் பெரும்பாலும், தீமையை அனுபவிப்பதன் மூலம் மட்டுமே மனிதன் தேவனுடைய நன்மையைப் பாராட்ட முடியும். ஒரு மிருகத்தைப் போல புல்லை சாப்பிட்ட அந்த ஏழு வருடங்கள் ஒரு பயங்கரமான அனுபவமாக இருந்திருக்க வேண்டும். வெளியில் தங்கி, அத்தகைய வாழ்க்கையில் வரும் குளிர், பனி போன்ற நிலைமைகளை உணர்வது, மிகவும் கடினமாகவே இருந்திருக்கும். இருப்பினும், அனுபவம், எதிர்பார்த்த முடிவுகளை தந்தது.

"அந்த நாட்கள் சென்ற பின்பு, நேபுகாத்நேச்சாராகிய நான் என் கண்களை வானத்துக்கு ஏறெடுத்தேன்; என் புத்தி எனக்குத் திரும்பி வந்தது; அப்பொழுது நான் உன்னதமானவரை ஸ்தோத்திரித்து, என்றென்றைக்கும் ஜீவித்திருக்கிறவரைப் புகழ்ந்து மகிமைப்படுத்தினேன்; அவருடைய கர்த்தத்துவமே நித்திய கர்த்தத்துவம், அவருடைய ராஜ்யமே தலைமுறை தலைமுறையாக நிற்கும். பூமியின் குடிகள் எல்லாம் ஒன்றுமில்லையென்று எண்ணப்படுகிறார்கள்; அவர் தமது சித்தத்தின்படியே வானத்தின் சேனையையும் பூமியின் குடிகளையும் நடத்துகிறார்; அவருடைய கையைத் தடுத்து, அவரை நோக்கி: என்ன செய்கிறீரென்று சொல்லத்தக்கவன் ஒருவனும் இல்லை என்றேன்." (தானியேல் 4:34-35)

ஒரு காலத்தில் தேவனுடைய மேலான ஆதிக்கத்தை அடையாளம் கண்டுக்கொள்ள தவறி, தானே உச்சமான வல்லமை மற்றும் மாட்சிமிக்கவர் என்று நினைத்த, ஒரு மனிதனுக்கான பலனளிக்கும் அறுவடை இங்கே தான் நடந்தது. ஒரு முறை அவரது இருதயத்தில் நிரம்பியிருந்த ஆணவமும் பெருமையும் போய்விட்டது. அவர் யேகோவா தேவனின் மேலாதிக்கத்தை ஒப்புக்கொண்டார், அவரை கனப்படுத்தினார், கடைசியாக தனது ஆதிக்கத்தை தேவனோடு ஒப்பிடுகையில், அது நிகரற்றது என்பதை அவர் புரிந்துக்கொண்டார். மனிதர்கள் தேவனுடைய அனுமதியுடன் மட்டுமே ஆட்சி செய்கிறார்கள் என்பதை அவர் கண்டார்.

அவர் கற்றுக்கொள்ள வேண்டும் என்று தேவன் விரும்பிய பாடங்கள் இவைகளே, மேலும் சொப்பனத்தில் அந்த விருட்சம் அழிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அடிமரம் அதே இடத்தில் விடப்பட்டது. ஒரு முறை தண்டனை தீர்ப்பு அதன் வேலையை முடித்தவுடன் அந்த அடிமரம் மீண்டும் வளரும். நேபுகாத்நேச்சார் ஏழு காலங்களுக்கு பின் தனது ஆட்சியை மீண்டும் நிலை நாட்ட அனுமதிக்கப்படுவார் என்பதை இது பொருள்படுத்தியது.

## பெரிதான சித்திரம்

நேபுகாத்நேச்சாரின் இந்த தனிப்பட்ட தாழ்மையில், மற்றொரு விரிவான பயன்பாடு உள்ளது. "இந்த குறிப்பிடத்தக்க விருட்சம், அதனுடைய மகிமையிலும், அழகிலும், பூமியின் முதல் ஆதிக்கத்தை மனித இனத்திற்கு அதன் பிரதிநிதியாகவும் தலைவராகவும் இருந்த ஆதாமை அடையாளப்படுத்துகிறது. இவரை பார்த்து, "பின்பு தேவன் அவர்களை நோக்கி: நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின் மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார்." (ஆதியாகமம் 1:28) என்று கூறினார். மனிதனுக்கு ஆதியில் கொடுக்கப்பட்ட மகிமையும், அவனுக்குள் இருந்த வல்லமையும் உண்மையிலேயே மிகவும் உயர்ந்திருந்தது. மேலும் ஆசீர்வதிக்கவும், உணவளிக்கவும், ஒவ்வொரு உயிரினத்தையும் பாதுகாக்கவும் தங்கவைக்கவும் பூமியெங்கும் அந்த வல்லமை வியாபித்திருந்தது. ஆனால் பாவம் பிரவேசித்த போதோ, அந்த விருட்சத்தை வெட்டும் படி கட்டளை வந்தது, மனிதனின் மகிமையும் அழகும் வல்லமையும் பறிக்கப்பட்டது. மேலும் கீழான சிருஷ்டிகள் அனைத்திற்கும் அவருடைய பராமரிப்பின் கீழ் தங்குமிடம், முன்னேற்றம் மற்றும் ஆசீர்வாதம் கிடைக்கவில்லை. மரணம் அந்த பெரிய விருட்சத்தை வெட்டி, அதன் பழங்களையும் பசுமையையும் சிதறடித்தது. அதன் கீழுள்ள சிருஷ்டிகளை எஜமானன் இல்லாமலும், உபகாரி இல்லாமலும் விட்டுச்சென்றது." (11 தொகுப்பு 94) இந்த விருட்சம் மனிதனுடைய ஆதிக்கத்தையும் குறிக்கிறது. நேபுகாத்நேச்சாரின் இராஜ்யத்தின் விவரங்கள் ஆதாமுடன் துல்லியமாக ஒத்திருக்கிறது. "அதின் இலைகள் நேர்த்தியும், அதின் கனி மிகுதியுமாயிருந்தது; எல்லா ஜீவனுக்கும் அதில் ஆகாரம் உண்டாயிருந்தது; அதின்கீழே வெளியின் மிருகங்கள் தங்கினது, அதின் கொப்புகளில் ஆகாயத்துப் பட்சிகள் தாபரித்தது." (தானியேல் 4:21) தேவனுக்கு கீழ்ப்படியத் தவறியதினால், ஆதாமும், ஏவாளும் ஏதேன் தோட்டத்தையும் அதன் தெய்வீக பாதுகாப்பையும் விட்டு வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. நேபுகாத்நேச்சார் "ஏழு காலங்கள்" அவருக்கு கொடுக்கப்பட்ட தண்டனையை சகித்தார். மனுக்குலம் 7,000 ஆண்டுகளுக்கு பாவத்தின் விளைவுகளை அனுபவிக்கும். இராஜா மாட்டை போல புல்லை சாப்பிட வேண்டும், அவரது உடல் பனியில்நனைய வேண்டும். அவருடைய தலைமயிர் கழுகுகளுடைய இறகுகளைப் போலவும் அவருடைய நகங்கள் பட்சிகளுடைய நகங்களைப் போலவும் வளர்ந்தது. (தானியேல் 4:33) இந்த மிருகத்தின் நிலை மனித குடும்பத்தின் விழுந்துபோன நிலையை மிக பொருத்தமாகக் குறிப்பிடுகிறது. இந்த இரண்டு நிகழ்வுகளிலும் குறிக்கோள் ஒன்றுதான். "மனுஷரினின்று தள்ளப்படுவாய்; வெளியின் மிருகங்களோடே சஞ்சரிப்பாய்;

மாடுகளைப் போல் புல்லை மேய்வாய்; இப்படியே உன்னதமானவர் மனுஷருடைய ராஜ்யத்தில் ஆளுகைசெய்து, தமக்குச் சித்தமாயிருக்கிறவனுக்கு அதைக் கொடுக்கிறாரென்பதை நீ அறிந்துகொள்ளுமட்டும் ஏழு காலங்கள் உன்மேல் கடந்துபோகும் என்று உனக்குச் சொல்லப்படுகிறது என்று விளம்பினது." (தானியேல் 4:32)

### வாக்குறுதி அளிக்கப்பட்ட மறுசீரமைப்பு

பெருமையும் பேராசையும் மனிதனின் இருதயத்தை கடினப்படுத்தியது. ஆனால் விருட்சத்தின் அடிபாகம் விடப்பட்டது போல, விஷயங்களும் மாறும் என்று அவர் வாக்குறுதி அளித்துள்ளார். தாமிரம் மற்றும் இரும்புமான விலங்கு அகற்றப்பட்டவுடன், அந்த அடிமரம் மீண்டும் வளரும். இதற்கான இணையை பேதுருவின் வார்த்தைகளில் நாம் காணலாம்." (அப்போஸ்தலர் 3:20, 21) அதன் அடிமரம் முழு மகிமைக்கு மீண்டும் வளர்ந்ததைப் போலவே, நம் உலகமும் அதன் ஆதிகால முழுமையான பரிபூரணத்திற்கு சீரமைக்கப்படும். அழகையும் மீட்டெடுக்கும். மனுக்குலத்தின் அனுபவத்திற்கு இந்த இணை மிக பொருத்தமானது. தேவனுடைய ஞானத்தில், தீமையை அனுமதிப்பதன் இறுதி நன்மைகளை அவர் அறிந்திருந்தார். அதற்குபின், நம்முடைய இனத்தின் மறுசீரமைப்பதே, அவருடைய திட்டத்தின் அடுத்த கட்டம். இந்த குறிப்பிடத்தக்க அனுபவம் அவர்களின் விலங்கு போன்ற நிலையின் நினைவுடன் ஒன்றிணைந்து, நேபுகாத்நேச்சாரைப் போலவே மனுக்குலத்திற்கும் அதே நன்மையை கொடுக்கும்.

நேபுகாத்நேச்சாரின் சோதனையின் எதிர்விளைவு ஒரு நாள் மனுக்குலம் அடையபோகும் இருதய மாற்றத்தின் அனுபவத்தை அடையாளப்படுத்தும். "அந்த நாட்கள் சென்றபின்பு, நேபுகாத்நேச்சாராகிய நான் என் கண்களை வானத்துக்கு ஏறெடுத்தேன்; என் புத்தி எனக்குத் திரும்பிவந்தது; அப்பொழுது நான் உன்னதமானவரை ஸ்தோத்திரித்து, என்றென்றைக்கும் ஜீவித்திருக்கிறவரைப் புகழ்ந்து மகிமைப்படுத்தினேன்; அவருடைய கர்த்தத்துவமே நித்திய கர்த்தத்துவம், அவருடைய ராஜ்யமே தலைமுறை தலைமுறையாக நிற்கும். பூமியின் குடிகள் எல்லாம் ஒன்றுமில்லை என்று எண்ணப்படுகிறார்கள்; அவர் தமது சித்தத்தின்படியே வானத்தின் சேனையையும் பூமியின் குடிகளையும் நடத்துகிறார்; அவருடைய கையைத் தடுத்து, அவரை நோக்கி: என்ன செய்கிறீரென்று சொல்லத்தக்கவன் ஒருவனும் இல்லை என்றேன்." (தானியேல் 4:34-35) என்று அவர் கூறினார். நீண்ட காலத்திற்கு முன்பு இந்த புறஜாதி இராஜா உணர்ந்தது போலவே, மனுக்குலமும் தன்னை ஒரு பொருட்டாக எண்ண தகுதியற்ற நிலையை உணர்ந்து பரலோகப் பிதாவை மகிமைப்படுத்தும்.

மறுசீரமைப்பின் வேலை, செழிப்பையும், தேவனுடைய ஆசீர்வாதங்களையும் தரும் என்பதை மனுக்குலம் புரிந்துகொண்ட பிறகு இந்த மாற்றம் ஏற்படும். தேவனுடைய ஆவி மாம்சமான யாவர் மேலும் ஊற்றப்படும். அது இவர்களின் புரிந்துகொள்ளுதலுக்கு உதவியளிக்கும். (யோயேல் 2:28,29)நம்முடைய ஆதி பெற்றோரைப் போல் இல்லாமல், மனித இனம் சிருஷ்டித்தவரை நம்புவதற்கு கற்றுக்கொள்ளும், மேலும் அவருடைய சட்டங்கள், இந்த உலகத்தை மேம்படுத்தும் தேவையான நீதியின் தரத்தை வழங்கும் என்பதையும் அவர்கள் அறிந்து கொள்வார்கள். முதலில் ஏவாள் தேடிய ஞானம் மெய்யாகும். நன்மைக்கும் தீமைக்கும் இடையிலான உண்மையான வித்தியாசத்தை ஜனங்கள் அறிந்துகொள்வார்கள், இறுதியில் அவர்கள் நித்திய ஜீவனைப் பெற ஆயத்தமாக இருப்பார்கள்.

"ஆகையால் ராஜாவே, நான் சொல்லும் ஆலோசனையை நீர் அங்கீகரித்துக்கொண்டு நீதியைச் செய்து உமது பாவங்களையும், சிறுமையான வர்களுக்கு இரங்கி உமது அக்கிரமங்களையும் அகற்றிவிடும்; அப்பொழுது உம்முடைய வாழ்வு நீடித்திருக்கலாம் என்றான்." (தானியேல் 4:27) என்று நேபுகாத்நேச்சருக்கு தானியேல் அளித்த அறிவுரைகள் உலக அளவில் உணரப்படும்.

எப்படிப்பட்ட ஒரு எதிர்காலம்!

# யோசேப்பின் ஆசீர்வாதமான வேலை



"ஆனாலும் உங்களுக்கு இரங்கும்படி கர்த்தர் காத்திருப்பார், உங்கள்மேல் மனதுருகும்படி எழுந்திருப்பார்; கர்த்தர் நீதிசெய்கிற தேவன்; அவருக்குக் காத்திருக்கிற அனைவரும் பாக்கியவான்கள்." (ஏசாயா *30:18*)

யோசேப்பின் வாழ்க்கையில் ஏற்பட்ட அனுபவங்கள், நம்முடைய கர்த்தராகிய இயேசுவின் வாழ்க்கையில் சித்தரிக்கப்படுகிறது என்று வேத மாணவர்கள் நீண்ட காலமாக நம்புகிறார்கள். பல தனிநபர்களையும், நிகழ்வுகளையும் பயன்படுத்தி, தேவன் தமது அற்புதமான இரட்சிப்பின் திட்டத்தை எவ்வளவு அழகாக வெளிப்படுத்துகிறார். "தேவவசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும் ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ளவர்களாகும்படிக்கு, முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது."(ரோமர்15:4) நம்முடைய கர்த்தருடைய முதல் வருகைக்கு குறிப்பிடத்தக்க ஒற்றுமைகள் மட்டும் அல்ல, யோசேப்பு தனது சகோதரர்களையும் எகிப்து ஜனங்ளையும் ஆசீர்வதிப்பதற்கான அவருடைய பணி, தேவனுடைய இராஜ்யத்தின் கிருபைகளுக்கும் நன்மைகளுக்கும் ஒரு பிரகாசமான எடுத்துக்காட்டாக நிற்கிறது.

**பின்னணி**

நான்கு வெவ்வேறு தாய்மார்களுக்கு பிறந்த யாக்கோபின் பன்னிரெண்டு குமாரர்களில் யோசேப்பு ஒருவராக இருந்தார். யாக்கோபின் முதல் மனைவியான லேயாள், ஆறு குமாரர்களை பெற்றாள்: ரூபன், சிமியோன், லேவி, யூதா இசக்கார் மற்றும் செபுலோன். லேயாளின் வேலைக்காரி சில்பாள் காத் மற்றும் ஆசேரை பெற்றாள். ராகேலின் வேலைக்காரி பில்காள், தாண் மற்றும் நப்தலியை பெற்றாள். யாக்கோபால் உண்மையாக நேசிக்கப்பட்ட இரண்டாவது மனைவி ராகேல், யோசப்பையும் பென்யமீனையும் பெற்றாள். பெற்றோரின் இந்த திசைத் திரும்புதல், சகோதரர்களிடையே மோதல்களுக்கும் பொறாமைகளுக்கும் வழிவகுத்தது.

யாக்கோபு யோசேப்பை மிகவும் நேசித்தார், அவருடைய மற்ற எல்லா குமாரர்களை காட்டிலும் அதிகமாக நேசித்தார். (ஆதியாகமம் 37:3) அவர் தனது அன்பு மனைவி ராகேலின் முதல் குமாரன். யாக்கோபு அவருக்கு விசேஷித்த "பல வர்ண அங்கியை" உடுத்தி, யோசேப்பின் மேல் அவரது அன்பை வெளிப்படுத்தினார். ஒரு நாள் யோசேப்பு அவர்களை ஆளுவார் என்று தேவனால் உணர்த்தப்பட்ட, யோசேப்பின் தீர்க்கதரிசனமான சொப்பனங்கள் குறிப்பிட்டது. யோசேப்பு இந்த சொப்பனங்களை தனது சகோதரர்களுக்கு வெளிப்படுத்திய பின், அவர்களின் கசப்பும் பொறாமையும் செயலில் வெளிப்பட்டது. அவர்கள் அவரைக் கொலை செய்ய சதி செய்தனர், ஆனால் வாய்ப்பு கிடைத்தவுடன் அதற்கு பதிலாக அவரை அடிமையாக விற்றுப் போட்டார்கள். அவருடைய பல வர்ண அங்கியை ஆட்டின் இரத்தத்தில் தொய்த்து, திரும்பி போய், யோசேப்பு மரித்துவிட்டார் என்று அவர்களது தந்தையிடம் ஆதாரம் காட்டினார்கள். எதிர்ப்பார்த்தபடி, கற்பனைக்கு எட்டாத இந்த இழப்பை குறித்து யாக்கோபு மிகவும் துக்கித்தார்.

இந்த ஆரம்ப கால அனுபவங்கள் இயேசுவின் அனுபவங்களுக்கு ஒரு தெளிவான இணையைக் கொண்டுள்ளது. இவரும் பிதாவினால் அதிகமாக நேசிக்கப்பட்டார். (மத்தேயு 3:17) லோகோஸாக இருந்த போது, அவர் நித்தமும் தேவனுடைய மனமகிழ்ச்சியாக இருந்தார். (நீதிமொழிகள் 8:30)அவர் அவர்களை ஆட்சி செய்வார் என்ற கருத்தை யோசேப்பின் சகோதரர்கள் நிராகரித்தது போலவே, "ஒரு நாள் அவருடைய மகிமையின் சிங்காசனத்தில் அமர்ந்து... இஸ்ரயேலின் பன்னிரண்டு கோத்திரங்களை நியாயந்தீப்பார்" (மத்தேயு 19:28) என்ற தனது கூற்றை இஸ்ரயேலர்கள் நிராகரித்தார்கள். இந்த புறக்கணிப்பை இயேசு பின்வருமாறு விவரித்தார்." (யோவான் 15:24)

யோசேப்பின் மூத்த சகோதரர்கள் அவரைக் கொல்ல சதி செய்ததுபோல, (ஆதியாகமம் 37:18) பிரதான ஆசாரியர்களும் மூப்பர்களும் இயேசுவை கொல்ல வகை தேடின சதிகாரார்களாக இருந்தார்கள். (மத்தேயு 27:1) யாக்கோபிடமிருந்து யோசேப்பு பெற்ற பலவர்ண அங்கி, இயேசுவின் பலியின் உடன்படிக்கையை அருமையாக சித்தரிக்கிறது. மேலும் அதன் பல வர்ணங்கள் அதனுடன் தொடர்புடைய வாக்குத்தத்தங்களை குறிக்கக்கூடியதாக உள்ளது. யோசேப்பின் அங்கியில் தெளிக்கப்பட்ட அந்த

இரத்தம், ஒரு பலி ஆட்டை போல் உள்ள இயேசுவின் மரணத்தையும், அவருடைய பலியின் உடன்படிக்கையின் நிறைவேற்றத்தையும் சித்தரிக்கிறது. வெளிப்படையாக கொலைச் செய்வதற்கு பதிலாக, அவர்களை கடந்து செல்லும் வர்த்தகர்களிடம் விற்கும்படி யூதா பரிந்துரைத்தார். (ஆதியாகமம் 37:26,27) எல்லாவற்றிற்கும் மேலாக யோசேப்பு அவர்களின் சகோதரர். இது இயேசுவை நேரடியாக மரணத்திற்கு உட்படுத்தாமல், பிலாத்தின் வழியாக இந்த தீமையை செய்ய தூண்டின வேதபாரகர் மற்றும் பரிசேயரின் செயலுக்கு ஒத்திருக்கிறது. யோசேப்பு 20 வெள்ளி காசுக்கு விற்கப்பட்டார். (ஆதியாகமம் 37:28) 20 வயதிற்குட்பட்ட ஒரு இளம் அடிமையின் விலை இதுவே. (யோசேப்பின் விஷயத்தில் நடந்தது போல) இயேசு மனமுவந்து,"ஒரு அடிமையின் ரூபத்தை எடுத்துக் கொண்டார்." (பிலிப்பியர் 2:7) அதேபோல வயது நிரம்பிய அடிமையின் விலையாகிய 30 வெள்ளி காசுக்கு அவர் காட்டிக்கொடுக்கப்பட்டார். (சகரியா 11:12, மத்தேயு 26:15) பரிவர்த்தனைகளை பணம் முத்திரித்திருந்தாலும், ஒவ்வொரு விஷயத்திலும் பெருமையும் பொறாமையும் உண்மையான நோக்கங்களாக இருந்தது. {நவீன உறுதிப்படுத்தல் உள்ளது. "எகிப்துக்கு விற்கப்பட்ட யோசேப்பின் கதை குறிப்பாக இரண்டாம் ஆயிரவருடத்தில்.... 12வது, 13வது நூற்றாண்டின் பின் பகுதியில் மற்றும் ஹைக்சோஸ் வம்சத்தின் கால பகுதியிலும் எளிதாக பொருந்துகிறது. அவரது சகோதரர்கள் தங்கள் இளைய சகோதரருக்கு 20 வெள்ளி காசுகளை பெற்றார்கள். (ஆதியாகமம் 37:28)....சுமார் 18ம் நூற்றாண்டில் சரியான விலையாகும். இது ஹம்முராபியின் பிரமாணத்திலும் (ஒரு மினாவின் மூன்றில் ஒரு பங்காக சொல்லப்படுகிறது), மாரியில் உண்மையான நிஜ வாழ்க்கையின் பரிவர்த்தனைகளிலும் (துல்லியமாக) மற்றும் பிற பாபிலோனிய ஆவணங்களிலும் (15 முதல் 30 ஷெக்கல் வரம்பிற்குள், சராசரியாக 22 ஜெக்கல்கள்) இதுவே சராசரியான விலையாகும். இந்த காலக் கட்டத்திற்கு முன், அடிமைகள் மலிவானவர்களாக இருந்தார்கள், அதன் பின்னர் பணவீக்கம் அதன் வேலையைச் செய்தபடியே அவர்களின் விலை சீராக உயர்ந்தது.} (Kenneth Kitchen, *On the Reliability of the Old Testament*, 2003, page 344, Figure 43).

## துன்பத்திலும் கூட செழிப்பு

"யோசேப்பு எகிப்துக்குக் கொண்டுபோகப் பட்டான். பார்வோனுடைய பிரதானியும் தலையாரிகளுக்கு அதிபதியுமாகிய போத்திபார் என்னும் எகிப்து தேசத்தான் அவனை அவ்விடத்திற்குக் கொண்டுவந்த இஸ்மவேலரிடத்தில் விலைக்கு வாங்கினான். கர்த்தர் யோசேப்போடே இருந்தார், அவன் காரியசித்தியுள்ளவ னானான்; அவன் எகிப்தியனாகிய தன் எஜமானுடைய வீட்டிலே இருந்தான். கர்த்தர் அவனோடே இருக்கிறார் என்றும், அவன் செய்கிற யாவையும் கர்த்தர் வாய்க்கப்பண்ணுகிறார் என்றும், அவன் எஜமான் கண்டு; "(ஆதியாகமம் 39:1-3)

தேவன் யோசேப்பை வழிநடத்தினார், அவர் செழிப்பாக இருப்பதற்கு உதவினார். யோசேப்பும் மிக நம்பகமானவரும், திறமையானவருமாக இருந்தார். காலப்போக்கில் போத்திபார் தன்னிடம் இருந்த அனைத்தையும் கண்காணிப்பவராக ஏற்படுத்தினார். யோசேப்பின் நிமித்தமாக தேவன் போத்திபாரை ஆசீர்வதித்தார். அவருடைய பயிர்களும் கால்நடைகளும் செழித்து வளர்ந்தன, யோசேப்பு போத்திபாருக்கு உண்மையுள்ளவராக இருந்தார்.

பரலோகத் தகப்பன் இயேசு செய்த எல்லாவற்றிலும் எவ்வாறு ஆசீர்வதித்தார் என்பதை இது எவ்வளவு அழகாக விளக்குகிறது. "கர்த்தரோ அவரை நொறுக்கச் சித்தமாகி, அவரைப் பாடுகளுக்குட் படுத்தினார்; அவருடைய ஆத்துமா தன்னைக் குற்ற நிவாரணபலியாக ஒப்புக்கொடுக்கும்போது, அவர் தமது சந்ததியைக் கண்டு, நீடித்தநாளாயிருப்பார்; கர்த்தருக்குச் சித்தமானது அவர் கையினால் வாய்க்கும்." (ஏசாயா 53:10) என்று ஏசாயா எழுதினார். யோசேப்பு தனது எஜமானரின் எல்லா பொருட்களின் மேலும் நம்பிக்கைக்கு உரியவராக இருந்தது போல இயேசுவும் சகலத்திலும் நம்பிக்கைக்கு பாத்திரவானாக இருந்தார் என்று கூறப்படுகிறது. "பிதாவானவர் குமாரனில் அன்பாயிருந்து எல்லாவற்றையும் அவர் கையில் ஒப்புக்கொடுத்திருக்கிறார். "(யோவான் 3:35)

இச்சையோடு யோசேப்பை பின் தொடர்ந்த போத்திபாரின் மனைவியின் மூலம் வந்த அவருடைய உண்மைக்கான சோதனையை யோசேப்பு சகிக்க வேண்டியதாக இருந்தது. ஆயினும் யோசேப்பு பாவம் செய்யவில்லை, தேவன் மீது அவருக்கு இருந்த உயர்ந்த அர்ப்பணிப்பை அவர் உணர்ந்திருந்தார். (ஆதியாகமம் 39:9) இந்த சூழ்நிலைகள் யோசேப்புக்கு ஏமாற்றம் அளித்திருந்தாலும், பாதகமான சூழ்நிலையில் சோதிக்கப்பட்டாலும், அவைகள் மிகவும் லாபகரமாகவும்,

அவர் முன்னதாக பெற்றிருந்த உன்னதமான குணங்களின் தன்மையை இன்னும் அதிகப்படுத்தவும் உதவியது. "நம்முடைய பலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார்." (எபிரெயர் 4:15) என்று நாம் இயேசுவைப் பற்றி நினைப்பூட்டப்படுகிறோம். யோசேப்பு பொய்யாக குற்றம் சாட்டப்பட்டு சிறையில் தள்ளப்பட்டாலும், அநேக பொய்யான குற்றசாட்டுகளை இயேசுவின் மேல் சுமத்தினாலும் (மாற்கு14:56) யோசேப்பு மற்றும் இயேசுவுக்கு இந்த அனுபவங்கள் எதுவும் வீணாக போகவில்லை.

## சிறை அனுபவங்கள்

சிறையில் இருந்தபோது, தேவன் அவரோடு இருந்தார் என்பதை குறிப்பிடும்படியாக, யோசேப்பு மீண்டும் ஒரு முன் மாதிரியான தன்மையை வெளிப்படுத்தினார். காலப்போக்கில், சிறைச்சாலையின் மேற்பார்வையாளர் யோசேப்பை நம்பி, சிறையின் அனைத்து வேலைகளுக்கும் அவரைப் பொறுப்பாளியாக ஏற்படுத்தினார். ஒருவேளை யோசேப்பு சிறையில் இருந்த காலத்தில் அரசாங்கத்தின் செயல்பாடுகளைக் கற்று அறிந்திருக்க வேண்டும். மீண்டுமாக, தேவன் அவருடைய கைகளின் வேலைகளை ஆசீர்வதித்தார். இந்த நேரத்தில், பார்வோனுக்கு எதிராக ஏதோ ஒரு விதத்தில் குற்றம் புரிந்ததற்காக தலைமை பானப்பாத்திரக்காரனும், தலைமை சுயம்பாகியும் சிறையில் தள்ளப்பட்டார்கள். (ஆதியாகமம் 40:1) ஒருமுறை சிறையில் இருந்த அவர்கள் இருவரும் கனவு கண்டார்கள். அதன் விளக்கத்தையும் தேடினார்கள்.

பானப்பாத்திரக்காரன் கண்ட கனவை, யோசேப்பிடம் விவரித்தார்." அப்பொழுது பானபாத்திரக்காரரின் தலைவன் யோசேப்பை நோக்கி: என் சொப்பனத்திலே ஒரு திராட்சச்செடி எனக்கு முன்பாக இருக்கக்கண்டேன். அந்தத் திராட்சச்செடியிலே மூன்று கொடிகள் இருந்தது; அது துளிர்க்கிறதாயிருந்தது; அதில் பூக்கள் மலர்ந்திருந்தது; அதின் குலைகள் பழுத்த பழங்களாயிருந்தது."(ஆதியாகமம் 40:9-11) விளக்கம் அளித்ததற்காக யோசேப்பு தேவனுக்கு நன்றி செலுத்திய பிறகு, பானப்பாத்திரக்காரனுடைய நிலை மூன்று நாட்களுக்குப் பின் மீண்டும் திரும்ப கொடுக்கப்படும் என்று யோசேப்பு விளக்கினார்.

நன்மையான விளக்கத்தால் ஊக்குவிக்கப்பட்ட சுயம்பாகி தன்னுடைய கனவை யோசேப்பிடம் கூறினான். "அர்த்தம் நன்றாயிருக்கிறது என்று சுயம்பாகிகளின் தலைவன் கண்டு, யோசேப்பை நோக்கி: நானும் என் சொப்பனத்தில் மூன்று வெள்ளைக்கூடைகள் என் தலையின் மேல் இருக்கக்கண்டேன். மேற்கூடையிலே பார்வோனுக்காகச் சமைக்கப்பட்ட சகலவித பலகாரங்களிலும் கொஞ்சம் கொஞ்சம் இருந்தது; என் தலையின்மேல் கூடையில் இருந்தவைகளைப் பறவைகள் வந்து பட்சித்தது என்றான்." (ஆதியாகமம் 40:16,17) மூன்று நாட்களுக்குப் பிறகு சுயம்பாகி தூக்கிலிடப்படுவார் என்பதை யோசேப்பு விளக்கினார்.

எதிர்கால நிகழ்வுகளை கணிக்க சில நேரங்களில் தேவன் கனவுகளை பயன்படுத்தியதால், இந்த கனவுகள் நம் ஆண்டவரின் ஜீவன் மற்றும் மரணத்தைப் பற்றிய தீர்க்கதரிசனங்களுடன் தொடர்புப்படுத்தலாம். முதலாம் நினைவூக்கூருதலின் போது இயேசு அறிமுகப்படுத்திய அடையாளங்கள் நம் சிந்தையில் நினைப்பூட்டப்படுகிறது: அவருடைய சரீரம், அப்பமாகவும், அவருடைய இரத்தம் திராட்சை ரசமாகவும் அடையாளப்படுத்தப்பட்டது. பானப்பாத்திரக்காரன் மற்றும் சுயம்பாகி ஆகிய இவ்விருவரும், நினைவுக் கூருதலின் இரண்டு அடையாளங்களை நமக்கு நினைப்பூட்டுகிறார்கள். "நானே வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம்; இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான்; நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே என்றார்." (யோவான் 6:51) என்று இயேசு கூறினார். இயேசு தனது மாம்ச ஜீவனை மீட்கும் விலையாக இழந்தது, அப்பத்துடன் தொடர்புடைய பார்வோனின் சுயம்பாகி கொல்லப்பட்டதில் அடையாளப்படுத்துகிறது.

பானப்பாத்திரக்காரன் ஜீவனோடு இருப்பான் என்று யோசேப்பு அவரது கனவுக்கு விளக்கம் அளித்தார். திராட்சை ரசம் ஜீவனோடு தொடர்புடையதாக, நினைவுக்கூருதலின் திராட்சை ரசத்திற்கு ஒத்திருக்கிறது. இயேசுவின் இரத்தமாகிய அவருடைய ஜீவன், திராட்சை ரசத்தை அடையாளப்படுத்துகிறது. "ஏனெனில் மாம்சத்தின் ஜீவன் அதன் இரத்தத்தில் உள்ளது" (லேவியராகமம் 17:11) சுயம்பாகியின் மரணம் மற்றும் பானப்பாத்திரக்காரனின் ஜீவன், நினைவுக்கூருதலின் அடையாளங்களாகிய மாம்சத்திற்கும் (மீட்கும் பொருள்) இரத்தத்திற்கும் (பாவநிவாரணம்) சமமாக உள்ளது. மீட்கும் பொருளுக்கு மரணம் தேவைப்பட்டது, அதை திரும்ப பெற முடியாது. ஆனால் அவருக்கு உயிர்த்தெழுதலை வழங்கும், பாவநிரவாண பலியில் இயேசுவின் தனிப்பட்ட பலியின் உடன்படிக்கை அடங்கியுள்ளது.

இந்த அனுபவத்திற்குப் பிறகு, யோசேப்பு இன்னும் இரண்டு வருடங்கள் சிறையில் இருந்தார். ஆனால் பார்வோன் தாமே இரண்டு கனவுகளை கண்டபோது, யோசேப்பின் வாழ்க்கையில் ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டது. முன்பு சுயம்பாகி மற்றும் பானப்பாத்திரக்கானை போலவே, இராஜாவும் அவர் கண்ட கனவுக்கு விளக்கம் தேடினார். யோசேப்பு தனது கனவுக்கு சரியான விளக்கத்தை கொடுத்தார் என்று பானப்பாத்திரக்காரன் நினைவுக் கூர்ந்த போது, பார்வோனிடம் யோசேப்பைப் பற்றி கூறினார். தேவன் வெளிப்படுத்தக்கூடிய எந்தவொரு விளக்கத்திற்காகவும் யோசேப்பு மீண்டும் தேவனுக்கு நன்றிகளை ஏறெடுத்தார். பார்வோனின் இரண்டு கனவுகளும் தீர்க்கதரிசனம் என்று நிரூபிக்கப்பட்டது. செழுமையான ஏழு ஆண்டுகளை தொடர்ந்து, பஞ்சமான ஏழு ஆண்டுகள் வரும் என்ற இரண்டு காரியங்களும், தேவனால் கட்டளையிடப்பட்டது. வளமான ஆண்டுகளின் வெள்ளாண்மையை சேகரித்து, வரவிருக்கும் பஞ்சத்திற்கு ஆயத்தமாகும்படிக்கு யோசேப்பு இராஜாவிடம் ஆலோசனைக்கூறினார். யோசேப்பின் ஞானம் மற்றும் அவர் தேவனோடு கொண்டிருந்த உறவினால், அவர் கொடுத்த கட்டளையினால் மிகவும் ஈர்க்கப்பட்ட பார்வோன், தனக்கு அடுத்தபடியாக எகிப்தின் ஆட்சியாளராக யோசேப்பை உயர்த்தினார். தேவனுக்கு அடுத்தபடியாக, அவருடைய எல்லா சிருஷ்டிப்புகளுக்கும் ஆட்சியாளராக இருப்பதற்கு, மரண சிறைச்சாலையிலிருந்து மகிமைக்கு எழுப்பப்பட்ட இயேசுவைப் பற்றிய எவ்வளவு அற்புதமான ஒரு முற்காட்சி.

**உயர்த்தப்பட்டு, ஒரு புதிய நாமம் சூட்டப்பட்டது**

"நீ என் அரமனைக்கு அதிகாரியாயிருப்பாய்; உன் வாக்கின்படியே என் ஜனங்கள் எல்லாரும் அடங்கி நடக்கக்கடவர்கள்; சிங்காசனத்தில் மாத்திரம் உன்னிலும் நான் பெரியவனாய் இருப்பேன் என்றான். பின்னும் பார்வோன் யோசேப்பை நோக்கி: பார், எகிப்துதேசம் முழுமைக்கும் உன்னை அதிகாரியாக்கினேன் என்று சொல்லி, பார்வோன் தன் கையில் போட்டிருந்த தன் முத்திரை மோதிரத்தைக் கழற்றி, அதை யோசேப்பின் கையிலே போட்டு, மெல்லிய வஸ்திரங்களை அவனுக்கு உடுத்தி, பொன் சரப்பணியை அவன் கழுத்திலே தரித்து,தன்னுடைய இரண்டாம் இரதத்தின் மேல் அவனை ஏற்றி, தெண்டனிட்டுப் பணியுங்கள் என்று அவனுக்கு முன்பாகக் கூறுவித்து, எகிப்துதேசம் முழுமைக்கும் அவனை அதிகாரியாக்கினான்" (ஆதியாகமம் 41:40-43)

பேரரசின் புதிய ஆளுநரையோ அல்லது பிரதமரையோ ஜனங்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டிய நேரம் வந்தபோது, அவருடைய அந்தஸ்தைக் குறிக்கும்படி, முதலில் அவருக்கு பொருத்தமான ஆடைகளை வழங்கினார், அடுத்து, இரண்டாவதாக, அவருடைய இரதத்தில் ஏற்றி, மூன்றாவதாக, அவர் இராஜாவின் பிரதிநிதியாக அறிவிக்கப்படுகிறதற்கும் மற்றும் அவர் மக்கள் முன் அணிவகுப்பில் பறையறைவோர்களால் உடன் அழைத்துச் செல்லப்பட வேண்டும், அவர்கள் அவரது பதவி அந்தஸ்தினை அறிவித்து, மக்கள் யாவரும் முழங்காலில் குனிந்து, அவரை இராஜாவின் பிரதிநிதியாக ஒப்புக்கொள்ளுமாறு மக்களை அழைக்கவேண்டும். இது நம்முடைய ஆண்டவராகிய இயேசுவைப் பற்றியும் அவருடைய சோதனைகள் முடிந்தபின் அவர் மேலான நிலைக்கு உயர்த்தப்பட்டதையும் குறித்து அப்போஸ்தலரின் வார்த்தைகள் நினைபூட்டப்படுகிறது. "ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும்," (பிலிப்பியர் 2:9,10) (R3979). பார்வோன் கொடுத்த பொருட்கள் மிகவும் முக்கியமானவைகள். மோதிரம் இராஜாவின் அதிகாரத்தை குறிக்கிறது, இதை இயேசு இப்போது பெற்றிருக்கிறார். மெல்லிய வஸ்திரம் அவரது நீதியையும், அதிகாரத்தின் நீதியான பயன்பாட்டையும் குறிக்கிறது. பொன் சரப்பணி அவருடைய அழியாமையை விவரிக்கிறது.

"மேலும், பார்வோன் யோசேப்புக்கு சாப்நாத்பன்னேயா என்கிற பெயரையிட்டு; ஓன்பட்டணத்து ஆசாரியனாகிய போத்திபிராவின் குமாரத்தியாகிய ஆஸ்நாத்தை அவனுக்கு மனைவியாகக் கொடுத்தான். யோசேப்பு எகிப்துதேசத்தைச் சுற்றிப்பார்க்கும் படி புறப்பட்டான்." (ஆதியாகமம் 41:45)

இப்போது யோசேப்பு எகிப்தில் பணி புரிவதினால், பார்வோன் இராஜா அவருக்கு எகிப்திய பெயரை சூட்டியது எவ்வளவு பொருத்தமாக உள்ளது. "ஜீவ அப்பத்தினால், மரணத்திலிருந்து விடுதலை" என்பதே சாப்நாத்பன்னேயா என்பதற்கான அர்த்தம் என்று சகோ. ரசல் கூறுகிறார். (R3979) ..ஜனங்களை பட்டினியிலிருந்து காப்பாற்ற, யோசேப்பு செய்த வேலைக்கு இந்த பெயர் சூட்டப்பட்டதாக கருதப்படுகிறது. "நானே வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம்; இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான்; நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே என்றார்." (யோவான் 6:51) என்ற இயேசுவின் வார்த்தைகளை நமக்கு நினைவூட்டுகிறது.

சிலர் "சாப்நாத்பானேயா" என்று மொழிபெயர்த்ததாக ஆடம் கிளார்க் கூறுகிறார். இதற்கு இரகசியங்களை வெளிப்படுத்துபவர் என்றும், புகழ்பெற்ற ஆறுதலின் கருவூலம் என்றும் பொருள். இந்த மொழிபெயர்ப்புகள் சரியானவை என்றால், அவை கிறிஸ்துவின் ஆட்சியைப் பற்றிய மற்றொரு ஆழமான அறிவை வழங்குகிறது. நற்செய்தி ஒரு இரகசியம் என்று குறிப்பிடப்படுகிறது. (எபேசியர் 3:3,4,9) தொடங்கப்பட்டவர்களுக்கு மட்டுமே தெரிந்த ஒன்று. ஆனால் அந்நாளிலே தேவனுடைய திட்டத்தின் இரகசியம் அனைவருக்கும் தெரிந்திருக்கும். துக்கித்தவர்களையும், இதுவரை அனுபவித்திராத ஓர் சிறந்த வாழ்க்கையை நம்பிக்கொண்டிருப்பவர்களையும், தேவ இராஜ்யம் ஆறுதல் படுத்தும். "இஸ்ரவேலின் தேவனும் இரட்சகருமாகிய நீர் மெய்யாகவே உம்மை மறைத்துக்கொண்டிருக்கிற தேவனாயிருக்கிறீர்." (ஏசாயா 45:15) என்று ஏசாயா தேவனைப் பற்றி விவரிக்கிறார். ஆனால் நிஜமான யோசேப்பு "இரகசியங்களை வெளிப்படுத்துபவராக" ஆகும்போது, தேவனுடைய குணங்கள் அனைவராலும் அறியப்படும். மேலும் தேவனுடைய பிரதிநிதியாக செயல்படும் அவருடைய குமாரனின் வேலைகளின் வழியாக அவர் காணப்படுவார்.

அந்த புதிய பெயருக்கு கூடுதலாக, ஆஸ்நாத் என்ற ஒரு எகிப்திய ஸ்திரீயையும் பார்வோன் யோசேப்புக்கு மனைவியாக கொடுத்து அவரை கனப்படுத்தினார். ஆஸ்நாத் என்பதற்கு "சாதகமான" என்று பொருள். யோசேப்புக்கு இவள் ஒரு அந்நிய மணமகளாக இருந்தபோதிலும், இயேசுவுக்கு முதன்மையாக புறஜாதியாரே அவருடைய மணவாட்டியாக இருப்பார்கள் என்பதற்கு இக்காரியம் மிக பொருத்தமாக உள்ளது. அவள் மேல் அவர் கொண்ட விருப்பத்தை சங்கீதக்காரர் விவரிக்கிறார், "அப்பொழுது ராஜா உன் அழகில் பிரியப்படுவார்; அவர் உன் ஆண்டவர், ஆகையால் அவரைப் பணிந்துகொள்." (சங்கீதம் 45:11) புறஜாதியாராக இருக்கும், கிறிஸ்துவின் மணவாட்டி, தேவனை சரியான முறையில் வழிபடுவதை கற்றுக்கொள்வதுபோலஅவள் எகிப்திய ஸ்திரீயாக இருந்தபோதிலும்,யேகோவா தேவனை வழிப்படுவதைக் குறித்து யோசேப்பு அவளுக்கு கற்பித்திருக்கலாம்.

**மென்மையான மனது**

ஆரம்பத்தில் யோசேப்பின் சகோதரர்களை அவர் கடுமையாக நடத்துவதைக் குறித்து சகோதரர் ரசல் கூறுவது என்னவெனில்,"அவரது இருதயம் கடினமானது இல்லை. வரவிருக்கும் வருடங்களில் அவர்களுக்கு நன்மையை தரக்கூடிய ஒரு பாடத்தை அவர் அவர்களுக்குக் கொடுத்தார். மேசியாவின் இராஜ்யம் அதன் ஆசீர்வாதங்களை பொழியும் போது, நிஜமான யோசேப்பாகிய மேசியா, உபத்திரவத்தின் காலத்தில் இதே போல கடுமையாக பேசி, என்ன நடக்குமோ என்று மிகுந்த மன உளைச்சலுக்குள் அவர்களை ஆளாக்குவார். ஆனால் கர்த்தருடைய இருதயமோ, ஏங்கி தவித்துக் கொண்டிருக்கும் சிருஷ்டிகளின் மீது முழுமையான அன்பும் அனுதாபமும் நிறைந்திருக்கும். ஏனெனில் இவர்களது நலனுக்காகவே அவருடைய இராஜ்யம் ஸ்தாபிப்படுவதற்கு, முன்னதாகவே அவருடைய ஜீவனை கொடுத்தார்." (R5225சகரியா 14:2காண்க)

யோசேப்பின் நடவடிக்கைகள் அவருடைய சகோதரர்களை துயரத்தில் ஆழ்த்தியது. ஆனால் பிற்காலத்தில் யோசேப்பிடமிருந்து பெறப்போகும் நன்மைகளுக்கு அடித்தளம் அமைத்தது. இப்படியாக, இஸ்ரயேலரின் சொந்த யோசனைகளும் திட்டங்களும் பயனற்றது என்று அவர்கள் காணும்படியாக, இந்த ஒரு துயரம் அவர்களை இராஜ்யத்திற்கு ஆயத்தப்படுத்தும். யோசேப்பு தனது சகோதரர்களுக்கு அவருடைய இரண்டாம் சந்திப்பில் தன்னை வெளிப்படுத்தினார். அதேபோல இயேசு தனது இரண்டாம் வருகையில் இஸ்ரயேலருக்கு தன்னை வெளிப்படுத்துவார். யோசேப்புக்கு எதிராக அவர்கள் செய்த பாவங்களை ஒப்புக்கொண்ட பின், அவர்கள் பயந்து, அவருடைய உண்மையான அடையாளத்தைக் கண்டுக்கொண்டார்கள். அதேபோல, இயேசு தன்னை வெளிப்படுத்தும்போது, இயேசுவுக்கு எதிராக அவர்கள் செய்த தீமையை இஸ்ரயேல் புரிந்துகொண்டு, "நான் தாவீது குடும்பத்தாரின் மேலும் எருசலேம் குடிகளின்மேலும் கிருபையின் ஆவியையும் விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவேன்; அப்பொழுது அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப்பார்த்து, ஒருவன்தன் ஒரே பேறானவனுக்காகப் புலம்புகிறது போல எனக்காகப் புலம்பி, ஒருவன் தன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிக்கிறதுபோல எனக்காக மனங்கசந்து துக்கிப்பார்கள். ,""அல்லாமலும் தாங்கள் குத்தினவரை நோக்கிப்பார்ப்பார்கள் என்று வேறொரு வேதவாக்கியம் சொல்லுகிறது:" (சகரியா 12:10, யோவான் 19:37)

அவர்களுடைய இருதயங்கள் சோதிக்கப்படும் வரை யோசேப்பு அவர்களுக்கு மன்னிப்பு வழங்கவில்லை.

பேதுரு இயேசுவைப் பற்றி ஆலோசனை சங்கத்தாரிடம் பேசும்போது, இதே ஒழுங்குளையும் ஆசீர்வாதத்தையும் குறித்து விவரித்தார். "இஸ்ரவேலுக்கு மனந்திரும்புதலையும் பாவமன்னிப்பையும் அருளுகிறதற்காக, அவரை அதிபதியாகவும் இரட்சகராகவும் தமது வலதுகரத்தினாலே உயர்த்தினார்." (அப்போஸ்தலர் 5:31) எகிப்தில் யோசேப்பு இருந்த நிலைமையினாலும், எகிப்திற்கு அவர் செய்த காரியங்களினாலும், அவருடைய சகோதரர்கள் பார்வோனின் அளவற்ற இரக்கத்தையும், ஆதரவையும் அனுபவித்தார்கள். இஸ்ரயேலுக்கு இயேசு வெளிப்பட்ட பின்னர், அவர் ஒரு இரக்கமுள்ள மற்றும் தயவுள்ள பிரதான ஆசாரியராக, அவருடைய தன்மை வெளிப்படும். இதற்கு முன், எருசலேமுக்கு எதிராக தேசங்கள் கூடிவருகையில், யாக்கோபின் இக்கட்டுகாலத்தின் போதுஅவர்கள் பெரும் துன்பத்தை அனுபவிப்பார்கள். காரியங்கள் அவநம்பிக்கையாக தோன்றும்போது, சகரியா 14:1-3வில் தீர்க்கதரிசனமாக விவரிக்கப்பட்டுள்ளபடி, தேவன் அவர்களை விடுவிப்பார்.

கூடதலான உணவுக்காக யோசேப்பின் சகோதரர்கள் எகிப்துக்கு திரும்பியபோது, அவர்கள் யோசேப்புடன் உணவு அருந்துவதற்காக அழைக்கப்பட்டார்கள். "தாங்கள் யோசேப்பின் வீட்டுக்குக்கொண்டுபோகப்படுகிறதை அவர்கள் கண்டு பயந்து, முன்னே நம்முடைய சாக்குகளில் இருந்த பணத்தினிமித்தம் நம்மேல் குற்றம் சுமத்தி, நம்மைப் பிடித்துச் சிறைகளாக்கி, நம்முடைய கழுதைகளை எடுத்துக்கொள்ளும்படி நம்மைக் கொண்டுபோகிறார்கள் என்று சொல்லி," (ஆதியாகமம் 43:18) என்று கூறி மீண்டும் யோசேப்பைக் குறித்து அஞ்சினார்கள். அவர்கள் மிகவும் பயந்தார்கள், ஆனால் யோசேப்பின் இருதயமோ அவர்களுக்காக அன்பு நிறைந்ததாக இருந்தது. பலர் இந்த வாய்ப்பை பழிவாங்குவதற்கான ஒரு வாய்ப்பாக பயன்படுத்தி யிருப்பார்கள். ஆனால் யோசேப்பு நேர்மையும் கருணையும் கொண்ட ஒரு மனிதராக இருந்தார். அவர் எந்த கோபத்தையும் காட்டவில்லை. அவர்களை மீண்டும் பார்த்தபோது, அவர் மிகுந்த மகிழ்ச்சியடைந்தார்.

## பென்யமீனுக்கு அளிக்கப்பட்ட விசேஷித்த கவனிப்பு

"அவன் தன் கண்களை ஏறெடுத்து, தன் தாய் பெற்ற குமாரனாகிய தன் சகோதரன் பென்யமீனைக் கண்டு, நீங்கள் எனக்குச் சொன்ன உங்கள் இளைய சகோதரன் இவன்தானா என்று கேட்டு, மகனே, தேவன் உனக்குக் கிருபைசெய்யக்கடவர் என்றான். யோசேப்பின் உள்ளம் தன் சகோதரனுக்காகப் பொங்கினபடியால், அவன் அழுகிறதற்கு இடம் தேடி, துரிதமாய் அறைக்குள்ளே போய், அங்கே அழுதான்." (ஆதியாகமம் 43:29,30) சுமார் 20 ஆண்டுகளுக்குப்பின் முதல் முறையாக யோசேப்பு தனது ஒரே சகோதரனைக் கண்டார். அத்தருணம் அவரை உணர்ச்சிக்கு மூழ்கடித்தது. அவர் தனது உணர்ச்சிகளை மறைக்க, அந்த அறையை விட்டு வெளியேறினார்.

சிமியோனுடன் மீண்டும் இணைந்த பின், யோசேப்பின் சகோதரர்கள் உணவு அருந்துவதற்காக அமர்த்தப்பட்டார்கள். அவர்கள் தங்களது வயதிற்கு ஏற்ப அமர்த்தப்பட்டத்தை கண்டு மீண்டும் வியப்படைந்தார்கள். சரியான வரிசையை அவர் எப்படி அறிந்தார் என்பதை குறித்து அவர்கள் மிகவும் ஆச்சரியப்பட்டார்கள். எபிரெய குடும்பத்தைப் பற்றி அவர்கள் அறிந்திருந்ததை காட்டிலும் யோசேப்பு தெளிவாக அறிந்திருந்தார். அவர்களுக்கு உணவு கொண்டுவரப்பட்டபோது, மற்றவர்களை விட பென்யமீனுக்கு ஐந்து பங்கு அதிகமாக இருந்தது. இவைகளுக்கு என்ன அர்த்தம்? இது ஒரு சுவாரஸ்யமான காட்சியாக இருந்தது. "எகிப்தியர் எபிரெயரோடே சாப்பிடமாட்டார்கள்; அப்படிச் செய்வது எகிப்தியருக்கு அருவருப்பாயிருக்கும்; ஆகையால், அவனுக்குத் தனிப்படவும், அவர்களுக்குத் தனிப்படவும், அவனோடே சாப்பிடுகிற எகிப்தியருக்குத் தனிப்படவும் வைத்தார்கள்." (ஆதியாகமம் 43:32) அனைவரும் ஒரே உணவை சாப்பிட்டுக் கொண்டிருந்தாலும், தனித்தனி மேஜையில் அமர்ந்திருந்தார்கள்.

யோசேப்பு தன் சகோதரர்களை அமர வைக்கும் வரிசையை அறிந்திருந்தார் என்பது, இயேசு தம் ஜனங்களின் வரலாற்றை நன்கு அறிந்தவர் என்பதையும், ஆவிக்குரிய ரீதியில் அவர்களை வளர்ச்சி அடைய செய்வதற்கு ஆழ்ந்த விருப்பம் கொண்டவர் என்பதையும் இது காட்டுகிறது. ஒவ்வொரு வகுப்பும் தனித்தனியாக அமர்ந்திருப்பது போல, இராஜ்யத்தின் ஆசீர்வாதங்களைப் பகிர்ந்து கொள்வதில், தனித்தனி வகுப்புகள் இருப்பதை நாம் காணலாம். முதலில் பரிசுத்தமாக்கப்பட்ட பரலோக வகுப்பு, யோசேப்பில் அடையாளம் காட்டப்படுகிறது. பின்னர், ஒரு சிறப்பு நோக்கத்திற்காக பிரித்தெடுக்கப்பட்ட, ஆபிரகாமின் சந்ததியாகஅவருடைய சகோதரர்கள் காணப்படுகிறார்கள். (ஆமோஸ் 3:2) இந்த உலகத்தின் மனுக்குலம், தங்கள் சொந்த மேஜையில் அமர்ந்து விருந்தருந்தும் எகிப்தியரை அடையாளப்படுத்துகிறது.

ஆனால் பென்யமீனுக்கு சிறப்பான கவனிப்பு அளிக்கப்பட்டது. இவர் யோசேப்பின் ஒரே சகோதரன், இவர்

யோசேப்பு வகுப்பாருக்கு மிகவும் நெருக்கமானவராக இருப்பதால், இவர் திரள் கூட்டத்தாருக்கு ஒத்திருக்கலாம். அவர் மற்றவர்களை விட ஐந்து மடங்கு அதிகமான உணவைப் பெற்றார். இது விரைவில் வரவிருக்கும் இந்த ஆவிக்குரிய வகுப்பிற்கு வழங்கப்படும் ஒரு பெரிய கௌரவத்தைக் குறிக்கிறது. ஐந்து என்ற எண் மத்தேயு 25 வின் ஐந்து புத்தியில்லா கன்னிகளுடன் தொடர்புடையதாக இருக்கலாம். அவர்கள் கிறிஸ்துவின் மணவாட்டியாக இருப்பதற்காக தகுதியை இழந்தாலும், அதிகமான ஆவிக்குரிய ஊட்டத்தை பெற்றிருப்பதால், இராஜ்யத்தில் ஒரு சிறப்பான இடத்தைப் பெறுவார்கள்.

### யோசேபின் வெள்ளி பாத்திரம்

விருந்தை அருந்திய பின், அவர்களின் உணவை வாங்கிவிட்டு, யோசேப்பின் 11 சகோதரர்களும் வீட்டிற்கு செல்ல புறப்பட்டார்கள். ஆனால் பென்யமீனை சம்பந்தப்பட்ட மற்றொரு பிரச்சனை இருந்தது. யோசேப்பு தனது தம்பியின் சாக்கில் ரகசியமாக தனது சொந்த வெள்ளி பாத்திரத்தை வைத்திருந்தார். யோசேப்பின் பணியாளர்கள் அவர்களை கண்டுபிடித்தபோது, காணாமல் போன வெள்ளி பாத்திரத்தைப் பற்றி அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது. "அதற்கு அவன்: நீங்கள் சொன்னபடியே ஆகட்டும்; எவனிடத்தில் அது காணப்படுமோ, அவன் எனக்கு அடிமையாவான்; நீங்கள் குற்றமற்றிருப்பீர்கள் என்றான்." (ஆதியாகமம் 44:10) என்று யோசேப்பின் வார்த்தைகளை அவருடைய ஊழியக்காரன் அவர்களுக்கு அறிவித்தான். பென்யமீனின் சாக்கில் வெள்ளி பாத்திரம் கண்டுபிடிக்கப்பட்டபோது, அவர்கள் அனைவரும் மிகுந்த துக்கமடைந்தார்கள். யூதா அமைதியாக யோசேப்பிடம் வந்து பென்யமீனின் இடத்தைப் பெறும்படி கெஞ்சினார். பல ஆண்டுகளுக்கு முன்பு, யோசேப்பை கொல்வதற்கு பதிலாக அடிமையாக விற்கும் யோசனையை யூதா கூறியது, எவ்வளவு முக்கியமானதாக இருந்தது. (ஆதியாகமம் 37:26,27) இப்போது அவர் தனது ஒன்றுவிட்ட இளைய சகோதரனுக்கு பதிலாக தன்னை ஒரு அடிமையாக ஒப்புக்கொடுத்தார். ஒரு காலத்தில் பொறாமை கொண்ட அவரது இருதயம் இப்போது அவரது இளைய சகோதரனுக்காக இறங்கியது. எப்படிப்பட்ட ஒரு மாற்றம்.

பென்யமீன் இப்போது உட்படுத்தப்பட்ட அடிமைத்தனத்தைப் பற்றி விவாதிக்கும்போது, வெளிப்படுத்தல் 7:15 ல் காணப்படுவதைப் போல், திரள் கூட்டத்தார் கிறிஸ்துவோடு கூட ஆட்சி புரியாமல், தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்ஊழியக்காரர்களாக இருப்பார்கள் என்று யூஜின் பர்ன்ஸ் கருதுகிறார். அந்த பாத்திரம் வெள்ளியாக இருப்பதினால், இராஜ்யத்தில் இஸ்ரயேலின் பங்கைக் குறித்து யுகத்தின் முடிவில், திரள் கூட்டத்தார் பெற்றிருக்கும் ஒரு குறிப்பிட்ட சத்தியத்தை அடையாளப்படுத்துகிறது. யோசேப்புடனான பென்யமீனின் தனித்துவமான உறவைப் பற்றி கொடுக்கப்படும் நியாயமான முடிவுகள் இவைகளே.

### யோசேப்பு வெளிப்பட்டார்

யூதாவின் உணர்ச்சி பொங்கும் வார்த்தைகளை கேட்ட யோசேப்புக்கு, தன்னை அடக்கிக்கொள்ள முடியவில்லை. எகிப்தியர்கள் அனைவரையும் அறையை விட்டு வெளியேறும்படி கட்டளையிட்ட பின் அவர் அழுதார், கடைசியில் அவருடைய சகோதரர்களுக்கு அவரை வெளிப்படுத்தினார். "அப்பொழுது யோசேப்பு தன் சகோதரரை நோக்கி: என் கிட்ட வாருங்கள் என்றான். அவர்கள் கிட்டப்போனார்கள்; அப்பொழுது அவன்: நீங்கள் எகிப்துக்குப் போகிறவர்களிடத்தில் விற்றுப்போட்ட உங்கள் சகோதரனாகிய யோசேப்பு நான்தான். என்னை இவ்விடத்தில் வரும்படி விற்றுப்போட்டதினால், நீங்கள் சஞ்சலப்பட வேண்டாம்; அது உங்களுக்கு விசனமாயிருக்கவும் வேண்டாம்; ஜீவரட்சணை செய்யும்படிக்குத் தேவன் என்னை உங்களுக்கு முன்னே அனுப்பினார். தேசத்தில் இப்பொழுது இரண்டு வருஷமாகப் பஞ்சம் உண்டாயிருக்கிறது; இன்னும் ஐந்து வருஷம் உழவும் அறுப்பும் இல்லாமல் பஞ்சம் இருக்கும்." (ஆதியாகமம் 45: 4-6) அன்பு மற்றும் மன்னிப்பின் உச்சக்கட்டத்தின் வெளிப்பாடு! தேவனுடைய நோக்கத்தைப் பற்றிய யோசேப்பின் புரிதல், அவருடைய பாவமுள்ள சகோதரர்களை கையாள்வதில் அவருக்கு ஒரு அற்புதமான முன்னோக்கைக் கொடுத்தது. தனது சகோதரர்கள் மாறிவிட்டார்கள் என்பதையும், கடந்த கால பாவங்களுக்காக அவர்கள் வருத்தப்படுவதையும் அவர் இப்போது அறிந்திருந்தார். யோசேப்பின் நல்ல இருதயம் மற்றும் சகோதரர்களின் மனந்திரும்புதல் ஆகியவற்றின் இணைப்பு பிளவுபட்ட குடும்பத்தை சேர்க்க வழிவகுத்தது.

கானானுக்குத் திரும்புவதற்கு முன், யோசேப்பு தனது சகோதரர்களுக்கு பரிசுகளை வழங்கினார். "அவர்களில் ஒவ்வொருவனுக்கும் மாற்று வஸ்திரங்களையும் கொடுத்தான்; பென்யமீனுக்கோ முந்நூறு வெள்ளிக்காசையும் ஐந்து மாற்று வஸ்திரங்களையும் கொடுத்தான்." (ஆதியாகமம் 45:22) பென்யமீன் தனது சகோதரர்களை விட அதிகமான இரக்கம் பெற்றது, இது இரண்டாவது முறையாகும். ஆனால், சகோதரர்களின் வளர்ச்சியின் மற்றொரு சாதகமான அறிகுறியாக, அவர்கள் பென்யமீனின் மீது பொறாமை கொண்டதாக எந்த குறிப்பும் இல்லை.

பரிசாக கொடுக்கப்பட்ட ஆடைகள் முக்கியத்துவம் வாய்ந்தது. யோசேப்பின் பல வண்ண அங்கி, இயேசுவின் பலியின் உடன்படிக்கையை அடையாளப்படுத்துவதை நாம் முன்பு பார்த்தோம். பார்வோன் தன்னுடைய கனவுகளை விளக்குவதற்கு யோசேப்பை கொண்டுவந்த போது, அவருடைய ஆடைகள் மாற்றப்பட்டு, சவரம் பண்ணப்பட்டார். அவரது தாடி சவரம் பண்ணப்பட்டது, நசரேய விரதத்தை நினைப்பூட்டுகிறது. நசரேய விரதத்தை கடைபிடிக்கும் ஒரு தனி நபர், அவருடைய பொருத்தனைகள் முடிந்தபின் அவர் மயிரை சிறைத்துவிடுவார். (எண்ணாகமம் 6) இயேசுவின் பூமிக்குரிய பலியின் ஜீவியம் முடிவுக்கு வந்த நேரத்தை இது விவரிக்கிறது. அவருடைய ஆடைகள் மாற்றப்பட்டது, நம்முடைய ஆண்டவரின் உயிர்த்தெழுதலுடன் தொடர்புடையது, அவர் ஒரு ஆவிக்குரிய ஜீவியாக திவ்விய சுபாவத்தை அணிந்துக்கொண்டார்.

யோசேப்பு பார்வோனின் வலது கரமாக உயர்த்தப்பட்ட பிறகு, அவருக்கு மெல்லிய வஸ்திரம், பார்வோனின் முத்திரை மோதிரம் மற்றும் பொன் சரப்பணி வழங்கப்பட்டது. இது தேவனுடைய வலது பாரிசத்தில் இயேசுவின் மகிமையான நிலையை காட்டுகிறது. யோசேப்பு தனது ஒவ்வொரு சகோதரர்களுக்கு ஒவ்வொரு மாற்று வஸ்திரத்தை கொடுத்தார். இது புதிய உடன்படிக்கையின் பாதுகாப்பின் கீழ் இஸ்ரயேல் வருவதை விளக்குகிறது. (எரேமியா காண்க 31:31) மீண்டும், பென்யமீனுக்கு மற்றவர்களை விட அதிகமாக வழங்கப்பட்டது. இது திரள் கூட்டத்தார் பெறும் உயர்ந்த பரிசை சித்தரிக்கிறது. அதாவது யோசேப்பு வகுப்பார் போல அதே ஆவிக்குரிய தயைப் பெற்றவர்கள். (R5232)

அற்புதமான ஒரு மறு இணைப்பைப் பற்றி பார்வோன் கேட்டபோது, அவர் மகிழ்ச்சியடைந்து, யோசேப்புக்கு சில அறிவுறுத்தல்களைக் கொடுத்தார். "பார்வோன் யோசேப்பை நோக்கி: நீ உன் சகோதரரோடே சொல்ல வேண்டியது என்னவென்றால்: உங்கள் கழுதைகளின் மேல் பொதியேற்றிக்கொண்டு புறப்பட்டு, கானான்தேசத்துக்குப் போய், உங்கள் தகப்பனையும் உங்கள் குடும்பத்தாரையும் கூட்டிக்கொண்டு, என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு எகிப்து தேசத்தின் நன்மையைத் தருவேன்; தேசத்தின் கொழுமையைச் சாப்பிடுவீர்கள். நீங்கள் உங்கள் குழந்தைகளுக்காகவும் உங்கள் மனைவிகளுக்காகவும் வண்டிகளை எகிப்து தேசத்திலிருந்து கொண்டுபோய், அவர்களையும் உங்கள் தகப்பனுடனே ஏற்றிக்கொண்டு வாருங்கள். உங்கள் தட்டுமுட்டுகளைக்குறித்துக் கவலைப்பட வேண்டாம்; எகிப்து தேசமெங்குமுள்ள நன்மை உங்களுடையதாயிருக்கும் என்று சொல்லச் சொல்லி, உனக்கு நான் இட்ட கட்டளைப்படியே செய் என்றான். "(ஆதியாகமம் 45:17-20)

இராஜ்யம் தொடங்குகையில், உலகெங்கிலும் உள்ள யூதர்களுக்கு அழைப்பு செல்கிறது. "அப்பொழுது யூதா புத்திரரும் இஸ்ரவேல் புத்திரரும் ஏகமாய்க் கூட்டப்பட்டு, தங்களுக்கு ஒரே அதிபதியை ஏற்படுத்தி, தேசத்திலிருந்து புறப்பட்டு வருவார்கள்; யெஸ்ரயேலின் நாள் பெரிதாயிருக்கும்." (ஓசியா1:11) யாக்கோபின் குடும்பத்தினர் எகிப்துக்கு வந்த போது, அவர்கள் பார்வோனின் அதிகாரத்தை உணர்ந்து, யோசேப்பின் வழியாக அவருடைய ஆசீர்வாதங்களை ஏற்றுக்கொண்டார்கள். இஸ்ரயேலர் அனைவரும் இராஜ்யத்தின் அதிகாரத்தை ஏற்றுக்கொண்டு, இயேசு செய்ததையும் அவர்களுக்காக அவர் செய்யபோவதையும் எண்ணி பாராட்டுவார்கள். எகிப்தின் வளமான தேசமாகிய கோசேன், யாக்கோபின் குடும்பத்திற்கு அப்போது வழங்கப்பட்டது போல், பூமிக்குரிய இராஜ்யத்தில் இஸ்ரயேலர்கள் விசேஷமான இரக்கத்தைப் பெறுவார்கள்.

**பஞ்சத்தை தொடர்ந்த செழுமை**

ஏழு ஆண்டுகள் பஞ்சத்தை தொடர்ந்து வந்த செழுமையான ஏழு ஆண்டுகள், மனுக்குலத்தின் வளர்ச்சிக்கு பயன்படுத்தப்படும் தேவனுடைய திட்டத்தின் அம்சங்களை சித்தரிக்கிறது. முதலில் செழுமையாக காலம் ஏன் வந்தது என்பதற்கான அடையாளத்தைப் பற்றிய ஒரு சுவாரஸ்யமான பார்வையை கார்ல் ஹேகென்சிக் பகிர்ந்திருக்கிறார். "பார்வோனின் கனவில் ஏழு செழுமையான ஆண்டுகள் மனிதனின் பாவம் மற்றும் மரணத்தின் கீழ் வாழும் ஒரு காலத்தையும், பஞ்சத்தின் ஏழு ஆண்டுகளும் இராஜ்யத்தை சித்தரிக்கும் என்பது முரணானதாக தோன்றலாம். இது ஏன் என்று புரிந்துகொள்ள பஞ்சம் என்ற வார்த்தையை நாம் மறுபடியும் வரையறை (redefine) செய்யவேண்டும். பஞ்சம் என்பது ஏராளமான தேவைகளைக் கொண்ட உணவின் பற்றாக்குறை. மனுக்குலத்தின் தற்போதைய அனுபவங்கள், கஷ்டங்கள் மற்றும் சகல முயற்சிகளும் உண்மையில் ஐசுவரியமுள்ளது தான். மனிதன் தனது தேவையை உணரும் காலத்திற்கு இவைகள் சேமிக்கப்படுகிறது. எதிர்காலத்தில் சேமிக்கப்பட்ட உணவின் விநியோகம், பாவம் மற்றும் தீமை தொடர்பான அனுபவத்தின் போது மனிதன் கற்றுக்கொள்ளும் பாடங்களின் விநியோகத்தை சித்தரிக்கிறது. நிறைவாக இருந்தபோது, பார்வோன் மற்றும் யோசேப்பின் தேவையை

ஜனங்கள் உணரவில்லை. ஆனால் பஞ்சத்தின் போது ஜனங்கள், அவர்களை மட்டுமே சார்ந்திருக்க கற்றுக்கொண்டார்கள். சமுதாயத்தின் தேவைகளைப் பற்றிய ஜனங்களின் புரிதல், இராஜ்யத்தில் வித்தியாசமானதாக இருக்கும். இன்று, எசேக்கியேல் தீர்க்கதரிசி விவரித்தபடி, ஜனங்கள் செழுமையின் தரத்தை மதிப்பிட ஒரு குறைபாடுள்ள தரத்தைப் பயன்படுத்துகிறார்கள். "இதோ, கெர்வமும், ஆகாரத் திரட்சியும், நிர்விசாரமான சாங்கோபாங்கமுமாகிய இவைகளே உன் சகோதரியான சோதோமின் அக்கிரமம்; இவைகளே அவளிடத்திலும் அவள் குமாரத்திகளிடத்திலும் இருந்தன; சிறுமையும் எளிமையுமானவனுடைய கையை அவள் பலப்படுத்தவில்லை." (எசேக்கியேல் 16:49) ஆனால் இராஜ்யத்தில், அவர்களின் பாவ நிலையையும், மூடதனமான வெற்றியின் அளவுகோல்களைப் பற்றி அவர்கள் உணரும்போது, நிஜமான யோசேப்பிடமிருந்து, உயர் தரமான சத்தியத்தினால் போஷிக்கப்படுவதற்கு அது அவர்களை அனுமதிக்கும். ஒரு முறை அவர்கள் வளமானவர்களாக இருந்தார்கள் என்று நம்பினார்கள், ஆனால் வளமான என்பதற்கான பொருள் மாறும். அவர்கள் தங்கள் உண்மையான ஆவிக்குரிய தேவைகளை உணர்ந்து, அவற்றை தரக்கூடியவரிடமிருந்து உதவியை நாடுவார்கள். இது பார்வோனின் கனவில் மெலிந்து பசுக்கள் கொழுமையான பசுக்களை புசிப்பதில் சித்தரிக்கப் படுகிறது. புதிய உண்மைகள், அவர்களின் சுயமான தவறான எண்ணங்களை உட்கொண்டுவிடும்.

யோசேப்பு புத்திசாலித்தனமாக எகிப்து ஜனங்களுக்கு தேவையான உணவை விநியோகித்தார். ஆயினும், அது அவர்களுக்கு இலவசமாக வழங்கப்படாமல், ஒரு விலைக்கு விற்கப்பட்டது. ஜனங்களிடம் பணமில்லாத போது, யோசேப்பு அவர்கள் கால்நடைகள், குதிரைகள் மற்றும் மந்தைகளை விலைக்கு வாங்கிக்கொண்டார். இவைகளும் செலவழிந்த போது, அவர்கள் தங்கள் நிலங்களை விற்றார்கள், இறுதியாக தங்களையே பார்வோனுக்கு ஊழியக்காரர்களாக ஒப்புக்கொடுத்தார்கள். (ஆதியாகமம் 47:13-19) தேவனுக்கும், இராஜ்ய ஏற்பாட்டிற்கும் தொடர்ந்து அதிகரிக்கும் மக்களின் அர்ப்பணிப்பை இந்த முன்னேற்ற விருத்தி விவரிக்கிறது. ஆவிக்குரிய போஷாக்கு மற்றும் வளர்ச்சிக்காக தொடர்ச்சியான தேவைகளை இந்த உலகம் உணர்ந்துகொள்ளும் போது, அவர்கள் தங்களையே பார்வோனுக்கு விற்றுப்போடுவார்கள். முழுமையாக தேவனுடைய ஊழியக்காரர்களாக தங்களையே ஒப்புக்கொடுப்பதை இது சித்தரிக்கிறது. (நீதிமொழிகள் 23:26, வெளிப்படுத்தல் 21:24 காண்க)

**நிலம் வாங்குதல்**

"அப்படியே எகிப்தியர் தங்களுக்குப் பஞ்சம் மேலிட்டப்படியால் அவரவர் தங்கள் வயல் நிலங்களை விற்றார்கள்; யோசேப்பு எகிப்தின் நிலங்கள் யாவையும் பார்வோனுக்காகக் கொண்டான்; இவ்விதமாய் அந்தப் பூமி பார்வோனுடையதாயிற்று. மேலும் அவன் எகிப்தின் ஒரு எல்லை முதல் மறு எல்லை வரைக்குமுள்ள ஜனங்களை அந்தந்தப் பட்டணங்களில் குடிமாறிப் போகப்பண்ணினான். ஆசாரியருடைய நிலத்தை மாத்திரம் அவன் கொள்ளவில்லை; அது பார்வோனாலே ஆசாரியருக்கு மானியமாகக் கொடுக்கப்பட்டிருந்ததினாலும், பார்வோன் அவர்களுக்குக் கொடுத்த மானியத்தினாலே அவர்கள் ஜீவனம்பண்ணிவந்ததினாலும், அவர்கள் தங்கள் நிலத்தை விற்கவில்லை. பின்னும் யோசேப்பு ஜனங்களை நோக்கி: இதோ, இன்று உங்களையும் உங்கள் நிலங்களையும் பார்வோனுக்காக வாங்கிக்கொண்டேன்; இதோ, உங்களுக்குக் கொடுக்கப்படுகிற விதைத் தானியம், இதை நிலத்தில் விதையுங்கள். விளைவில் ஐந்தில் ஒரு பங்கைப் பார்வோனுக்குக் கொடுக்க வேண்டும்; மற்ற நாலுபங்கும் வயலுக்கு விதையாகவும் உங்களுக்கும் உங்கள் குடும்பத்தாருக்கும் உங்கள் குழந்தைகளுக்கும் ஆகாரமாகவும் உங்களுடையதாயிருக்கட்டும் என்றான். அப்பொழுது அவர்கள்: நீர் எங்கள் பிராணனைக் காப்பாற்றினீர்; எங்கள் ஆண்டவனுடைய கண்களில் எங்களுக்குத் தயவு கிடைக்கவேண்டும்; நாங்கள் பார்வோனுக்கு அடிமைகளாயிருக்கிறோம் என்றார்கள்." (ஆதியாகமம் 47:20,21,23-25)

வளர்ந்துவரும் இராஜ்யத்தைப் பற்றி என்ன ஒரு வல்லமைவாய்ந்த விளக்கம். உண்மையில், இயேசு மனுக்குலத்தை மட்டுமல்ல, இந்த பூமியையும் வாங்கியுள்ளார் என்பதை, யோசேப்பு நிலம் வாங்கியதிலிருந்து நாம் அறிந்துக்கொள்கிறோம். லேவியராகமம் 9 ம் அதிகாரத்தில் விவரிக்கப்பட்டுள்ள கூடார பண்டிகையில் இது சித்தரிக்கப்பட்டுள்ளது. ஏழு நாள் "ஆசாரியத்துவத்தின் பிரதிஷ்டை" பண்டிகைக்குப் பின் வந்த எட்டாம் நாளில், பாவநிவாரண இரத்தம் பூமியில், செம்பு பலிபீடத்தின் முன் ஊற்றப்பட்டது. (லேவியராகமம் 9:9) பூமியில் ஊற்றப்பட்ட இந்த இரத்தம், நம்முடைய ஆண்டவரின் பலியினால் எவ்வாறு இந்த பூமியும் விலைக்கு வாங்கப்பட்டது என்பதை விளக்குகிறது.

ஆசாரியர்களுக்கான நில பகுதியைத் தவிர, எகிப்து தேசமெல்லாம் விலைக்கு வாங்கிய பிறகு, யோசேப்பு அதை தனக்காக வைத்துக்கொள்ளவில்லை. பஞ்சத்தின் போது யோசேப்பு ஜனங்களை அந்தந்தப் பட்டணங்களில் குடிமாறிப் போகப் பண்ணினார். (ஆதியாகமம் 47:21) இருப்பினும், இது முடிந்ததும் யோசேப்பு, அவர்கள் நடுவதற்கு விதைகளை வழங்கினார். அவர்கள் இப்போது பார்வோனுக்கு சொந்தமான நிலத்தில் வேலை செய்து 80 சதவீத அறுவடைகளைத் தங்களுக்கும், 20 சதவீதம் பார்வோனுக்கும் கொடுத்தார்கள். நிலம் ஜனங்களுக்கு சொந்தமாக இல்லாவிட்டாலும், அதன் பலன்களை அவர்கள் அறுவடை செய்ய முடிந்தது.

நம்முடைய ஆண்டவராகிய இயேசு பூமியை விலைக்கு வாங்கினாலும், இறுதியில், அதை மனுக்குலத்தின் அதிகாரத்திற்கே திரும்ப கொடுப்பார் என்பதை இது துல்லியமாக விளக்குகிறது. பார்வோனுக்கு கொடுக்கப்படும் 20 சதவிகிதம் இஸ்ரயேலின் தசமபாகத்தைப் போன்றது. அவர்களின் செழிப்பும் ஆசீர்வாதங்களும் தேவனிடமிருந்தே வந்தது என்பதை இது நினைப்பூட்டும். இஸ்ரயேல் 10 சதவிகிதத்தை மட்டுமே கொடுக்க வேண்டியிருந்தது. ஆனால் இங்கு கொடுக்கப்பட்ட 20 சதவிகிதம் ஜனங்கள் தேவனை அதிகமாக பாராட்டுவதையும், அவர் மேல் கொண்ட இருதய நிறைவான பக்தியையும் சுட்டிக்காட்டுகிறது. அதிகமாக கொடுக்கப்படும் இந்த பங்கு தேவன் மேல் மனுக்குலம் பட்ட கடனுக்கு அவர்கள் வெளிப்படுத்தும் நன்றியுணர்வாகும். இந்த நன்றியுணர்வு நீதிமொழிகள் 3:9ல் விவரிக்கப்பட்டுள்ளது.""

## தீர்மானம்


தன்னுடைய குடும்பத்தையும் எகிப்தில் வசிப்பவர்களையும் காப்பாற்றுவதற்கு தேவன் எவ்வாறு ஒரு மனிதனை பயன்படுத்தினார் என்பதை யோசேப்பின் வாழ்க்கை ஒரு நாடகமாக சித்தரிக்கிறது. கடந்த காலத்திலும், எதிர்காலத்திலும், யோசேப்பு மற்றும் நம்முடைய ஆண்டவரின் அனுபவங்களுக்கு இடையில் காணப்படும் இணைகள் மிக துல்லியமானதாக காணப்படுகிறது. உயிரைக் காக்க இயேசு இந்த உலகத்திற்கு அனுப்பப்பட்டார். இது உபத்திரவம் நிறைந்த ஒரு பலியாக இருந்தது. ஆயினும், அது மனுக்குலத்திற்கு கொண்டுவரும் பெரும் நன்மைகளைப் புரிந்துகொண்டவராக, அவர் மனமுவந்து இந்த விலையை செலுத்தினார். அவருடைய பூமிக்குரிய வாழ்க்கையில் அவருடைய சகோதரர்களில் பெரும்பாலானோர் "அவரை அறியவில்லை".(யோவான்1:10) ஆனால் அவர்களுக்காகவும், நம் ஒவ்வொருவருக்காகவும் அவர் என்ன செய்தார் என்பதை ஒருநாள் அவர்கள் அறிந்துகொள்வார்கள். மேலும் மனுஷகுமாரன் இப்போது இப்பிரபஞ்சத்தின் மிகபெரிய இராஜாவை சேவிக்கிறார் என்பதில் அனைவரும் மகிழ்வார்கள். நீண்ட காலமாக வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட இராஜ்யத்தின் பலன்களை அனைவரும் அனுபவிப்பார்கள். நிஜமான யோசேப்பு மனமுவந்து தன்னை ஒரு ஊழியராக்கி, கனவுகளை நிறைவேற்றுபவராக, இப்போது மனுக்குலத்திற்கு ஒரு திறமையான அமைச்சராக இருப்பதில் நாம் எத்தனை மகிழ்ச்சி அடைகிறோம்.

"ஆனாலும் உங்களுக்கு இரங்கும்படி கர்த்தர் காத்திருப்பார், உங்கள்மேல் மனதுருகும்படி எழுந்திருப்பார்; கர்த்தர் நீதிசெய்கிற தேவன்; அவருக்குக் காத்திருக்கிற அனைவரும் பாக்கியவான்கள்."(ஏசாயா 30:18)


# யோசேப்பு மற்றும் இயேசுவுக்கு இடையிலான ஒப்பீட்டு விளக்கப்படம்

| ஆதியாகமம் | யோசேப்பு | இயேசு | மேற்கோள்கள் |
|---|---|---|---|
| 37:3 | தந்தையால் அதிகமாக நேசிக்கப்பட்டவர் | தந்தையால் அதிகமாக நேசிக்கப்பட்டவர் | மத்தேயு 3:17 |
| 37:3 | தகப்பன், மகன் என்ற விசேஷித்த உறவை அடையாளப்படுத்தும் பலவர்ண அங்கி | பலியின் உடன்படிக்கையோடு தொடர்புடைய வாக்குத்தத்தங்கள் தேவனோடு ஒரு வலுவான பிணைப்பை உருவாக்கியது | மல்கியா 3:10 |
| 37:5-9 | எதிர்கால உயர்வுக்கான தீர்க்கதரிசனமான கனவுகள் | எதிர்கால உயர்வுக்கான தீர்க்கதரிசனங்கள் | ஏசாயா 53:12 |
| 37:4,18 | சகோதரர்கள் பொறாமை / கொலைக்கு சதி | யூத தலைவர்களின் பொறாமை கொலைச் செய்ய சதி செய்தார்கள் | மத்தேயு 27:1,18 |
| 37:26,27 | சகோதரர்கள் தீவிரமாக கொலை செய்வதற்கு பதிலாக யோசேப்பை அடிமையாக விற்றார்கள் | வேதபாரகரும் பரிசேயரும் இயேசுவை நேரடியாக கொல்லாமல், பிலாத்தின் வழியாக கொலை செய்தார்கள் | மத்தேயு 27:2,20-23 |
| 37:27 | அடிமையாக விற்கப்பட்டார் | அடிமையின் ரூபம் எடுத்தார் | பிலிப்பியர் 2:7 |
| 37:28 | 20 வெள்ளி காசுக்கு விற்கப்பட்டார் (ஒரு வாலிபனுடைய விலை) | 30 வெள்ளி காசுக்கு விற்கப்பட்டார் (ஒரு பூரண புருஷனுடைய விலை) | சகரியா 11:12<br>மத்தேயு 26:15 |
| 37:31 | அவருடைய மரணத்தை நிரூபிக்க, அங்கியின் மேல் இரத்தம் பூசப்பட்டது. | பலியிடப்பட்ட ஆட்டுக் குட்டியைப் பற்றி தீர்க்கதரிசன அறிக்கைகள் | வெளிப்படுத்தல் 13:8 |
| 39:2 | தேவன் அவரை வழிநடத்தி அவருடைய ஊழியத்தை ஆசீர்வதித்தார் | தேவன் அவரை வழிநடத்தி அவருடைய ஊழியத்தை ஆசீர்வதித்தார் | ஏசாயா 53:10 |
| 39:3 | போத்திபாரின் உடமைகள் நம்பி ஒப்படைக்கப்பட்டது | யெகோவா தேவனின் உடமைகள் நம்பி ஒப்படைக்கப்பட்டது | யோவான் 3:35 |
| 39:9 | பாவமற்ற, அவரது உயர்ந்த உறுதி சோதிக்கப்பட்டது. | பாவமற்ற, அவரது உயர்ந்த உறுதி சோதிக்கப்பட்டது | எபிரெயர் 4:15,5:8 |
| 39:11-18 | போத்திபாரின் மனைவியால் பொய்யாக குற்றம் சாட்டப்பட்டார் | இயேசுவுக்கு விரோதமாக பொய் சாட்சிகள் கொண்டுவரப்பட்டது | மாற்கு 14:56 |
| 39:20 | யோசேப்பு சிறையில் இருந்தார் | இயேசு கல்லறையில் இருந்தார் | மத்தேயு 27:50 |
| 40:22 | சுயம்பாய் கொலை செய்யப்பட்டான் | அப்பம் = ஈடுபலி. திரும்ப எடுத்து கொள்ள முடியாதது | யோவான் 6:51 |
| 40:21 | பாணபாத்திரக்காரன் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டான் | ரசம் = பாவ நிவாரண பலி. இயேசுவின் பலி மரணத்திலிருந்து தப்பிக்க உதவி செய்தது | ஏசாயா 53:10 |
| 41:1-7 | பார்வோனின் தீர்க்கதரிசனமான கனவுகள் | உலக செழிப்பைத் தொடர்ந்து வரும் ஆவிக்குரிய "பஞ்சம்" பற்றிய தீர்க்கதரிசன விளக்கம் | எசேக்கியேல் 16:49 |
| 41:37-41 | யோசேப்பு இரண்டாவதாக உயர்த்தப்பட்டார்; ஒரு மோதிரமும், உயர்ந்த வஸ்திரமும், ஒரு பொன் சரப்பணியும் அவருக்கு கொடுக்கப்பட்டது | இயேசு இராஜரீக அதிகாரத்தோடும் (மோதிரம்) அழியாமையோடும் (பொற் சரப்பணி) நீதியான ஆட்சியோடும் (வெண் வஸ்திரம்) தேவனுடைய வலது பாரிசத்திற்கு உயர்த்தப்பட்டார் | பிலிப்பியர் 2:9,10 |
| 41:45 | சாப்நாத்பன்னேயா என்று பெயர் மாற்றப்பட்டது | அதாவது, ஜீவ அப்பத்தினால் மரணத்திலிருந்து விடுதலை | யோவான் 6:51 |
| 41:45 | யோசேப்புக்கு "ஆஸ்நாத்" என்ற மனைவி கொடுக்கப்பட்டது | ஆஸ்நாத் என்பதற்கு "விரும்பப்படுபவர்" மற்றும் தேவனால் அழைக்கப்பட்ட கிறிஸ்துவின் மணவாட்டியை அடையாளப்படுத்தும். | சங்கீதம் 45:11<br>வெளிப்படுத்தல் 21:9 |
| 43:32-34 | எகிப்தியர்களைத் தவிர, யோசேப்பின் சகோதரர்கள் அவரோடு சிறப்பு உணவைப் பகிர்ந்து கொண்டார்கள் | உலகத்திற்கும் மேலாக இஸ்ரயேல் தேசம் தேவனிடத்தில் விசேஷித்த இரக்கம் பெற்றுள்ளது | ஆமோஸ் 3:2 |
| 43:34 | பென்னியமீனுக்கு 5 மடங்கு உணவு கொடுக்கப்பட்டது | பென்னியமீன் = திரள் கூட்டம், மதிப்பு கொடுக்கப்படுகிறது | வெளிப்படுத்தல் 7:14,15 |
| 44:1-34 | யோசேப்பின் சகோதரர்கள் அவரை கடுமையாக நடத்தினார்கள் | யாக்கோபின் இக்கட்டு காலம் (R5225) | சகரியா 14:2 |
| 45:1-7 | 2 வது சந்திப்பில் யோசேப்பு தன்னை வெளிப்படுத்துகிறார் | இயேசுவின் 2 ம் வருகையில் தன்னை இஸ்ரயேலுக்கு வெளிப்படுத்தினார் | சகரியா 12:10 |
| 45:17-20 | யோசேப்பு தனது குடும்பத்தை கோசேனுக்கு அழைத்து வந்தார் | யூதர்கள் இஸ்ரயேலுக்கு திரும்பி இயேசுவை அடையாளம் கண்டு கொள்வார்கள் | ஓசியா 1:11 |
| 45:22 | யோசேப்பு சகோதரர்களுக்கு வஸ்திரங்களை பரிசாக கொடுத்தார் | புதிய வஸ்திரம் = புதிய உடன்படிக்கையின் பாதுகாப்பின் கீழ் வருகின்றன | எரேமியா 31:31 |
| 41:29,30 | ஏராளமான வருடங்களை தொடர்ந்து பஞ்சம் வந்தது. ஏராளம் = மனிதனின் குறைபாடுள்ள செழிப்பான தரம் | பஞ்சம் = இராஜ்யத்தில் மனுஷனுடைய ஆவிக்குரிய தேவைகள் | எசேக்கியேல் 16:49<br>வெளிப்படுத்தல் 3:17 |
| 47:19-23 | எகிப்திய ஜனங்களையும், விலங்குகளையும் நிலங்களையும் யோசேப்பு விலைக்கு வாங்கினார் | ஈடுபலியின் வழியாக, இப்போது இயேசு மனுக்குலத்தையும், சகல ஜீவராசிகளையும், பூமியையும் தனக்கு சொந்தமாக்கிக் கொண்டார் | 1 கொரிந்தியர் 6:20<br>லேவியராகமம் 9:9 |
| 47:13-19 | உணவு இலவசமாக வழங்கப்படாமல் விலைக்கு கொடுக்கப்பட்டது | ஜனங்கள் பெற்ற ஆசீர்வதங்களுக்காக நன்றியோடு அவர்களை அர்ப்பணித்தார்கள் | நீதிமொழிகள் 23:26<br>வெளிப்படுத்தல் 21:24 |
| 47: 24 | ஜனங்கள் 20% பயிர்களை பார்வோனுக்கு செலுத்தினார்கள் | மனுக்குலத்தின் செழிப்பு தேவனிடமிருந்து கிறிஸ்துவின் மூலம் வருகிறதை கண்டுகொண்டனர் | நீதிமொழிகள் 3:9 |

# Ezekiel's Vision of a New Temple






- A — Brazen Altar
- B — Temple Building
- C — Priests' Chambers
- D — Singers' Chambers
- E — Priests' Boiling and Baking Places
- F — Levites' Boiling Places
- G — Thirty Chambers
- H — Place for Washing the Sacrifices











One of the Outer Court Gates


A—Outer Door and Threshold
B—Entry
C—Six Little Chambers
D—The Posts adorned with Palm trees
E—Inner Threshold
F—Inner Door







TEMPLE DECORATION




THE TEMPLE

A—Entrance to Porch, with Pillars.
B—Door and Threshold to the Holy.
C—Door to Most Holy.
D—Inner Wall of Temple.
E—Outer Wall of Temple.
F—Side Chambers made by space between Walls.
G—Doors to Side Chambers.
H—Temple Platform—1 reed high.

# ஒரு புதிய ஆலயத்தைப்பற்றி எசேக்கியேலின் பார்வை



"அந்தப் புருஷன் என்னை நோக்கி: மனுபுத்திரனே, நீ கண்ணாரப்பார்த்து, காதாரக் கேட்டு, நான் உனக்குக் காண்பிப்பதெல்லாவற்றின் மேலும் உன் மனதை வை; நான் உனக்கு அவைகளைக் காண்பிக்கும்படி நீ இங்கே கொண்டுவரப்பட்டாய்; நீ காண்பதையெல்லாம் இஸ்ரவேல் வம்சத்தாருக்குத் தெரிவி என்றார்."(எசேக்கியேல் *40:4*)

***Gleaned largely from material by Edmund Jezuit and Frank Shallieu***

வசனங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள தரிசனங்களில் நம்முடைய பாடம் மிகவும் குறிப்பிடத்தக்கது. உண்மையில், எசேக்கியேல் புத்தகத்தின் கடைசி ஒன்பது அதிகாரங்கள் இந்த அசாதாரண தரிசனத்திற்காக அர்ப்பணிக்கப்பட்டது. முந்தைய இரண்டு அதிகாரங்களில் சித்தரிக்கப்பட்டுள்ள யாக்கோபின் இக்கட்டு காலம், இந்த தரிசனத்தை பின் தொடருகிறது. இது மகா உபத்திரவ காலத்தை தொடர்ந்து வரும் ஆசீர்வாதங்களை விளக்குகிறது.

பூமியில் தேவனுடைய இராஜ்யம் ஸ்தாபிக்கப் படுவதை இந்த தரிசனம் அழகாக சித்தரிக்கிறது. இந்த தரிசனத்தின் அம்சங்களை அறிந்துகொள்வதற்கு உதவியாக, முந்தைய பக்கங்களில் உள்ள வரைபடங்களை ஆராய்ந்து, எசேக்கியேலின் ஆலயத்தின் பொதுவான அமைப்பை பற்றி அறிந்து கொள்வதற்கு வாசகர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள். பல அடையாளங்கள் சுவிசேஷ யுகத்தை மீண்டும் பிரதிபலித்தாலும், மனுக்குலம் தேவனை வழிபடுவதற்காக வரும் வழியில், தேவனுடைய இராஜ்யத்தினால் அவர்கள் பெறும் விளைவுகளை முதன்மையாக கொண்டுள்ளது. இந்த கட்டுரையில் சொல்லப்பட்ட பல விளக்கங்கள் அதிகாரபூர்வமாக கொடுக்கப்படவில்லை. அவைகள் ஆசரிப்பு கூடாரம் மற்றும் புதிய எருசலேமின் சித்திரங்களின், உறுதியான அறிவின் அடிப்படையில் நியாயமான விளக்கங்களாகும்.

**தரிசனம்**

"தேவதரிசனங்களில் அவர் என்னை இஸ்ரவேல் தேசத்துக்குக் கொண்டுபோய், என்னை மகா உயரமான ஒரு மலையின்மேல் நிறுத்தினார்; அதின்மேல் தெற்காக ஒரு நகரம் கட்டியிருக்கிறது போல் காணப்பட்டது. அவர் என்னை அங்கே கொண்டு போனார்; இதோ, அங்கே ஒரு புருஷன் இருந்தார்; அவருடைய தோற்றம் வெண்கலமாயிருந்தது; அவர் கையில் சணற் கயிறும் ஒரு அளவுகோலும் இருந்தது; அவர் வாசலிலே நின்றார். அந்தப் புருஷன் என்னை நோக்கி: மனு புத்திரனே, நீ கண்ணாரப் பார்த்து, காதாரக்கேட்டு, நான் உனக்குக் காண்பிப்பதெல்லாவற்றின் மேலும் உன் மனதை வை; நான் உனக்கு அவைகளைக் காண்பிக்கும்படி நீ இங்கே கொண்டுவரப்பட்டாய்; நீ காண்பதையெல்லாம் இஸ்ரவேல் வம்சத்தாருக்குத் தெரிவி என்றார்." (எசேக்கியேல் 40:2-4)

ஒரு தரிசனத்தில் எசேக்கியேல் எருசலேமுக்கு வடக்கே உள்ள ஒரு "மிக உயரமான மலைக்கு" கொண்டு வரப்பட்டார். இந்த நிலைப்பாட்டிலிருந்து அவர் ஆலயத்தையும் அதன் சுற்றுப்புறங்களின் ஒரு பரந்த காட்சியைக் கண்டார். அவர் தெற்கே பார்த்தபோது, ஒரு நகரம் கட்டியிருப்பதை போல் காணப்பட்டது. அதற்குள் பரிசுத்தமான ஆலயம் இருந்தது.

தாமிரம் போன்ற தோற்றமுடைய அந்த மனிதரின் அடையாளங்களைப் பற்றி வேத மாணவர்களால் வாதிடப்படுகிறது. ஆனால் அவர் வைத்திருந்த பொருட்கள் மிக முக்கியமானவைகளாகும். அவர் கையில் ஒரு சணற்கயிறும் ஒரு அளவுகோலும் இருந்தது. அந்த கயிறு நீண்ட அளவீடுகளை அளப்பதற்கு ஒரு அளவு நாடாவாக பயன்படுத்தப்பட்டது. சணல், வஸ்திரங்களை உருவாக்க பயன்படுத்தப்படும், இது நீதியின் அடையாளமாக உள்ளது. இந்த சணற்கயிறு, நீதியின் தரத்தை வெளிப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படும் தேவனுடைய வடிவமாகும். ஆறு முழ நீளம் கொண்ட அளவுகோல், குறுகிய அளவுகளை அளப்பதற்கு பயன்படுத்தப்பட்டது. தரிசனத்தை காண்பித்த அந்த புருஷர், பார்ப்பதற்கும், காதாரக் கேட்பதற்கும், அந்த தரிசனத்தை கற்றுக்கொள்வதற்கும் எசேக்கியேலை வழிநடத்தினார். இந்த தரிசனம், ஆவிக்குரிய ஆலயத்திலிருந்து ஆசீர்வாதங்கள் எவ்வாறு வெளிப்படும் என்பதையும், மனுக்குலம் தேவனை எவ்வாறு உண்மையோடு தொழுதுக் கொள்வார்கள் என்பதையும் காட்டக்கூடிய ஒரு சித்திரமாகும்.

எசேக்கியேல் 40:5 ல் அந்த மனுஷனுடைய அளவுகோலின் நீளம் நமக்கு கொடுக்கப்பட்டுள்ளது. "இதோ, ஆலயத்துக்குப் புறம்பே சுற்றிலும் ஒரு மதில் இருந்தது; அந்தப் புருஷன் கையிலே ஆறுமுழ நீளமான ஒரு அளவுகோல் இருந்தது; ஒவ்வொரு முழமும் நமது கைமுழத்திலும் நாலுவிரற்கடை

அதிகமானது; அவர் அந்த மதிலை அளந்தார்; அகலம் ஒரு கோலாகவும் உயரம் ஒரு கோலாகவும் இருந்தது." ஒரு முழத்தின் நீளம் முழங்கையில் இருந்து நடு விரலின் நுனி வரைக்கும் அளவிடப்பட்டது, இது 18 அங்குலங்களாக தீர்மானிக்கப்பட்டது. ஒரு விறற்கடை நான்கு விரல்களின் அகலம், அதாவது 3அங்குலங்கள். (5 படம் காண்க) ஆகையால், எசேக்கியேலின் பார்வையில் அந்த அளவுகோல், 21 அங்குலங்கள் நீளமானது. (18 + 3 = 21 அங்குலங்கள்) இது "பாபிலோனிய முழம்" என்றும் அழைக்கப்பட்டது. எசேக்கியேல் பாபிலோனில் இருந்து எழுதியதால், இது ஒரு நியாயமான முடிவு. அங்கு சிறைபிடிக்கப்பட்ட யூதர்களுக்கும் இது தெரிந்திருக்கும். இந்த ஆலயம் Sanctuary ஒரு பெரிய பகுதியை உள்ளடக்கியது. மற்றும் அதன் சுவர்களுக்குள் பரிசுத்தஸ்தலம் இருந்தது.அளவுகோல் ஆறு முழ நிளம் கொண்டது, நம்முடைய கணக்கின்படி 10½அடி நீளமாகும். ஆலயத்தின் வெளிப்புற சுவர் 500 முழம் என்பதற்கு ஒவ்வொரு பக்கத்திலும் அந்த சுவர் 875 அடிநீளமும், 10½ அடி உயரமும், 10½ அடி தடிமனும் ஆக இருந்தது. ஒரு சரியான சதுரம் என்பதால், அது மிகப்பெரிதும், கிட்டத்தட்ட மூன்று கால்பந்து மைதானங்களின் நீளம் கொண்டதாகும். எசேக்கியேல் 42: 16-19இன் பல மொழி பெயர்ப்புகள் "reeds" அளவீட்டை விவரிக்கின்றது. ஆயினும், செப்ட்டுவஜின்ட்டில் "" என்ற வார்த்தைக்கு "முழம்" என்று மாற்றப்படுகிறது. "reeds" என்பது சரியாக இருந்தால், ஆலயத்தின் sanctuary ஒரு பக்கத்தின் அளவு தோராயமாக ஒரு மைல் இருக்கும். இது ஒரு நம்பத்தகாத அளவாகும்.

### தரிசனத்தின் நோக்கம்

எசேக்கியேலின் நாளில் இந்த தரிசனத்திற்கு ஒரு குறிப்பிட்ட நோக்கம் இருந்தது. "மனுபுத்திரனே, இஸ்ரவேல் வம்சத்தார் தங்கள் அக்கிரமங்களினிமித்தம் வெட்கப்படும்படிக்கு, நீ அவர்களுக்கு இந்த ஆலயத்தைக் காண்பி; அதின் அளவை அளக்கக்கடவர்கள். அவர்கள் செய்த எல்லாவற்றினிமித்தமும் வெட்கப்பட்டால், அப்பொழுது இந்த ஆலயத்தின் ரூபத்தையும், அதின் அளவையும், அதின் முன்வாசல்களையும், அதின் பின் வாசல்களையும், அதின் எல்லா ஒழுங்குகளையும், அதின் எல்லாக் கட்டளைகளையும், அதின் எல்லா நியமங்களையும், அதின் எல்லாச் சட்டங்களையும் அவர்களுக்குத் தெரியப்படுத்தி, அவர்கள் அதினுடைய எல்லா ஒழுங்குகளையும், அதினுடைய எல்லா முறைமைகளையும் கைக்கொண்டு, அவைகளின்படி செய்யும் படிக்கு அதை அவர்கள் கண்களுக்கு முன்பாக எழுதிவை." (எசேக்கியேல் 43:10,11) பல தீர்க்கதரிசிகள் இஸ்ரயேலுக்கு வரும் தண்டனையை முன்னறிவித்திருந்தாலும், ஆலயத்தையும், எருசலேம் நகரத்தையும் அழிப்பதற்கு தேவன் அனுமதிப்பார் என்பதை ஜனங்கள் கற்பனை செய்யவில்லை. ஆனால் தேவன் அனுமதித்தார். யேகோவா தேவனின் ஆராதனைகள் ஒரு நாள் திரும்பும் என்று இந்த தரிசனத்தின் மூலம் கூறப்பட்டது. அதற்கு அவர்களின் கடந்த கால அக்கிரமங்களை அவர்கள் வெட்கத்துடன் பார்க்க வேண்டும். இப்போது, எசேக்கியேல், தரிசனத்தையும் அதன் அனைத்து சிக்கலான விவரங்களுடன் விவரிப்பதைக் கேட்கும் போது, ஒருநாள் அவர்களின் தண்டனை முடிவடைந்து, சரியான தேவ ஆராதனை திரும்பும் என்று அவர்கள் நம்பி, ஊக்குவிக்கப்பட்டிருக்கலாம்.

ஆனால் நிச்சயமாக, இந்த தரிசனத்திற்கு இன்னும் ஒரு பெரிய நோக்கம் இருந்தது. இது இஸ்ரயேலில் ஆராதனைக்குரிய ஸ்தலத்தை மீண்டும் நிலை நிறுத்துவதோடு, இன்னும் அதிகமானதை குறிப்பிட்டது. ஆதாமின் சாபம் ஒருநாள் எவ்வாறு முடிவடையும் என்பதையும் மனுக்குலத்தின் அனைத்து வகுப்பாரும் எவ்வாறு தேவனை மகிமைப்படுத்தி ஆராதிப்பார்கள் என்பதையும் சித்திரமாக இந்த தரிசனம் காட்டுகிறது. பிதாவை அணுகுவதற்கு இயேசுவும், சபையும் வகிக்கும் சிறப்பான இடத்தை இது விவரிக்கிறது.

### மூன்று நிலைகள்

எசேக்கியேல் ஆலயத்திற்குள் Sanctuary ஒரு பெரிய வாயில் வழியாக நுழைந்தபோது, வெளி பிரகாரத்தைச் சுற்றி ஒரு தாழ்ந்த நடைபாதையையும், உள் பிரகாரத்தை சுற்றி மேலான ஒரு நடைபாதையையும் கண்டார். நிலைகளில் காணப்படும் இந்த வேறுபாடு, மனிதன் அடையக்கூடிய இரண்டு இலக்குகள் அல்லது முடிவுகளை குறிக்கலாம். தாழ்ந்த நிலை, பூமிக்குரிய மறுசீரமைப்பையும், மேலான பாதை ஆவிக்குரிய நிலையை குறிக்கலாம். ஆனால் ஆலயம் தாமே இதைவிட உயர்வான இடத்தில் நின்றது. உள் பிரகாரத்திற்கு மேலே இருக்கும் இந்த ஆலயம் இயேசுவும், சபையும் மட்டுமே அடையக்கூடிய அழியா நிலையை அடையாளப்படுத்துகிறது. (2கொரிந்தியர் 6:16, வெளிப்படுத்தல் 3:12)

இந்த மூன்று நிலைகளையும் ஆராயும்போது, ஆசரிப்பு கூடாரத்தில் ஒரு குறிப்பிடத்தக்க பிரிவு காணப்படுகிறது. அனைத்தும் ஒரே மட்டத்தில் இருப்பதால், ஆசரிப்புக் கூடாரமானது விசுவாசத்தில் முன்னேற்றம் அடையவதை விளக்குகிறது - பாளையத்தில் இருந்து

பிரகாரம், அதிலிருந்து பரிசுத்த ஸ்தலம் இறுதியாக அதிலிருந்து மகா பரிசுத்த ஸ்தலம். ஒருவர் ஆலயத்தில் முன்னேறி செல்வதை போல. இருப்பினும், முன்னோக்கி செல்லும் தனிநபர், மேல் நோக்கியும் எறுகிறார்கள். ஏழு படிகள் வெளியுள்ள பிரகாரம் வரை வழிநடத்தியது, அதே நேரத்தில் எட்டு படிகள் உயரத்தில் உள் பிரகாரத்திற்கு நடத்தியது.

வெளி பிரகாரத்தின் ஏழு படிகள், மனுக்குலம் படிப்படியாக பூரணப்படுவதை விளக்குகிறது. தேவனோடு ஒப்புரவாகவும், ஒருவரின் திறனுக்கு ஏற்ப வேலைகளை செய்யவேண்டியதாக இருக்கும். மனுக்குலம் பரிப்பூரண நிலைக்கு திரும்ப 7,000 வருடங்கள் தேவைப்படுவதை, இந்த ஏழு படிகள் நினைப்பூட்டலாம் அல்லது ஒரு நினைவுச்சின்னமாக இருக்கலாம். வெளிப்புறத்தில் உள்ள பெரிய பிரகாரம், நபர்கள் ஒன்று கூடும் இடம் என்று தெளிவாக பொருள்படுகிறது. இது பலரை கூடிவரச் செய்வதற்கு திறன் கொண்டது. இந்த உலகம் எவ்வாறு ஒருமித்து, தேவ ஆராதனையில் ஒருவரோடு ஒருவர் ஐக்கியப்படுவார்கள் என்பதை இந்த ஆராதனை கூடம் விளக்குகிறது.

உள் பிரகாரத்தில் காணப்படும் எட்டு படிகள் ஒருவரை ஆவிக்குரிய பரிபூரண நிலைக்கு முழுமையாக உயர்த்துகிறது. இது மனித பூரணத்தை காட்டிலும் ஒரு படி உயர்வானது. பரிபூரண மனிதர், "தேவதூதர்களை விட சற்று சிறியவர்களாக" (சங்கீதம் 8:5) இருப்பதால், பரிபூரண மனுக்குலத்திற்கும், ஆவிக்குரிய ஜீவிகளுக்கும் உள்ள வேறுபாடு பெரியதல்ல.

பத்து படிகள் மட்டத்தில் ஆலயம் இருக்கிறது என்று செப்டுவாஜின்ட் கூறினாலும், அது அனைத்து அறிஞர்களாலும் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. படிகளின் எண்ணிக்கையைப் பற்றி கெயில் மற்றும் டெலிட்ஸ் கூறும்போது, "எல்லா நிகழ்தகவுகளிலும் (வாய்ப்புகளிலும்) ஏழுபது என்ற அனுமானம் மட்டுமே உள்ளது, மேலும் படிகளின் எண்ணிக்கை குறிப்பிடப்படவில்லை." ஆலயத்திற்கு செல்லும் மண்டபத்தை விவரிக்கும் போது, எசேக்கியேல் 40:49 ம் வசனத்தில் வெறும் "படிகள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, படிகளின் எண்ணிக்கை தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை என்றால், மனித மட்டத்தில், அழியாமையை நாம் தெளிவாக புரிந்துகொள்ள முடியாது என்பதே பாடமாகும். வெளிப் பிரகாரத்தின் ஏழு படிகள், மனித பரிபூரணத்தை அடையாளப்படுத்தும் என்பதை நாம் புரிந்துகொள்ளலாம். உள் பிரகாரத்தில் எட்டு படிகளினால் காண்பிக்கப்பட்ட, ஆவிக்குரிய நிலை பரிபூரண மனித நிலையைவிட சற்று உயர்வாக இருப்பதால், அந்த நிலையைக் குறித்தும் நாம் கொஞ்சம் புரிந்துகொள்ளலாம். ஆனால் அழியாமையைப் பற்றி சரியாக நாம் புரிந்துகொள்ள முடியாது. இது மற்ற எல்லா நிலைகளை காட்டிலும் மிக உயர்வாக இருப்பதை நாம் அறிவோம். தெய்வீக நிலையைக் குறித்த இந்த குறைவான அறிவைப் பற்றி அப்போஸ்தலனாகிய பவுல் விவரிக்கிறார். "இப்பொழுது கண்ணாடியிலே நிழலாட்டமாய்ப் பார்க்கிறோம், அப்பொழுது முகமுகமாய்ப் பார்ப்போம். இப்பொழுது நான் குறைந்த அறிவுள்ளவன், அப்பொழுது நான் அறியப்பட்டிருக்கிறபடியே அறிந்துகொள்ளுவேன்." (1கொரிந்தியர் 13:12)

### வாசல்கள்

வெளி பிரகாரத்தில் மூன்று வாசல்களும், உள் பிரகாரத்தில் மூன்று வாசல்களும் இருந்தது. ஒவ்வொரு வாசலும் ஒரே மாதிரியாக இருந்தது. அது 17½ அடி அகலமும் 87½ அடி நீளமுமாக இருந்தது. அவைகள் அழகாக வடிவமைக்கப்பட்டு, வளைவுகளையும், ஜன்னல்களையும் மற்றும் 105 அடி உயரமான மகத்தான கம்பங்களை கொண்டிருந்தது. ஒருவர் அந்த வாசலின் நீண்ட நடைபாதையில் நடந்து செல்லும்போது, இருபுறமும் மூன்று அறைகளைக் கவனிக்கலாம். (4 ம் வரைபடம் காண்க) இந்த அறைகள் ஒவ்வொன்றும் 10½ அடி சதுரமாகவும் ஒரு சிறிய சன்னலும் கொண்டிருந்தது.

ஆராதனை ஸ்தலத்திற்குள் நுழைவதற்கு முன், சில தேவைகளை பூர்ததி செய்யப்பட வேண்டும் என்று அவர்கள் கூறுகிறபடியால், இந்த அறைகள் காவலர் அறைக்கான ஆய்வு அறைகளாகத் தெரிகிறது.(வரை படம் 4ஐ காண்க) புதிய எருசலேமின் படத்தில், தீட்டுப்பட்டதும், அருவருப்பானதும் அல்லது எந்தவிதமான பொய்யும் அதற்குள் செல்ல அனுமதிக்கப்படாது. (வெளிப்படுத்தல் 21:27) அதே பாடம் இந்த ஆய்வு அறைகளிலும் காட்டப்பட்டுள்ளது. இந்த ஆலயம் "தீட்டுப்படுத்த"(அசுத்தம்) அனுமதிக்க கூடாது என்று தேவன் கட்டளையிட்டிருக்கிறார். (எசேக்கியேல் 43:7) ஒருவர் வாசலின் வழியாக செல்வதற்கு முன்பே, வெளி பிரகாரத்தின் ஏழு படிகளை ஏறும்போதே, பரிபூரணம் அடைவதற்காக பாதை தொடங்கும். ஒருவர் அடையாளமாக அந்த வாசலின் வழியாக செல்லும்போது, சரியான நோக்கங்கள் மற்றும் நேர்மை உடையவரா என்று சோதிக்கப்படுகிறார். சபையின் பெரும் நம்பிக்கைக்காக பெரும்பாலும் மேற்கோள் காட்டப்பட்ட ஒரு பத்தியில் உள்ள கொள்கையை, பூமிக்குரிய இராஜ்யத்தில் தேவனை ஆராதிக்க வருகிறவர்களுக்கு பயன்படுத்தப்படலாம். "இவ்விதமாய், நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய

இயேசுகிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும்."(2பேதுரு1:11) மகிமை நிறைந்த ஆராதனை ஸ்தலத்திற்குள் இந்த வாசல்கள், தேவனுடைய இராஜ்யத்தின் நீதியான பிரமாணங்களுக்கு அடிபணிய ஆயத்தமாக உள்ள அனைவருக்கும் மிக விரிவான நுழைவாயிலாக உள்ளது!

## கிழக்கு வாசல் முத்தரிக்கப்படுதல்

"பின்பு, அவர் என்னைக் கிழக்குக்கு எதிரே பரிசுத்த ஸ்தலத்துக்குப் புறவாசல் வழியே திரும்பப்பண்ணினார்; அது பூட்டப்பட்டிருந்தது. அப்பொழுது கர்த்தர் என்னைநோக்கி: இந்த வாசல் திறக்கப்படாமல் பூட்டப்பட்டிருக்கும்; ஒருவரும் இதற்குள் பிரவேசிப்பதில்லை; இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் இதற்குள் பிரவேசித்தார், ஆகையால் இது பூட்டப்பட்டிருக்க வேண்டும். பின்பு அவர் என்னை வடக்கு வாசல்வழியாய் ஆலயத்தின் முகப்பிலே அழைத்துக் கொண்டுபோனார்; இதோ, கர்த்தருடைய ஆலயம் கர்த்தருடைய மகிமையால் நிறைந்ததை நான் கண்டு, முகங்குப்புற விழுந்தேன்." (எசேக்கியேல் 44:1,2, 4)

தேவனுடைய மகிமை வெளிபிரகாரத்தின் கிழக்கு வாசல் வழியாக சென்றபின், அது மீண்டும் திறக்கப் படாதபடிக்கு, முத்தரிக்கப்பட்டது. பின்னர், தேவனுடைய மகிமை ஆலயத்திற்குள் நுழைந்தது. இந்த நிகழ்வு பிரதிஷ்டையின் போது நடந்தது மற்றும் கூடார பண்டிகை மற்றும் சாலோமோனின் ஆலய பிரதிஷ்டையின் போது இதே போன்ற நிகழ்வுகள் நடந்ததை நமக்கு நினைவுப் படுத்துகிறது. (யாத்திராகமம் 40:34, 2நாளாகமம் 5:14)தேவனுடைய மகிமை நுழையக்கூடிய இந்த ஒவ்வொரு ஆராதனை ஸ்தலமும், அவருடைய பிரசன்னத்தையும், ஏறெடுக்கப்படும் ஆராதனையின் அங்கீகரிப்பையும் குறிக்கிறது.

"நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறதுபோலக் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்" (2கொரிந்தியர் 3:18) என்று கூறி, அப்போஸ்தலனாகிய பவுல் தேவனுடைய மகிமையையும் சபையையும் இணைக்கிறார். சபையானது, சீர்ப்படுத்தப்பட்டு, அவரது சாயலுக்கு வளர்ச்சி அடைந்து, தேவனுடைய மகிமையின் ஒரு பகுதியாக மாறும். எனவே, கிழக்கு வாசல் அடைக்கப்படுவது, பரம அழைப்பு முடிவடைகிறதோடு தொடர்புடையதாக தோன்றுகிறது. பத்து கன்னிகைளின் உவமையில், ஐந்து புத்தியுள்ள கன்னிகைகள் உள்ளே பிரவேசித்தவுடன் கதவு அடைப்படுவதிலும் இது காட்டப்படுகிறது. (மத்தேயு 25:1-13. R3624 வும் காண்க) ஆவிக்குரிய பாபிலோனின் அழிவைப் பற்றி விவாதிக்கும்போது, ஆறாவது வாதையை, "கிழக்கு இராஜாக்களின் வழி" என்று யோவான் விவரிக்கிறார். இது இந்த பூமியின் மேல் இயேசுவும், சபையும் தங்களுடைய ஆட்சியை செயல்படுத்த ஆயத்தமாக இருப்பதைக் குறிக்கிறது.

## வடக்கு மற்றும் தெற்கு வாசல்கள்

கிழக்கிலிருந்து வரும் இந்த மகிமையான பாதை ஒரு நாள் இந்த உலகத்திற்கு மூடப்பட்டாலும், தேவனை அணுகுவதற்கு மற்றொரு வழி இருக்கும். ஆலயத்தின் வடக்கு மற்றும் தெற்கு வாசல்களின் வழியாக மனுக்குலம் தேவனை தொடர்பு கொள்ளலாம் என்று காட்டப்பட்டுள்ளது. "தேசத்தின் ஜனங்கள் குறிக்கப்பட்ட நாட்களில் கர்த்தருடைய சந்நிதியில் வரும்போது, ஆராதனை செய்கிறதற்காக வடக்கு வாசல் வழியாய் உட்பிரவேசித்தவன் தெற்கு வாசல் வழியாய்ப் புறப்படவும், தெற்கு வாசல் வழியாய் உட்பிரவேசித்தவன் வடக்கு வாசல் வழியாய்ப் புறப்படவும் கடவன்; தான் பிரவேசித்த வாசல் வழியாய்த் திரும்பிப் போகாமல், தனக்கு எதிரான வழியாய்ப் புறப்பட்டுப் போவானாக" (எசேக்கியேல் 46:9) எதிர் வாசல்களிலிருந்து நுழைந்து வெளியேறுவது வழக்கத்திற்கு மாறானதாக தோன்றலாம். ஆனால் போக்குவரத்தில், ஒவ்வொரு நபரும் உள் பிரகாரத்தில் துல்லியமான மையத்தில் இருக்கும் அந்த பலிபீடத்தை கடந்து செல்லவேண்டும். இந்த பலிபீடம் முழு ஆலய Sanctuary வளாகத்தின் மையமாகவும் உள்ளது.

இந்த பெரிய பலிபீடத்தின் முன் கடந்து செல்வது என்பது, நம்முடைய ஆண்டவரின் பலியின் மூலம் மனுக்குலம், தேவனை ஆராதிக்கும் பாக்கியத்தைப் பெறும் என்பதை அழகாக நினைப்பூட்டுகிறது. ஒப்புரவாக்குதலின் விலையை செலுத்தும்படியாக, தூண்டப்பட்ட இயேசுவின் அன்பை அங்கீகரிக்காமல் ஒருவரும் தேவனிடம் வரமாட்டார்கள். உள் பிரகாரத்தின் கிழக்கு வாசலைக் கடந்து செல்வோர், உள் பிரகாரத்திற்கு ஏற அனுமதிக்கப்பட மாட்டார்கள், ஆனால் அவர்கள் பலிபீடத்தையும், ஆலயத்தையும் வாசல் வழியாகக் காண முடியும். உட்பிரகாரம் ஆவிக்குரிய நிலையை அடையாளப்படுத்துவதால், பலிபீடம் கடந்த காலங்களில் ஆவிக்குரிய தளத்தில் இருந்தவர்களால் வெளிப்படுத்தப்பட்ட தியாக பலியின் நினைவுகூருதலாகக் கருதபடலாம் என பலி பீடத்தைப் பற்றிய உலகின் தொலைதூர பார்வையானது அறிவுறுத்துகிறது.

## கற்பிப்பதில் பிரபுவின் பங்களிப்பு

"பின்பு, அவர் என்னைக் கிழக்குக்கு எதிரே

பரிசுத்த ஸ்தலத்துக்குப் புறவாசல் வழியே திரும்பப் பண்ணினார்; அது பூட்டப்பட்டிருந்தது. அப்பொழுது கர்த்தர் என்னைநோக்கி: இந்த வாசல் திறக்கப்படாமல் பூட்டப்பட்டிருக்கும்; ஒருவரும் இதற்குள் பிரவேசிப்பதில்லை; இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் இதற்குள் பிரவேசித்தார், ஆகையால் இது பூட்டப்பட்டிருக்க வேண்டும். இது அதிபதிக்கே உரியது, அதிபதி கர்த்தருடைய சந்நிதியில் போஜனம் பண்ணும்படி இதில் உட்காருவான்; அவன் வாசல் மண்டபத்தின் வழியாய்ப் பிரவேசித்து, மறுபடியும் அதின்வழியாய்ப் புறப்படுவான் என்றார்." (எசேக்கியேல் 44:1-3)

ஆண்டவருடைய மகிமை கடந்து சென்றபின் கிழக்கு வாசல் அடைக்கப்பட்டதல், பிரபு, ஆலய வளாகத்திற்குள் நுழைவதற்கு வடக்கு அல்லது தெற்கு வாசல் வழியாக நுழைய வேண்டும். பின்னர் அவர் மூடப்பட்ட கிழக்கு வாசல் உள்புறம் சென்று, ஆண்டவருக்கு முன்பாக உட்கார்ந்து அப்பம் புசிப்பார். வடக்கு அல்லது தெற்கிலிருந்து நுழைய வேண்டும் என்ற காரியம், இது ஒரு பூமிக்குரிய வகுப்பு என்று கருதப்படுகிறது. ஆனால் அது விசேஷித்த செயல்பாடு கொண்ட ஒன்றாகும். கிழக்கு வாசல் அடைப்படுவதற்கு முன் அதற்குள் பிரவேசித்தவர்களோடு, அவர்களின் விசுவாசத்தில் நெருங்கிய தொடர்பை கிழக்கு வாசலில் உட்கார்ந்திருப்பது விவரிக்கிறது. இந்த நபர்கள் சங்கீதம் 45: 16ல் குறிப்பிடப்பட்டவர்களும், "பூமியெங்கும் பிரபுக்கள்,..." என்று அழைக்கப்படும் பழைய ஏற்பாட்டின் முற்பிதாக்களை குறிக்கலாம். இராஜ்யம் எவ்வாறு இயங்கும் என்ற சத்தியத்தை, உலகிற்கு கொடுக்க உதவுவதே இவர்களின் பங்காக இருக்கும். கிழக்கு மண்டபத்தில் அமர்ந்திருப்பது, வெளி பிரகாரத்திற்கு அருகிலுள்ள ஒரு நிலையைக் குறிக்கிறது. ஆராதிப்பதற்காக வெளி பிரகாரத்திற்கு வருபவர்களோடு, ஒவ்வொரு பிரபுவும், தொடர்புக்கொள்ள இது அனுமதிக்கிறது. இந்த உயர்குடி ஆண்களும் பெண்களும் அளித்த அற்புதமான சம்பாஷணைகளையும் பிரசங்கங்களையும் நாம் நன்கு கற்பனை செய்யலாம். என்ன ஒரு ஆசீர்வாதமும், உதவியாகவும் இருக்கும்.

### பிரபு காணிக்கைகளை ஆயத்தப்படுத்தல்

"இஸ்ரவேல் வம்சத்தார் கூடிவரக் குறிக்கப்பட்ட சகல பண்டிகைகளிலும் மாதப்பிறப்புகளிலும் ஓய்வுநாட்களிலும் தகனபலிகளையும் போஜனப் பலிகளையும் பானபலிகளையும் செலுத்துவது அதிபதியின் மேல் சுமந்த கடனாயிருக்கும்; அவன் இஸ்ரவேல் வம்சத்தாருக்காகப்பாவநிவாரணம்பண்ணும் படிக்குப் பாவநிவாரணபலியையும் போஜனபலியையும் தகனபலியையும் சமாதானபலியையும் படைப்பானாக." (எசேக்கியேல் 45:17)

பலி செலுத்துவதற்காக மிருகங்களை பிரபுக்கள் வழங்கும் வேலையே, ஆராதனையின் முக்கிய அம்சமாகும். இந்த நடைமுறையில் பிரபுக்களுக்கு தேவையான எண்ணிக்கையிலான மிருகங்களை, உள்பிரகாரத்தின் படிகளின் மேல் ஏறுவதற்கு முன்னிருக்கும் ஒரு மேடைக்கு கொண்டு வருகிறார்கள். உள்பிரகாரத்தின், பலிபீடத்திற்காக இந்த மேடையில், மிருகங்கள் ஆயத்தம் செய்யப்படுகிறது. ஆயத்தம் செய்த மிருகங்களை ஆசாரியர்கள் பலிபீடத்தின் மேல் வைத்து, அதன் இரத்தத்தை தெளித்தார்கள். ஆனால் தேவையான எண்ணிக்கையிலான மிருகங்களை வழங்குவதே பிரபுவின் மிக முக்கிய பங்காகும். தனிப்பட்ட ஆராதனை முறைமைகளை, இந்த உலகம் புரிந்துகொள்வதற்கு உதவக்கூடிய முற்பிதாக்களின் பங்கை இந்த செயல் முறை விவரிக்கிறது. சுவிசேஷ யுகத்தின் பலிகளினால் பலிபீடம் பரிசுத்தப்படுத்தப்பட்டது என்பதையும், இப்போது தங்களுடைய சொந்த காணிக்கைகளும் தேவனால் அங்கீகரிக்கப்படும் என்பதையும் மனுக்குலம் புரிந்துகொள்ளும். பலிகளின் காணிக்கைகளில், பிரபுக்களும், ஆசாரியத்துவமும் ஒன்றிணைந்து செயல்படுவதால் அவர்களுக்கிடையே கூட்டுறவு காணப்படுகிறது. ஓய்வு நாட்கள், அமாவாசை மற்றும் பண்டிகையின் நாட்களில் பலிகள் கட்டாயப்படுத்தப் பட்டிருந்தது. ஏழாம் நாளாகிய ஓய்வு நாள், இந்த பலிகளுக்கான நேரம் அமைப்பு, ஆயிரவருட ஆட்சியில் இருக்கும் என்று கருதப்படுகிறது. அமாவாசை new moon, பழைய மோசேவின் பிரமாணத்தை போன்ற ஒரு புதிய சட்ட ஒழுங்கைக் குறிக்கும், ஆனால் அது சிறந்த பலிகளின் அடிப்படையில் இருக்கும்.

### காணாமற்போன பண்டிகைகள்

46ம் அதிகாரத்தில் சில பண்டிகைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இருப்பினும், மோசேயின் நியாயப்பிரமாணத்தின் அனைத்து பண்டிகைகளும் எசேக்கியேலின் தரிசனத்தின் பகுதியாக இருக்கவில்லை. வார பண்டிகைகள் (பெந்தெகொஸ்தே), எக்காள பண்டிகை, அல்லது பாவநிவாரண நாள் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. அந்த பண்டிகைகள், முதன்மையாக சுவிசேஷ யுகத்தை அடையாளப்படுத்துவதே, அவைகள் காணாமல் போனதற்கு காரணமாக இருக்கலாம். இயேசுவின் மரணத்திற்கு 50 நாட்களுக்குப் பின், அந்த பெந்தெகொஸ்தே நாளில் தான் ஆதிகால விசுவாசிகள் மீது பரிசுத்த ஆவி இறங்கியதால், பெந்தெகொஸ்தே நாள் நேரடியாக சபையோடு இணைக்கப்பட்டுள்ளது.

1874 ஆம் ஆண்டில், ஆண்டவர் திரும்பியபோது ஊதப்பட்ட எக்காளம், எக்காளங்களின் பண்டிகையை

குறிக்கிறது. இது இராஜ்யத்தில் கடந்தகால நிகழ்வாக இருக்கும். (1தெசலோனிக்கேயர் 4:16காண்க) பாவ நிவாரண நாளின் பண்டிகை, சுவிசேஷயுகத்தில், ஈடு பலி, பாவநிவாரணபலியாக வழங்கப்பட்ட காலத்தின் நினைவுகூருதலாக உள்ளது. எனவே இந்த பண்டிகைகள் முதன்மையாக இராஜ்யத்தில், கடந்த கால நிகழ்வுகளை குறிப்பிடுவதால், எசேக்கியேலின் தரிசனத்திலிருந்து இவைகள் விலக்கப்பட்டுள்ளது. .

பஸ்கா மற்றும் கூடாரங்களின் பண்டிகைகள் தக்கவைக்கப்பட்டன

எசேக்கியேலின் தரிசனத்தில் பஸ்கா பண்டிகை மற்றும் கூடாரங்களின் பண்டிகை மட்டுமே விவரிக்கப் பட்டுள்ளது. இந்த இரண்டு பண்டிகைகள் விசேஷமாக ஏன் குறிப்பிடப்படுகின்றன? ஏனெனில், இவைகள் நேரடியாக உலகத்துடன் தொடர்புள்ளவைகள். பஸ்கா பண்டிகை தலைச்சன் பிள்ளைகளின் விடுதலைக்காக மட்டுமல்ல, எகிப்திய அடிமைத் தனத்திலிருந்து இஸ்ரயேல் தேசத்திற்கு விடுவிக்கப் பட்டதையும் கொண்டாடப்பட்டது. பாவம் மற்றும் மரணத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டதால், இது மனுக்குலத்தின் விடுதலையை ஒரு விரிவான நிழலாக காட்டுகிறது. நம்முடைய ஆண்டவர் இந்த உலகின் பஸ்கா ஆட்டுக்குட்டியாக தொடர்ந்து நினைவுபடுத்துவதையே இது குறிக்கும்.

கூடாரங்களின் பண்டிகைத் தக்கவைக்கப்பட்டதும் சுவாரஸ்யமானது. ஆதிகால பஸ்கா பண்டிகை, நாற்பது வருடங்கள் வனாந்தரத்தில் அலைந்ததை நினைவு கூருகிறது. அப்போது இஸ்ரயேலர்கள் சாவடிகளில் அல்லது கூடாரங்களில் வசித்தார்கள். இது பாவம் மற்றும் மரணத்தின் வனாந்திர வழியாக மனிதனின் 6,000 வருட பயணத்தின் ஒரு நிழலாக உள்ளது. இந்த இரண்டு விருந்துகளில் ஒவ்வொன்றும், மனுக்குலத்தை அடையாளமாக உள்ளடக்கியிருப்பதால், அவைகள் எசேக்கியேலின் தரிசனத்தில் ஒரு பகுதியாக உள்ளது. அவர்களின் மிக பெரிய விடுதலையில், உலகம் மகிழ்ச்சியடையக்கூடிய சந்தர்ப்பங்களாக இது இருக்கும்.

## பெரிய பலிபீடம் மற்றும் பிரதிஷ்டையின் பண்டிகை

பலிபீடம் நான்கு நிலைகளைக் கொண்டிருந்தது மற்றும் ஆசரிப்புக் கூடாரத்தின் தாமிர பலிபீடத்தை விட மிகப் பெரிதாக இருந்தது. (வரை பாடம் 3)பலிபீடத்தின் மேற்பகுதி 12 முழ சதுரமாக இருந்தது. இது தேவாலயத்தின் எண்ணிக்கையை சித்தரிக்கலாம். (12 x 12 = 144) பலிபீடத்தின் மேற்புறம் ஒவ்வொரு பக்கமும் 21 அடி என்பதை இந்த அளவீடுக் குறிக்கிறது. பலிபீடம் தாமே, தரையிலிருந்து மூன்று அடி அளவில் 19.25 அடி உயரத்தை எட்டியது. இந்த மகத்தான பலிபீடம் தூரத்திலிருந்து கூட பார்க்கும்படியான ஒரு முக்கிய அம்சமாக இருந்தது.

ஆலயம் செயல்பாட்டுக்கு வருவதற்கு முன், அது பிரதிஷ்டைச் செய்யவேண்டியிருந்தது. இது ஏழு நாள் நீடித்தது. பாவநிவாரண நாளில் செய்யப்பட்டது போல, முதலில் பாவநிவாரண பலியாக காளை பலி செலுத்தப்பட்டது. (எசேக்கியேல் 43:19) பாவநிவாரண நாளில் செய்ததைப் போல, இந்த இளம் காளையும் இயேசுவைக் குறிக்கிறது. இந்த பலியிலிருந்து எடுக்கப்பட்ட இரத்தம் நான்கு கொம்புகளின் நுனிகளிலும், சட்டத்தின் நான்கு கோடிகளிலும், பலிபீடத்தின் அலங்காரமான ஓரங்களிலும் பூசப்பட்டது. ஆசரிப்புக் கூடாரத்தை காட்டிலும் இதில் குறிப்பிடத்தக்கதாக இரத்தம் தெளிக்கப்படுகிறது. வெளிப் பிரகாரத்தில் இருப்பவர்கள் இதை பார்க்கும்படியாக இப்படி தெளிக்கப்பட்டது. ஒப்புரவாக்குதலின் நாளில் கிருபாசனத்தின் மேலும் இரத்தம் தெளிக்கப்பட்டது போல் அல்ல, பலிபீடத்தின் மேல் மட்டுமே தெளிக்கப்பட்டது. இந்த ஆலயத்தில் உடன்படிக்கைப் பெட்டி எதுவும் இல்லை, ஆகவே, ஜனங்களின் பார்வையில், அவர்களுக்கு சாட்சியாக காணப்படுவதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது.

ஆசரிப்புக் கூடாரத்தைப் போலவே, காளையின் சரீரம் ஆலயத்திற்கு வெளியே எரிக்கப்பட இருந்தது. பலிபீடத்தின் மீது எந்த பாகங்கள் வைக்கப்பட்டது என்று நமக்கு சொல்லப்படவில்லை, ஆனால் பலிகளை தொடர்ந்து, சிறுநீரகங்கள் மற்றும் கல்லீரல் பலி செலுத்தப்பட்டதாக நாம் யூகிக்கலாம். இந்த இரண்டு உறுப்புகளும் சுத்திகரிப்பின் நோக்கங்களை காட்டுகிறது மேலும், பாவத்திலிருந்து நம்முடைய இனத்தை தூய்மைப்படுத்தும் நிஜமான பாவ நிவாரணபலிகளை இது குறிப்பிடுவது மிக பொருத்தமாக உள்ளது.

பிரதிஷ்டை பண்டிகையின் மீதமுள்ள ஒவ்வொரு நாட்களிலும்(2-8), வெறும் ஒரு ஆடு, காளையைப் போலவே பலியிடப்பட்டது. ஒப்புரவாக்குதலின் நாளில் உள்ள ஒற்றுமைகளை மீண்டும் நாம் கவனிக்கலாம். இந்த இரண்டாம் பாவநிவாரன பலி, காளையின் முதன்மையான பாவநிவாரனபலியை சார்ந்தே இருந்தது. மேலும் இது சபையின் பாவநிவாரணபலியை சித்தரிக்கிறது. இயேசுவின் முந்தைய பலியினால் இந்த பலி

ஏற்றுக்கொள்ளப்படுகிறது. ஆனால் முதலாம் நாள் காலை பலி செலுத்தப்பட்டபின், அதை தொடர்ந்து ஏழு நாட்களில் ஏழு ஆடுகளின் பலி செலுத்தப்படுகிறது. ஆட்டை பலிசெலுத்தும் அந்த ஏழு நாட்கள், சுவிசேஷ யுகத்தின் ஏழு நிலைகளை சித்தரிப்பது எவ்வளவு பொருத்தமாக உள்ளது. எசேக்கியேலின் தரிசனத்தில் முதல் நாளின் பலி, அத்துடன் ஏழு நாள் பலிகள் அனைத்தும் பலிபீடத்தை தூய்மைப்படுத்தும் நோக்கம் கொண்டவை. இது இயேசுவே சுத்திகரிப்புக்கு அடிப்படையானவர் என்றும், அந்த சுத்தகரிப்பின் வேலையில், சபை பங்கெடுப்பதையும் காட்டுகிறது. (ஜனங்களை) ஆனால் எசேக்கியேலின் ஆலயத்தின் பலிகளில், நமக்கு வேறுப்பட்ட ஒரு கண்ணோட்டம் கொடுக்கப்பட்டுள்ளது. ஆசரிப்புக் கூடாரத்தின் முதன்மையான பலிகள் எதிர்காலத்தில் நடக்கவிருக்கும் விஷயங்களை சுட்டிக்காட்டுவது போல, எசேக்கியேலின் ஆலயத்தின் பலிகள் கடந்த காலத்தில் நிகழந்த இயேசு மற்றும் சபையின் பலிகளை சுட்டிக்காட்டுகிறது. தேவனோடு தொடர்புக் கொள்ளுவதற்காக, இயேசுவும், சபையும் என்ன செய்தார்கள் என்பதற்கான உண்மையின் ஒரு நினைவாகும்.

ஒரு புதிய துவக்கத்தைக் குறிக்கும், எட்டாம் நாளில், பலிபீடம் பரிசுத்தமாக்கப்பட்டு, ஜனங்களின் சமாதான பலிகளைப் பெற்றுகொள்ள ஆயத்தமானது. மனுக்குலத்திற்கு, அது ஒரு புதிய துவக்கமாக இருக்கும். அறிவினால் புதுபிக்கப்பட்ட மனதோடு, மனுக்குலம் தேவனை நம்பி, விருப்பத்துடன் அவருக்கு கீழ்ப்படிந்து அவருக்கு முன் அவரை ஆராதிப்பார்கள்.

## ஆலயம்

அதாவது ஆசரிப்புக் கூடாரம் 18 முழமும், எசேக்கியேலின் ஆலயம் 21 முழமும் என பொருத்தமான அளவுகளை பயன்படுத்தும் போது, ஆலயம் ஆசரிப்புக் கூடாரத்தைவிட இரண்டு மடங்கு பெரியதாக இருந்தது. ஆசரிப்புக் கூடாரத்தின் நீளம் முப்பது முழமும் (18") (யாத்திராகமம் 26:16,18), ஆலயம் 60(21") முழ நீளமாகவும இருந்தது. (எசேக்கியேல் 41:2,4) ஆங்கிலத்தில், ஆலயத்தின் பரிசுத்த ஸ்தலத்தின் அளவு 70 அடி நீளமும், 35 அடி அகலமுமாக இருந்தது. மகா பரிசுத்த ஸ்தலம் 35 அடி சதுரமாக இருந்தது. இரட்டிப்பான இந்த அளவு எசேக்கியேலின் ஆலயம் ஆசரிப்புக் கூடாரத்தைவிட மகிமை வாய்ந்தது என்ற உண்மையை பிரதிபலிக்கிறது. (வரைபடம் 7 காண்க)

எசேக்கியேலின் ஆலயத்தை ஆசரிப்புக் கூடாரத்துடன் ஒப்பிடுகையில், ஆலயத்தில் இல்லாதவைகளை நாம் கவனிக்க வேண்டியது அவசியம். ஆசரிப்புக்கூடாரத்தின் பரிசுத்த ஸ்தலம் மற்றும் மகா பரிசுத்த ஸ்தலத்தின் உள்ள அனைத்தும் எசேக்கியேலின் ஆலயத்திற்குள் வைக்கப்பட்டது. மரத்தினால் செய்யப்பட்ட வெறும் மேஜை மட்டுமே, பரிசுத்த ஸ்தலத்தின் காணப்பட்ட ஒரே மரச்சாமானாக இருந்தது. (எசேக்கியேல் 41:22) இது மூன்று முழம் (5¼') உயரமும், இரண்டு முழம் (3½') சதுரமாக இருந்தது. குத்துவிளக்கும் அல்லது சமூகத்தப்பங்களும் அங்கு ஏன் இல்லை? இவைகள் இல்லாததற்கு அர்த்தமுண்டு.

ஆசரிப்புக்கூடாரத்தின் பரிசுத்த ஸ்தலம், சபையின் ஆவிக்குரிய நிலையையும், சுவிசேஷ யுகத்தின் இருண்ட காலத்தில் அதனுடைய (சபையின்) அறிவொளியையும் சித்தரிக்கிறது. தேவனையும் அவருடைய திட்டத்தைப் பற்றி பொதுவான அறியாமையின் காலத்தில் சபைக்கு வழங்கப்பட்ட ஆவிக்குரிய ஆகாரத்தை இந்த சமூகத்து அப்பங்கள் சித்தரிக்கிறது. ஆலயத்தின் பரிசுத்த ஸ்தலத்தில் இந்த உருப்படிகள் இல்லை என்ற உண்மையானது, இது சுவிசேஷ யுகத்தின் சித்திரம் அல்ல என்றும் அது பின்வரும் காலத்தில், பரிசுத்தவான்களுக்கு இந்த விசேஷித்த ஏற்பாடுகள் இனி தேவைப்படாது என்பதையும் அடையாளப்படுத்துகிறது. அதற்குபின் ஆலயத்தின் வெளிபுறத்தில் கவனம் திருப்பப்படுகிறது. இந்த ஊழியங்கள் முதன்மையாக, பொது ஜனங்கள் பார்க்கவும் அதை புரிந்துபாராட்டுவதற்குமே.

இருப்பினும், இந்த பரிசுத்த ஸ்தலம் வெறுமையான ஒரு காலி அறை அல்ல. மரத்தினால் செய்யப்பட்ட அந்த எளிமையான மேஜை, ஆசரிப்புக் கூடாரத்தின் தூப பீடத்திற்கு ஒத்திருக்கிறது. ஆனால் கரி நெருப்பு உண்டாக்குவதற்காக எந்த ஒரு அமைப்பும் அங்கு அனுமதிக்கப்படவில்லை. ஜெபங்களும், துதிகளும் சரியாக ஏறெடுக்கப்படும் ஆனால், அவைகள் இனி ஒரு போதும் தகனிக்கும் அக்கினியான சோதனைகள் மற்றும் உபத்திரவங்களோடு தொடர்புடையதாக இருக்காது என்று இது சுட்டிக் காட்டுகிறது.

பரிசுத்த ஸ்தலம் மற்றும் மகா பரிசுத்த ஸ்தலத்தில் சுவர்களில், மரத்தில் செதுக்கப்பட்ட பெரிய கேரூபீன்கள், மிக நேர்த்தியாக வடிவமைக்கப்பட்டிருந்தது. (எசேக்கியேல் 41:16-19) ஒவ்வொரு உருவத்திற்கும் இரண்டு முகங்கள் இருந்தன, ஒன்று மனித முகம், மற்றொன்று சிங்கத்தின் முகம். ஒவ்வொரு கேரூபிற்கும் இடையில் ஒரு பேரீச்சமரம் செதுக்கப்பட்டிருந்தது. கேரூபின் முகங்கள் அவைகளை நோக்கி பார்த்தது. (6ம் வரைபடம் காண்க) மற்ற ஆய்வுகளில் நாம் பார்த்தபடி, மனிதனின் முகம் அன்பை குறிக்கிறது, அதே நேரத்தில்

சிங்கத்தின் முகம் வல்லமையை காட்டுகிறது. அன்பும் வல்லமையும் இணைந்து செயல்படும் என்பதை, ஒரே கேரூபில் உள்ள இரு முகங்கள் காட்டுகிறது. இது ஆசரிப்புக்கூடாரத்தில் உடன்படிக்கை பெட்டியில், இரண்டு கேரூபீன்கள் இரத்தம் தெளிக்கப்படுவதற்காக கிருபாசனத்தின் மேல் காத்திருப்பதற்கு ஒப்பாக உள்ளது. இரத்தம் தெளிக்கப்பட்டவுடன், தேவனுடைய இந்த தூதுவர்கள் பறந்து சென்று தங்களுக்கு நியமிக்கப்பட்ட ஆசீர்வாதமான வேலையை நிறைவேற்றுவார்கள். இன்று, பாவத்தையும், தீமையையும் கட்டுப்படுத்துவதற்கு தேவன் ஏன் தனது வல்லமையைப் பயன்படுத்தவில்லை என்பதை இன்று உலகம் புரிந்துகொள்ளவில்லை. ஆனால் இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும்போது, அனைவருக்கும் அவருடைய ஆசீர்வதங்களை வழங்கும்படியாக, தேவனுடைய வல்லமை, அவருடைய அன்போடு இணைந்து செயல்படுவதை அனைவரும் காண்பார்கள்.

92ம் சங்கீதம், "ஓய்வு நாளுக்கான" ஒரு சங்கீதம் என்று விவரிக்கப்பட்டுள்ளது. "கர்த்தாவே, உமது சத்துருக்கள் அழிவார்கள்; உமது சத்துருக்கள் அழிந்தே போவார்கள்; சகல அக்கிரமக்காரரும் சிதறுண்டு போவார்கள். நீதிமான் பனையைப்போல் செழித்து, லீபனோனிலுள்ள கேதுருவைப்போல் வளருவான்." (சங்கீதம் 92:9,12) புதிய சிருஷ்டிகள் அதன் அனைத்து எதிரிகளையும் ஜெயிப்பதற்கு தேவ தூதர்கள் எவ்வாறு பயன்படுத்தப்பட்டனர் என்பதை பேரீச்சமரங்களை நோக்கி இருக்கும் இந்த கேரூபீன்கள் அடையாளப் படுத்துவதாக தோன்றுகிறது.பரிசுத்த ஸ்தலத்தை அலங்கரிக்க இவைகள் பொருத்தமான அடையாளங்கள். சுவர்களில் காணப்படும் இதே சித்திரங்கள் ஆலயம் மற்றும் மகா பரிசுத்த ஸ்தலத்தின் கதவுகளிலும் காணப்படுகிறது. மேலும் இவைகள் அதே வெற்றி அடையக்கூடிய கருத்தையே தெரிவிக்கின்றன. அவைகள் பிரசன்னம் தேவனுடைய குணங்கள் மற்றும் அவருடைய திட்டத்தின் நிரூபணங்களாக இருக்கிறது. மேலும் பரிசுத்தவான்களின் ஜெயங்கொள்ளுகிற அனுபவத்தையும் இது நினைவுகூருகிறது.

சுவரில் காணப்படும் இந்த அழகான சிற்பங்களை தவிர, மகா பரிசுத்த ஸ்தலம் காலியாக உள்ளது. கிறிஸ்துவின் புண்ணியங்கள் அனைவருக்கும் ஒரு முறை ஏற்கனவே பயன்படுத்தப்பட்டிருப்பதினால், கிருபாசனத் தோடுள்ள உடன்படிக்கைப் பெட்டி இனி தேவையில்லை. பின்னர் பரிசுத்த ஸ்தலமும், மகா பரிசுத்த ஸ்தலமும் முந்தைய காலத்தின் நினைவூச் சின்னங்களாக நிற்கும். ஆசரிப்புக்கூடாரத்தில் பரிசுத்த ஸ்தலம் மற்றும் மகா பரிசுத்த ஸ்தலத்தை பிரிக்கக்கூடிய திரைகள் ஆலயத்தில் காணப்படாமல், அதற்கு பதிலாக இருபக்கங்களிலும் எளிதாக திறப்பதற்கு மடக்கு கதவுகளாகிய இரட்டை கதவுகள் இருந்தது. (எசேக்கியேல் 41:23, 24) இந்த உண்மை என்னவெனில், யாக்கோபின் ஏணியில் பரலோகத்திற்கு தேவதூதர்கள் ஏறுவதையும், இறங்குவதையும் இது நினைவூட்டுகிறது. மடக்கு கதவுகளால் குறிப்பிடப்படும் இலவசமான தகவல் தொடர்பு இராஜ்யத்தில் இருக்கும். பரலோகத்திற்கு ஏறெடுக்கப்படும் மனுக்குலத்தின் ஜெபங்கள் இனி ஒருபோதும் பதில் அளிக்கப்படாமல் விடப்படுவதில்லை.

### மேற்கு கட்டிடம்

ஆலயத்தின் மேற்கு திசையில் ஒரு பெரிய மூன்று மாடி கட்டிடம் இருந்தது. இந்த கட்டிடத்தின் நோக்கம் குறித்து எதுவும் தெரியவில்லை. இது ஆலயத்திற்கு பின்னால் அமைந்திருப்பதால், இது பரலோக சேனைகள், சிங்காசனங்கள், அதிகாரங்கள், வல்லமைகள், கேரூபீன்கள் மற்றும் சேராபீன்களின் வாசஸ்தலத்தை குறிக்கலாம் என்று கருதப்படுகிறது. (கொலோசேயர் 1:16) இந்த கட்டிடம் ஆலய வளாகத்தில் மிகப் பெரியதும், ஆலயத்தை நோக்கியும் அமைந்துள்ளதினால், உண்மையில் இது ஆலய வகுப்பின் ஒரு பகுதியாக இல்லாமல், ஆலய வகுப்பாரின் வேலைக்கு ஒத்துழைக்கக் கூடியதாக இருக்கலாம் என்று குறிப்பிடப்படுது மிக பொருத்தமாக உள்ளது.

### பரிசுத்தமான தேசம்

ஆசாரியர்களுக்கும், லேவியர்களுக்கும் மற்றும் பட்டணத்திற்கும், நியமிக்கப்பட்ட பகுதிக்கு வெளியே பிரபுக்களுக்கு பெரிய நிலங்கள் வழங்கப்படுகிறது. பல்வேறு வகுப்பாருக்கு நியமிக்கப்பட்ட நிலத்தின் காட்சியின் விளக்கத்திற்கு வரைபடம் 1 மற்றும் 2 ஐ பார்க்கவும். பரிசுத்த தேசத்தின் நீளம் 25,000 முழம் என்று எசேக்கியேல் 45: 1 என்று விவரிக்கிறது. 21 முழம் பயன்படுத்தும்போது, சுமார் 8.3 மைல்களுக்கு இது சமமாக காணப்படுகிறது. வடக்கில் ஆலயம் காணப்படுகிறது மேலும் ஆசாரியர்கள் வசிப்பதற்கான இடமும் அங்கு நியமிக்கப்பட்டுள்ளது. அதன் மையப் பகுதி லேவியர்களுக்கும், தெற்குப் பகுதி எருசலேமைபோல ஒரு சிறிய பட்டணம் இடம் பெற்றுள்ளது. (எசேக்கியேல் 45:1-7) பரிசுத்த தேசத்தின் கிழக்கும் மற்றும் மேற்கில் பிரபுக்கள் வசிக்க நிலம் வழங்கப்பட்டது. நிலத்தின் இந்த விசேஷித்த சொத்து, முற்பிதாக்களின் விசுவாசத்திற்கு ஒரு ஆசீர்வாதமான வெகுமதியாகும். அங்கு அவர்கள் முக்கிய பங்கு வகிப்பதினால் ஆலயத்தில் அவர்கள் இருப்பது மிக அவசியம்.

ஆலயத்தின் தெற்கு பகுதியில் இருந்து, கிழக்கு வாசலின் தெற்கு பகுதிக்கும் பாயும் ஜீவ நதி, தரிசனத்தின் மிக சுவாரஸ்யமான அம்சங்களில் ஒன்றாகும். (எசேக்கியேல் 47:1-12) ஆலய வளாகத்திற்கு வெளியே எசேக்கியேலை வழிநடத்தும் மனிதன் ஆற்றின் முதல் 1000 முழுத்தை அளவிட்டு, எசேக்கியேலை அந்த ஆற்றின் வழியே நடக்க வழிநடத்துகிறார். அவர் கணுக்கால் ஆழம் மட்டமே இருப்பதைக் காண்கிறார். அவர் மேலும் 1000 முழத்தை அளவிடுகிறார், அது முழங்கால் ஆழமாக எசேக்கியேல் காண்கிறார். மேலும் 1000 முழத்திற்குப் பிறகு தண்ணீர் இடுப்பு அளவு ஆழமாக இருந்தது. இறுதியாக, மற்றொரு 1000 முழத்திற்குப் பிறகு தண்ணீர் கடக்க முடியாத அளவுக்கு ஆழமாக இருந்தது. 4000 முழத்தின் இந்த தூரம் 7000 அடிக்கு சமம். தரிசனத்திற்குள்ளிருக்கும் இந்த உவமை, உலகத்தை சத்தியத்தின் தண்ணீருக்குள் முழுமையாக உள்ளடக்குவதற்கு முழு 7000 வருடங்கள் ஆகும் என்பதை சித்தரிக்கக்கூடும். மனிதனின் பயணத்தின் துவக்கத்தில், தேவனுடைய திட்டத்தைப் பற்றிய நம்முடைய அறிவு மேலோட்டமாக இருந்தது. ஸ்திரீயின் வித்து சர்ப்பத்தின் தலையை நசுக்கும் என்ற இரட்சிப்பின் ஒரே அறிகுறியை பெற்றிருந்தோம். (ஆதியாகமம் 3:15) நேரம் செல்ல செல்ல, "பூமியின் எல்லா ஜாதிகளும்" ஆசீர்வதிக்க ஒரு சந்ததி இருக்கும் என்ற வார்த்தை கொடுக்கப்பட்டது. (ஆதியாகமம் 22:18) நம்முடைய ஆண்டவரின் முதல் வருகையின் போது, ஒரு சிலருக்கு மட்டுமே புரியும், சத்தியத்தின் மற்றொரு பெரிய அளவிலான வெளிப்பாடு இருந்தது. ஆனால் அந்நாளில்,"சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல், பூமி கர்த்தருடைய மகிமையை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்." (ஆபகூக் 2:14) படிப்படியாக ஆற்றின் ஆழம் அதிகரிப்பது, பின்னர் காலப்போக்கில் சத்தியம் மெதுவாக வெளிப்படுவதை விவரிக்கிறது. இது ஆலயத்தில் இருந்து வருவதால், மனுக்குலத்திற்கான சுகமும், ஆரோக்கியமும் ஊட்டமும் தேவனின் ஏற்பாட்டினால் வருகிறது என்பதை உறுதிப்படுத்துகிறது. வெளிப்படுத்தல் 22:1,2 ல் உள்ள வார்த்தைகளுக்கு இது எவ்வளவு நேர்த்தியாக பொருந்துகிறது. "பின்பு, பளிங்கைப்போல் தெளிவான ஜீவத்தண்ணீருள்ள சுத்தமான நதி தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனத்திலிருந்து புறப்பட்டுவருகிறதை எனக்குக் காண்பித்தான். நகரத்து வீதியின் மத்தியிலும், நதியின் இருகரையிலும், பன்னிரண்டுவிதமான கனிகளைத்தரும் ஜீவவிருட்சம் இருந்தது, அது மாதந்தோறும் தன் கனியைக் கொடுக்கும்; அந்த விருட்சத்தின் இலைகள் ஜனங்கள் ஆரோக்கியமடைகிறதற்கு ஏதுவானவைகள்."

வெளிப்படுத்தாளர் விவரித்த நதியைப் போலவே, இந்த நதியின் இருபுறத்திலும் மரங்கள் உள்ளன, அதன் கனிகள் உணவுக்கு நல்லதும், அதன் இலைகள் நல்ல மருந்தாக இருந்தது. ஒரு காலத்தில் "ஜீவ விருட்சத்தின் கனியினை" புசிக்காதபடிக்கு ஆதாமுக்கும் ஏவாளுக்கும் தடை விதிக்கப்பட்டிருந்தது. (ஆதியாகமம் 3:22) ஆனால் பின்னர் ஜீவனை கொடுக்கும் பல மரங்கள் இருக்கும், நித்திய ஜீவனுக்கான வாய்ப்பு மீண்டும் கிடைக்கும். இறுதியாக அந்த நதி பூமியின் மிக தாழ்வான பகுதியான சவக்கடலுக்குச் சென்றது. அதிகபட்சமான உப்பினால் அந்த கடல் செத்துவிட்டது. தற்போது, அங்கு எந்த உயிரினமும் உயிர் வாழ முடியாது. ஆனால் ஆலயத்தில் இருந்து வெளிவரும் நதி சவக்கடலைத் தொடும்போது சவ கடல் ஜீவனை பெறும், அதில் ஏராளமான மீன்கள் இருக்கும்.

இயற்கையாகவே சவகடலில் இருந்து தண்ணீர் வெளியேறுவதற்கு வழி இல்லாததினால், இது வெளியே தப்பி செல்ல முடியாத ஆதாமின் சாபத்திற்கான சிறந்த சித்தரமாகும். மரித்து கொண்டிருக்கும் நம் இனத்திற்கு, ஜீவனை திரும்ப பெறக்கூடிய ஒரே வழி தேவனுடைய ஆலயத்திலிருந்து வருகிறது. "ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்; கேட்கிறவனும் வா என்பானாக; தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக் கடவன்." (வெளிப்படுத்தல் 22:17)

### ஆலயம் கட்டப்படுமா?

வேத மாணவர்கள் பல ஆண்டுகளாக இந்த கேள்வியை விவாதித்துள்ளனர். மிருகங்களை பலி செலுத்துவதினால், "ஓனாயும் ஆட்டுக்குட்டியும் ஒருமித்து மேயும்; சிங்கம் மாட்டைப்போல வைக்கோலைத் தின்னும்; புழுதிசர்ப்பத்துக்கு இரையாகும்; என் பரிசுத்த பர்வதமெங்கும் அவைகள் தீங்குசெய்வதுமில்லை, கேடுண்டாக்குவது மில்லையென்று கர்த்தர் சொல்லுகிறார்." (ஏசாயா 65:25) என்று ஏசாயாவினால் உரைக்கப்பட்டது மீறப்படும் என்று சிலர் நினைக்கிறார்கள். எபிரெயர் 9 மற்றும் 10ம் அதிகாரங்களில் அப்போஸ்தலனாகிய பவுலின் வார்த்தைகளையும் ஒருவர் மனதில் கொள்ளவேண்டும். அங்கே அவர் காளைகள் மற்றும் ஆடுகளின் இரத்தம் பாவத்தை நீக்க முடியாது என்ற முடிவை கூறுகிறார். "வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரேதரம் மகா பரிசுத்த

ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டுபண்ணினார்." (எபிரெயர் 9:12)மோசேயின் பிரமாணங்களில் சொல்லப்பட்ட பலிகள், இயேசு மற்றும் சபையின் மேலான பலிகளை நிழலிட்டு காட்டுவதால், இந்த பிரமாணங்களை நிலைநிறுத்த முடியாது என்று இது நமக்கு சொல்லுகிறது.

மறுபுறம், சகரியா 14:18, கூடாரங்களின் பண்டிகை இராஜ்யத்தில் அநுசரிக்கப்படும் என்று கூறுகிறது. இது எசேக்கியேலின் தரிசனத்தில் விவரிக்கப்பட்டுள்ள இரண்டு பண்டிகைகளில் ஒன்றாகும். மேலும் இது எதிர்காலத்தில் ஆலயத்தை கட்டுவதற்கான கட்டுமான வழிமுறைகளை தெரிவிப்பதே இந்த தரிசனத்தின் பொருள் என்று கருதலாம். எசேக்கியேலின் தரிசனம் வெறும் இராஜ்யத்தை மட்டுமே அடையாளப்படுத்துவதாக இருந்தால் அவருக்கு கொடுக்கப்பட்ட இவ்வளவு சிக்கலான விவரங்கள் தேவையற்றதாக இருக்கும் என்று சிலர் எண்ணுகிறார்கள். அப்படியானால், கொடுக்கப்படும் மிருகங்களின் பலி, இயேசு மற்றும் சபையின் பலிகள் நினைவுச்சின்னங்களாக மட்டுமே இருக்கும். பலிகளின் முக்கியத்துவத்தை நேரத்தின் அமைப்பு மாற்றியிருக்கும். இது நேரிட்டால், இது மோசேயின் பிரமாணத்தை நிலைநிறுத்துவதாக இருக்காது, மாறாக தளர்ந்து போன ஒரு அமைப்பாக வடிவமைக்கப்பட்டிருக்கும். இந்த பலிகள் ஒரு விசேஷித்த நோக்கத்திற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் என்று சகோதரர் ரசல் கூறுகிறார். "சில பொருளான பாடங்களை மனுக்குலத்திற்கு கற்றுக்கொடுப்பதற்கு தேவன் ஓய்வு நாள், மற்றும் பல்வேறு பண்டிகைகள், இன்னும் பலிகளைப் பற்றிய பிரமாணங்களை திரும்ப கொடுக்கலாம். இதற்கு சில ஆதரவான வசனங்கள் கொடுக்கப்பட்டதாக தோன்றலாம்." (எரேமியா 33:18, எசேக்கியேல் 46:19-24, 47:12, 48:10,11) (R1733,R2507, காண்க) ஆலயத்தின் ஒழுங்குகள் நிறுவப்பட்டால், அது மத்தியஸ்த ஆட்சியின் போது மட்டுமே தேவைப்படலாம். மேலும் சகோதரர் ரசல் கூறுகிறபடி, மனுக்குலத்திற்கு பலியின் பாடங்களை கற்றுக்கொடுப்பதற்கு உதவியாக இருக்கும். அங்கு ஆலயம் இருக்காது என்று புதிய எருசலேம் சித்திரம் வெளிப்படுத்துகிறது. "அதிலே தேவாலயத்தை நான் காணவில்லை; சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தரும் ஆட்டுக்குட்டியானவருமே அதற்கு ஆலயம்." (வெளிப்படுத்தல் 21:22) ஆலயம் இனி தேவைப்படாத காலத்தில் இரு இராஜ்யத்தின் இறுதி வேலையின் முடிவை விவரிக்கக்கூடும்.

மிருக பலிகளை நியமிக்க தேவன் தேர்வு செய்தால், அவை எதைக் குறிக்கின்றன என்பதைப் பற்றிய சரியான புரிதலுடன் இருக்கும். இந்த பகுதியில் ஒருவரின் கருத்தைப் பொருட்படுத்தாமல் பிடிவாதமாக இருப்பது விவேகமற்றது. தேவன் என்ன செய்ய விரும்புகிறாரோ அதில் நாம் மகிழ்ச்சியடைகிறோம். ஏனென்றால் அவருடைய மகிமையான திட்டம் என்பது மரித்தோரிலிருந்து உயிரடைவதும், இந்த உலகத்திற்கு தேவனைப் போற்றுவதற்கும், எல்லாவற்றையும் மறுசீரமைப்பதற்காக அவர் அளித்த விலைமதிப்பற்ற ஏற்பாடுகளை அங்கீகரிப்பதற்கும் ஒரு வாய்ப்பாகும்.

# புதிய எருசலேம்



George Tabac


"பின்பு, நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டேன்; முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்துபோயின; சமுத்திரமும் இல்லாமற்போயிற்று.யோவானாகிய நான், புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தைத் தேவனிடத்தினின்று பரலோகத்தைவிட்டு இறங்கி வரக்கண்டேன்; அது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப்போல ஆயத்தமாக்கப்பட்டிருந்தது. மேலும், பரலோகத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ்சத்தத்தைக் கேட்டேன்; அது: இதோ, மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது, அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார்; அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள், தேவன்தாமே அவர்களோடேகூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார்."(வெளிப்படுத்தல் *21:1-3*)

தற்போதைய ஆவிக்குரிய வானங்களும், பூமியின் தீமையான சமூக அமைப்பும் அர்மெகதோனில் மறைந்துவிடும். அதற்கு பதிலாக தேவனுடைய இராஜ்யத்தின் பூமிக்குரிய பகுதி ஸ்தாபிக்கப்படும். இந்த புதிய எருசலேம் தேவனிடமிருந்து, பரலோகத்திலிருந்து இறங்கி வருகிறது என்பது, உண்மையில் தேவனுடைய இராஜ்யத்தின் ஆவிக்குரிய பகுதி முதலில் செயலாற்றும் என்பதை காட்டுகிறது. சபை மகிமை அடைந்த பின், பூமிக்குரிய இராஜ்யத்தை அமைக்க துவங்கும்.

"கூடாரம்" என்ற வார்த்தைக்கு "வாசஸ்தலம்" என்று பொருள். தேவனுடைய வாசஸ்தலம் மனுஷரிடம் இருக்கும். இது புதிய ஒழுங்கில், காணக்கூடிய பூமிக்குரிய பிரதிநிதிகளாகிய முற்பிதாக்களின் மூலம் வெளிப்படும்.

## புதிய எருசலேமின் தோற்றம்


"அந்த நகரம் சதுரமாயிருந்தது, அதின் அகலமும் நீளமும் சமமாயிருந்தது. அவன் அந்தக் கோலினால் நகரத்தை அளந்தான்; அது பன்னீராயிரம் ஸ்தாதி அளவாயிருந்தது; அதின் நீளமும் அகலமும் உயரமும் சமமாயிருந்தது." (வெளிப்படுத்தல் 21:16)




**The New Jerusalem**

இந்த தரிசனத்தில் யோவான் நகரத்தை ஒரு சரியான கனசதுர வடிவத்தில் கண்டார். அதன் நீளம், அகலம் மற்றும் உயரம் அனைத்தும் சமமான பன்னிரண்டாயிரம் ஸ்தாதி அல்லது தலா 1,500 மைல்கள் கொண்டிருந்தது. இவை மகத்தான பரிமாணங்களாகும். எடுத்துக்காட்டாக, அமெரிக்காவின் கீழ் 48 மாநிலங்களின் அளவு வடக்கிலிருந்து தெற்கே 1,581 மைல்களும், கிழக்கிலிருந்து மேற்காக 2,680 மைல்களும் ஆகும். அதாவது புதிய எருசலேம் சொல்லர்த்தமாக இருந்தால், அது பாதிக்கும் மேற்பட்ட நாட்டை உள்ளடக்கும். இந்த எளிய உண்மை, நுழைய விரும்பும் அனைவருக்கும் இடமுண்டு என்று கூறுகிறது. அதன் தராதரங்களின்படி வாழ விரும்பும் யாரும் விலக்கப்பட மாட்டார்கள்.

"அதற்குப் பெரிதும் உயரமுமான மதிலும், கிழக்கே மூன்று வாசல்கள், வடக்கே மூன்று வாசல்கள், தெற்கே மூன்று வாசல்கள், மேற்கே மூன்று வாசல்கள் ஆகப் பன்னிரண்டு வாசல்களும் இருந்தன. வாசல்களின் அருகே பன்னிரண்டு தூதர்களிருந்தார்கள்; அந்த வாசல்களின் மேல் இஸ்ரவேல் சந்ததியாராகிய பன்னிரண்டு கோத்திரத்தாருடைய நாமங்களும் எழுதப்பட்டிருந்தன." (வெளிப்படுத்தல் 21:12,13)




**The New Jerusalem, 12 Gates**

இந்த சரியான கனசதுரம், ஒவ்வொரு பக்கத்திலும் மூன்று வாசல்களை கொண்ட திசைக்காட்டியின் நான்கு புள்ளிகளை, நோக்கி இருந்தது. இந்த நகரம் எல்லா தேசம் மற்றும் ஒவ்வொரு திசையிலும் உள்ள ஜனங்களுக்கு என்று இந்த நோக்கு நிலைக் கூறுகிறது. நகரின் ஒவ்வொரு பக்கத்திலும் உள்ள ஒரே மாதிரியான வாசல்கள் அனைவருக்கும் அதில் நுழைவதற்கு சம வாய்ப்பு இருக்கும் என்று கூறுகிறது. இந்த வாசல்கள், புதிய உடன்படிக்கையின் ஒழுங்கிற்குள், மனுக்குலம்

நுழைவதற்கு என்ன தேவைப்படும் என்பதற்கான ஒரு அழகான சித்தரமாகும். இந்த தேவைகள் எல்லா மனுஷருக்கும் ஒரே மாதிரியாக இருக்கும்.

"நகரத்தின் மதிலுக்குப் பன்னிரண்டு அஸ்திபாரக் கற்களிருந்தன; அவைகள் மேல் ஆட்டுக்குட்டியான வருடைய பன்னிரண்டு அப்போஸ்தலரின் பன்னிரண்டு நாமங்களும் பதிந்திருந்தன. அவன் அதின் மதிலை அளந்தபோது, அது தூதனுடைய அளவாகிய மனுஷஅளவின்படியே நூற்றுநாற்பத்துநான்கு முழமாயிருந்தது." (வெளிப்படுத்தல் 21:14,17)

**பரிமாணங்கள்**


மதில்களுக்கு பன்னிரண்டு அஸ்திபாரக் கற்களிருந்தன, ஒவ்வொன்றும் பன்னிரண்டு அப்போஸ்தலர்களில் ஒருவரை குறிக்கும். ஆனால் நகரைச் சுற்றிச் செல்லும் ஒரு சுவரின் கீழ் ஏன் இந்த பன்னிரண்டு அஸ்திபாரங்கள் இருக்கவேண்டும்? அந்த மதில் அளவு 144 முழுங்கள் என்பதன் பொருள் என்ன?

குடிமக்களின் பாதுகாப்புக்காக பண்டைய கால நகரங்களுக்கு மதில் சுவர் கட்டப்பட்டது. புதிய எருசலேமிலும் இது உண்மையாக காணப்படுகிறது. 144 முழம் என்பது சுவரின் உயரம் அல்ல, அது அதனுடைய தடிமன். ஒரு முழம் 18 அங்குலங்களாக அளவிடப்பட்டால், வியக்கத்தக்கதாக அந்த சுவரின் தடிமன் 216 அடிகளாகும். இது அனைவருக்கும் வழங்கப்பட்ட முழுமையான பாதுகாப்பை விளக்குகிறது. "என் பரிசுத்த பர்வதமெங்கும் தீங்குசெய்வாருமில்லை; கேடுசெய்வாருமில்லை; சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல், பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்." (ஏசாயா 11:9) வடக்கு, தெற்கு, கிழக்கு அல்லது மேற்கிலிருந்து எந்த எதிரியும், சாத்தானால் கூட இந்த நகரத்தின் மதில்களை உடைக்க முடியாது. இந்த மதில்கள், அனைத்து வல்லமை வாய்ந்த அழியாமையை பெற்ற, தெய்வீக ஜீவிகளை குறிக்கிறது. அந்த மதில்களின் வலிமை, 144 முழ தடிமன், என்பதில் காட்டப்படுகிறது. இது சபையின் எண்ணிக்கையாகும். (வெளிப்படுத்தல் காண்க14:1)

அப்போஸ்தலனாகிய பேதுரு விவரித்தபடி, இந்த மதில்கள் உயிருள்ள கற்களால் ஆனவை. "ஜீவனுள்ள கற்களைப்போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசு கிறிஸ்து மூலமாய்த் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்த ஆசாரியக் கூட்டமாகவும் கட்டப்பட்டு வருகிறீர்கள்." (1பேதுரு 2:5) அவை சாலொமோன் ஆலயத்தின் சுவர்களிலும் சித்தரிக்கப்பட்டுள்ளன. "ஆலயம் கட்டப்படுகையில், அது பணிதீர்ந்து கொண்டுவரப்பட்ட கற்களாலே கட்டப்பட்டது; ஆகையால் அது கட்டப்படுகிறபோது, சுத்திகள் வாச்சிகள் முதலான எந்த இருப்பு ஆயுதங்களின் சத்தமும் அதிலே கேட்கப்படவில்லை." (1இராஜாக்கள் 6:7) பரலோக வகுப்பாரின் செதுக்குதல், வடிவமைத்தல், மெருகேற்றல், இவ்வனைத்தும் மாம்சத்தில் இருக்கும்போது, இங்கே பூமியில் செய்யப்படும். இப்போது நாம் கட்டிடத்திற்கு கற்களை வெட்டி எடுக்கும் குவாரிக்குள் இருக்கிறோம். புதிய எருசலேமின் பாதுகாப்புக்காக அந்த மதில்களில் ஒரு இடத்தில் நாம் பொருந்துவதற்காக, நம்முடைய அனுபவங்கள் தனிப்பயனுக்காக ஏற்படுத்தப்பட்டவைகள்.

**அஸ்திபாரங்கள்**

12 அஸ்திபாரங்களாக இருப்பதினால், வழக்கமாக இருப்பதை விட, இந்த அஸ்திபாரங்கள் வேறுப்பட்ட இடத்தில் நிலைப்பெற்றிருக்கலாம் என்று இந்த தரிசனம் கருதுகிறது. நகரம் ஒரு கனசதுர வடிவத்தில் இருப்பதால், கனசதுரத்தின் 12 விளிம்புகளும் அஸ்திபார புள்ளிகளாக கருதப்படவேண்டும் என்பதை இது குறிக்கிறது. இது உண்மையானால், நகரத்தின் கட்டமைப்பின் மேலும், கீழும், ஒரு சுவர் அதற்குட்பட்டிருக்கவேண்டும். இது உள்ளே இருப்பவர்களுக்கு இன்னும் பெரிய பாதுகாப்புச் சுவராக இருக்கும் என்பதை குறிக்கிறது. இந்த பன்னிரெண்டு விளிபும்புகளும், கனசதுரத்தை ஒன்றாகப் பிடித்து, வலிமையையும், ஸ்திரத்தன்மையையும் தருகின்றது. (சபையாகிய) மதில்கள் கட்டப்பட்டு ஒன்றாக இணைக்கப்படுவதற்கான அஸ்திபாரம், பரலோக இராஜீகத்தில் தங்களின் சிறப்பு இடத்தைக் காட்டும் பன்னிரெண்டு அப்போஸ்தலர்களுடன் ஒத்துப்போகின்றன. அவர்களின் வழிகாட்டுதல் வலிமையையும், ஒற்றுமையையும தருகிறது.





*12 Foundations x 12,000 Furlongs Each = 144,000 (Shows how Church of 144,000 will Circumscribe the City)*

நகரத்தின் ஒவ்வொரு பக்கமும் (விளிம்பு) 12,000 ஸ்தாதியாக இருந்தது. 12,000 த்தை பன்னிரெண்டு விளிம்புகளோடு பெருக்கினால், 144,000 என்ற எண்ணை பெறுகிறோம். இது தெய்வீகமாக நியமிக்கப்பட்ட அப்போஸ்தலர்களோடு, சபை எவ்வாறு அந்த நகரத்தை சூழ்ந்து, அதற்குள் இருப்பவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கிறது என்பதை இது காட்டுகிறது.

**பரப்பு**

ஒரு சுவரின் பரப்பளவு 12,000 பெருக்கல் 12,000 ம்


ஸ்தாதிகளாகும். இது 144,000,000 என்ற எண்ணை தருகிறது. இது காலத்தின் அளவை (1,000 ஆண்டுகள்) கணக்கில் எடுத்துக்கொள்கிறது. இந்த காலத்தில் சபை ஒரு பாதுகாப்பு சுவராக செயல்படும்.




Area of One Side
12,000 x 12,000 = 144 Million Furlongs
144 Million = 144,000 Protecting x 1000 Years
(Showing how the Church, 144,000, will be a Wall of Protection for 1000 Years)

## நீதிமான்கள் பிரகாசிப்பார்கள்

புதிய எருசலேமின் பரிமாணங்கள், சூரியனுடைய ஒரு குறிப்பிடத்தக்க சம்மந்தத்தை காட்டக்கூடிய ஒரு பெரிய அளவில் சித்தரிக்கிறது. ஒட்டுமொத்த கனசதுரத்தின் பரப்பளவு ஒரு சுவாரஸ்யமான முடிவை அளிக்கிறது. 144,000,000 (ஒரு பக்கத்தின் பரப்பளவு) ஆறு பக்கங்கள், (கனசதுரத்திற்கு ஆறு பக்கங்கள்) 864,000,000 க்கு சமம். சூரியனின் விட்டம் சுமார் 864,000 மைல்கள் ஆகும். ஆயிரவருட ஆட்சியில் அந்த ஆயிரவருடத்தில், சபை எவ்வாறு சூரியனாக பிரகாசிப்பார்கள் என்பதற்கான ஒரு சித்திரத்தை வழங்குகிறது. "அப்பொழுது, நீதிமான்கள் தங்கள் பிதாவின் ராஜ்யத்திலே சூரியனைப்போலப் பிரகாசிப்பார்கள். கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன்."(மத்தேயு13:43) இப்பிரபஞ்சத்தின் வடிவமைப்பாளர், பூமியில் உள்ள அனைவரின் ஜீவனை காத்து, பாதுகாக்கும் பூமியின் ஒளியின் பிறப்பிடத்திற்கும் (மூலம்) ஒளியின் நகரத்திற்கும் இடையிலான குறிப்பிடத்தக்க தொடர்பை நமக்குக் காட்டுகிறார்.



Area of Each Side
12,000 x 12,000 = 144 Million Furlongs
144 Million x 6 Sides = 864 Million

Diameter of the Sun
= 864 Million

864 Million = 864,000 x 1000 Years
Church will shine as the Sun for 1000 Years of the Millennium

## காலத்திற்கு இணையானது

புதிய எருசலேம் மற்றும் அகிலத்தின் எண்கள், காலத்திற்கும் தொடர்புடையதாக இருப்பதை பின்வரும் விளக்கப்படம் விவரிக்கிறது :

**ஒரு நாளின் விநாடிகள் மற்றும் நிமிடங்கள், புதிய எருசலேமுடன் ஒப்பிடப்படுகிறது.**

"அக்காலத்திலே, ஜனங்களுக்குக் கொடியாக நிற்கும் ஈசாயின் வேருக்காக ஜாதிகள் விசாரித்துக் கேட்பார்கள்; அவருடைய தாபரஸ்தலம் மகிமையாயிருக்கும்." (ஏசாயா 11:10)

1 நாளின் 86,4000 வினாடிகள் = 6 சுவர்களின் பரப்பளவும் மற்றும் சூரியனின் விட்டம். இது ஆரோக்கியத்தை அளிக்கும் நீதியின் சூரியனை சித்தரிக்கிறது. (மல்கியா 4: 2) **1**

1 நாளின், 1,440 நிமிடங்கள் = ஒரு சுவரின் தடிமன், 144 முழம் =144,000 பாதுகாப்பு சுவராகிய சபை அங்கத்தினர். **2**

**1** {கணித பருமன் வரிசையானது ஒரு குறிப்பிட்ட அர்த்தத்தை சுமந்து செல்லும் அதிகரித்த கணித பருமன்வரிசை இன்றி, ஒரே அடிப்படை எண்ணின் பல்வேறு வெளிப்பாடுகளாகத் தெரிகிறது. இருப்பினும், ஒரு நாளிலுள்ள 86,400 வினாடிகளை புதிய எருசலேமின் சுவர் பகுதியுடன் ஒப்பிடும்போது (864,000,000 ∴பர்லாங்ஸ் (*furlongs*) 10,000 மடங்கு பெரியதான எண்) தேவனுடையப் பாதுகாப்பு மனுக்குலத்தின் மீது எவ்வளவு காலம் இருக்கும் என்பதற்கு கால வரையறையே இல்லை என்று அறிவுறுத்தப்படுகிறது. எபிரெயர் 13:5ல் திருச்சபைக்கு அளிக்கப்பட்ட வாக்குத்தத்தம் நித்திய ஜீவன் வழங்கப்படும் அனைவருக்கும் பொருத்தமாக இருக்கும். "நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை."}

**2**{ஒரு நாளின் 1,440 நிமிடங்களை சபையின் 144,000 அங்கத்தினர்களுடன் (1000 மடங்கு பெரியது) ஒப்பிட்டுப் பார்த்தால், சபை 1000 ஆண்டுகள் ஆட்சி செய்ய தகுதியுடையதாக இருக்கும் என கருதப்படுகிறது.

### பூமிக்குரிய தொடர்பு

புதிய எருசலேமின் அளவுகள், பூமியின் அளவோடும் தொடர்புடையதாக உள்ளது. இந்த சுவாரஸ்யமான இணைப்பு புதிய எருசலேமின் நோக்கத்தையும் நல்லிணக்கதையும் வெளிப் படுத்துகிறது. ஸ்மித் பைபிள் அகராதி 220 ஸ்தாதி (கெஜம்) அல்லது 660 அடிகள் என கணக்கிடுகிறது. இவ்வாறு 12,000 ஸ்தாதிகள் (கெஜம்)7,920,000 அடிகளாகும். இது New American Standard மொழிபெயர்ப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த அகராதியில் வெளிப்படுத்தல் 21:16 ல், ஒவ்வொரு பக்கமும் 1,500 மைல்கள் அல்லது 7,920,000 அடி என்று கூறுகிறது.

1 ஸ்தாதி = 660 அடி
12,000 ஸ்தாதி = 7,920,000 அடி

புதிய எருசலேமின் ஒவ்வொரு பக்கமும் 7,920,000 அடி. சுழற்சியின் வேகம் அதிகமாக இருப்பதால் பூமத்திய ரேகை துருவங்களை விட 26 மைல் அதிகமாக வெளியே காணப்படுகிறதினால், பூமி ஒரு சரியான கோளமாக (perfect sphere)இல்லை. இருப்பினும், பூமியின் சராசரி விட்டம் சுமார் 7,920 மைல்கள். இந்த நெருங்கிய தொடர்பு, புதிய எருசலேமின் பரிமாணங்களை, நம்முடைய கிரகத்தின் (பூமி)பரிமாணங்களுடன் இணைத்து, பூமியின் அனைத்து குடும்பங்களையும் ஆசீர்வதிப்பதே இறுதி நோக்கம் என்பதைக் காட்டுகிறது.

### எசேக்கியேலின் தரிசனம்

எசேக்கியேலுக்கு காண்பிக்கப்பட்ட தரிசனத்தில், பரிசுத்த ஸ்தலத்திற்கு தெற்கே உள்ள ஒரு நகரத்தின் அளவுகள், புதிய எருசலேமின் அளவுகளுக்கு தொடர்புடையதாக காணப்படுகிறது. முந்தைய கட்டுரையில் குறிப்பிட்டுள்ளபடி, எசேக்கியேலின் ஆலயம் மற்றும் நகரத்திலும், "பெரிய முழம்" என்ற ஒரு அளவினால் அளவிடப்பட்டது. இது ஒரு முழம் மற்றும் ஒரு கை அகலம் (எசேக்கியேல் 40: 5). ஆகவே இது 21 அங்குலங்கள் அல்லது 1.76 அடிகளுக்கு சற்று அதிகமானது.

எசேக்கியேலின் தரிசனத்தில் நகரம் ஒரு சரியான சதுரமாக இருந்தது, நகரத்தின் ஒவ்வொரு பக்கமும் 4,500 முழம் (எசேக்கியேல் 48: 30)அல்லது 7,920 அடி. இது புதிய எருசலேமின் ஒரு பக்கத்தின் அளவோடு ஒத்திருக்கிறது.

எசேக்கியேலின் நகரத்தின் பக்கம், புதிய எருசலேமுடன் பொருந்துகிறது. இவ்வாறு, சுற்றளவுக்கு ஒத்த தொடர்பு உள்ளது. இதற்கு கீழே உள்ள விளக்கத்தைக் காண்க. நமது பூமியை வடிவமைத்து, மனுக்குலம், பூமி மற்றும் நமக்கு ஜீவனை கொடுக்கும் சூரியன் ஆகியவற்றில் அவர் காட்டின ஆர்வத்தை விவரிக்கும் அடையாளங்களாக புதிய எருசலேம் மற்றும் எசேக்கியேலின் நகரத்தை நமக்குக் கொடுத்த பெரிய கட்டிடக் கலைஞரின் பணியைக் காணும்போது நாம் பிரமித்து நிற்கிறோம். நகரத்திற்கு வெளியே எழுப்பப்பட்டது இராஜ்யத்தில் உள்ள அனைவரும் நித்திய ஜீவனைப் பெறுவதற்கு, எடுக்க வேண்டிய முற்போக்கான நடவடிக்கைகளை, இந்த புதிய எருசலேம் எடுத்துக் காட்டுகிறது. உயிர்த்தெழுதல் மனுக்குலம் நகரத்திற்கு வெளியே உள்ளவர்களாக சித்தரிக்கப் படுகிறார்கள் என்றும் அங்கு அவர்கள் "வா" என்ற அழைப்பை கேட்பார்கள் என்றும் வெளிப்படுத்தல் 22:17,14 ல் சொல்லப்படுகிறது.

ஜீவனைப் பெற்றுக்கொள்ள, நீதியின் மேல் தாகமும், தேவனுக்கு ஊழியம் செய்வதற்கான விருப்பமும் இருக்க வேண்டும். நகரத்தின் சுவர்களுக்கு வெளியே மனுக்குலம் இந்த அழைப்பை கேட்பார்கள், அவர்களின் வஸ்திரங்களை தொய்த்து, நகரத்திற்குள் பிரவேசிப்பார்கள். நீதிக்கு தங்களை அர்ப்பணிப்பதன் மூலம், தங்களைத் தூய்மைப்படுத்துவதை இந்த சுத்திகரிப்பு விவரிக்கிறது. முன்னர் வெளிப்படுத்தல் 22:1, 2ல் விவரிக்கப்பட்ட நதியும் ஜீவ விருட்சமும், புதிய எருசலேமின் ஒரு சித்திரமாகும். அவற்றில் பங்கெடுப்பதே, நீதியை நாடுபவர்களுக்கு வெகுமதியாக இருக்கும். (வசனம் 12) நகரத்தின் வாசல்கள் "அங்கே இராக்காலம் இல்லாதபடியால், அதின் வாசல்கள் பகலில் அடைக்கப்படுவதே இல்லை." (வெளிப்படுத்தல் 21:25)

பண்டைய நகரங்களின் வாசல்கள் பெரும்பாலும் இரவில் மூடப்பட்டன. இருப்பினும், புதிய எருசலேமில் அவை திறந்தே இருக்கின்றன. இந்த வெளிப்பாட்டை ஏசாயா விவரிக்கிறார்."அக்காலத்திலே யூதாதேசத்தில் பாடப்படும் பாட்டாவது: பெலனான நகரம் நமக்கு உண்டு; இரட்சிப்பையே அதற்கு மதிலும் அரணுமாக ஏற்படுத்துவார். சத்தியத்தைக் கைக்கொண்டுவருகிற நீதியுள்ள ஜாதி உள்ளே பிரவேசிப்பதற்காக வாசல்களைத் திறவுங்கள். உம்மை உறுதியாய்ப் பற்றிக் கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர். கர்த்தரை என்றென்றைக்கும் நம்புங்கள்; கர்த்தராகிய யேகோவா நித்திய கன்மலையாயிருக்கிறார்." (ஏசாயா26:1-4) நீதியுள்ள தேசங்கள் சுதந்திரமாக நுழைவதற்கு வாசல்கள் திறந்திருக்கும். இந்த யுகத்தில் பலர் தேடும் முழுமையான சமாதானத்தின் வாக்குறுதி, இந்த வலுவூட்டப்பட்ட தேவனுடைய நகரத்திற்குள் நுழைவோரிடையே பொதுவானதாக காணப்படும்.



இந்த அற்புதமான நகரத்தின் அனைத்து வாசல்களும் நகரத்தின் பெரும் பாதைக்கு வழிநடத்தும். இது ஏசாயா 35 ன் பரிசுத்தமான பெரும் பாதைக்கு ஒத்திருக்கிறது. இது சுவிசேஷ யுகத்தின் நெருக்கமான வழியைப் போல் அல்ல, இதின் கண்ணிகளும் ஆபத்துகளும் காணப்படுவதில்லை. கொர்ச்சிக்கும் சிங்கமாகிய சாத்தான் அங்கு இருப்பதில்லை. மீட்கப்பட்டவர்கள் அதில் நடப்பார்கள். நம்முடைய சக ஜனங்களுக்கு எப்படிப்பட்ட ஒரு மகத்தான எதிர்காலம் காத்திருக்கிறது.

"அதற்குப் பெரிதும் உயரமுமானமதிலும், கிழக்கே மூன்று வாசல்கள், வடக்கே மூன்று வாசல்கள், தெற்கே மூன்று வாசல்கள், மேற்கே மூன்று வாசல்கள் ஆகப் பன்னிரெண்டு வாசல்களும் இருந்தன. பன்னிரெண்டு வாசல்களும் பன்னிரெண்டு முத்துக்களாயிருந்தன; ஒவ்வொருவாசலும் ஒவ்வொரு முத்தாயிருந்தது. நகரத்தின் வீதி தெளிவுள்ள பளிங்கு போலச் சுத்தப் பொன்னாயிருந்தது."(வெளிப்படுத்தல் 21:12,21)

இந்த மகிமையான நகரத்தின் பன்னிரண்டு வாசல்களும் பன்னிரெண்டு முத்துக்களாக இருந்தன, ஒவ்வொன்றிலும் ஒரு தூதன் நின்றார். ஒவ்வொன்றிலும் இஸ்ரயேலின் பன்னிரெண்டு கோத்திரங்களின் நாமங்கள் இருந்தன. இந்த ஆசீர்வாதமான நகரத்திற்குள் செல்ல வழியை வழங்குகிறது. இது நீதிக்கு அர்ப்பணிக்கக்கூடிய ஒரு சித்திரமாக காணப்படுகிறது.

வாசல்கள் முத்துக்கள் என குறிப்பிடப்பட்டுள்ளன. இது இயேசுவின் வார்த்தைகளை நினைவுபடுத்துகிறது," மேலும், பரலோகராஜ்யம் நல்ல முத்துக்களைத் தேடுகிற வியாபாரிக்கு ஒப்பாயிருக்கிறது. அவன் விலையுயர்ந்த ஒரு முத்தைக் கண்டு, போய், தனக்குண்டான எல்லாவற்றையும் விற்று, அதைக் கொள்ளுகிறான்." (மத்தேயு 13:45, 46) சபை இந்த பரம அழைப்பின் மதிப்பை, பலியின் வழியாக ஒரு முத்தைபோல காண்கிறது. மேலும் அதற்கான முழு அர்ப்பணிப்பை அது அளிக்கிறது. அதேபோல, மனுக்குலம் அழைப்பைக் கேட்பதுடன், அவர்களுக்கு முன் வைக்கப்பட்டுள்ளவற்றின் மதிப்பையும் புரிந்துகொள்ளும். அவர்களின் முத்து, முழுமையும், நித்தியமான மனித ஜீவனையும் பெறுவதற்கான ஒரு வாய்ப்பாக இருக்கும். இதை புரிந்து கொண்டவர்கள் அனைவரும் தங்களையே தத்தம் செய்வார்கள். "ஓட்டுக்குள் ஒரு ஒட்டுண்ணி, அல்லது வெளியில் இருந்து வரும் தாக்குதல் போன்ற அச்சுறுத்தும் எரிச்சலுக்கு எதிரான பாதுகாப்பு நுட்பமாக சில மெல்லுடலிகளின் () ஓட்டுக்குள் முத்துக்கள் உருவாகின்றன. எரிச்சலைத் தணிக்க மெல்லுடலி (*mollusks*) ஒரு முத்து திசுப்பையை உருவாக்குகின்றன. எரிச்சலைத் தணிக்க மெல்லுடலி (*mollusk*) ஒரு முத்து திசுப்பையை உருவாக்கிறது. முத்துக்கள் என்பது ஒரு நோய் எதிர்ப்பு சக்தியின் வளைவாகும். (விக்கிபீடியா)"

ஒரு முத்து அடுக்கடுக்காக உருவாகிறது, அதன் ஒளிஊடுருவக்கூடிய அடுக்குகளிலிருந்து ஒரு ஒளிர்வை வெளிப்படுத்துகிறது. பாவமும் மரணமும் மனுக்குலத்தின் ஒட்டுண்ணிகள் போன்றவை. ஆனால் அதன் அனுபவம் தேவனுக்கு அடிபணிய விருப்பமுள்ள இருதயங்களை அழகாக உருவாக்க பங்களிக்கும். அவர்களின் தற்போதைய வாழ்க்கைக்கு பெரும் மதிப்பை கொடுக்கும், அவர்களின் கடந்தகால அனுபவங்களை நினைவில் கொண்டு அவர்கள் முத்துக்களின் வாசல் வழியாகச் செல்வார்கள். அந்த வாசல்கள் வழியாக பிரவேசிப்பதற்கு, தேவனுடைய பிரதிநிதிகளாகிய முற்பிதாக்கள் அவர்களுக்கு உதவி செய்வார்கள் என்பதை காட்டுவதற்கு, இந்த வாசல்களுக்கு, இஸ்ரயேலின் பன்னிரண்டு கோத்திரங்களின் நாமங்கள் கொடுக்கப்பட்டது. (R1353). இதில் முதலில் நுழைபவர்கள், "இஸ்ரயேலின் மீதியுள்ள பரிசுத்தமுள்ளவர்கள்". அதற்குபின், மனித இனத்தை மேலும் கற்பிப்பதற்கு இவர்கள் முற்பிதாக்களுக்கு உதவுவார்கள். அதில் பிரவேசிக்கும் அனைவரும் "உண்மையில் இஸ்ரயேலர்" ஆவார்கள்.

### ஏசாயா 60

"உன்னிடத்துக்கு ஜாதிகளின் பலத்த சேனையைக் கொண்டுவரும் படிக்கும், அவர்களுடைய ராஜாக்களை அழைத்து வரும்படிக்கும், உன் வாசல்கள் இரவும் பகலும் பூட்டப்படாமல் எப்பொழுதும் திறந்திருக்கும். இனிக் கொடுமை உன் தேசத்திலும், அழிவும் நாசமும் உன் எல்லைகளிலும் கேட்கப்படமாட்டாது; உன் மதில்களை இரட்சிப் பென்றும், உன் வாசல்களைத் துதியென்றும் சொல்லுவாய். இனிச் சூரியன் உனக்குப் பகலிலே வெளிச்சமாயிராமலும், சந்திரன் தன் வெளிச்சத்தால் உனக்குப் பிரகாசியாமலும், கர்த்தரே உனக்கு நித்திய வெளிச்சமும், உன் தேவனே உனக்கு மகிமையுமாயிருப்பார்." (ஏசாயா 60:11,18,19)

ஏசாயாவின் இந்த அருமையான பகுதி புதிய எருசலேமின் சித்திரத்திற்கு மற்றொரு இணையை வழங்குகிறது. வாசல்கள் பூட்டப்படாமல் எப்பொழுதும் திறந்திருக்கும். இனி எந்த அழிவும் நாசமும் அதன் எல்லைக்குள் அனுமதிக்கப்படாது. இனி சூரியன் மற்றும் சந்திரனுக்கு பதிலாக கர்த்தராகிய ஆண்டவரே அதற்கு நித்திய வெளிச்சமாக இருப்பார். இந்த கடைசி சொற்றொடர் வெளிப்படுத்தல் 21:23க்கு பொருத்தமாக காணப்படுகிறது. "நகரத்திற்கு வெளிச்சங்கொடுக்கச் சூரியனும் சந்திரனும் அதற்கு வேண்டுவதில்லை; தேவனுடைய மகிமையே அதைப் பிரகாசிப்பித்தது, ஆட்டுக்குட்டியானவரே அதற்கு விளக்கு.".

### அவர்கள் அவருடைய முகத்தை காண்பார்கள்

"அவருடைய ஊழியக்காரர் அவரைச் சேவித்து, அவருடைய சமுகத்தைத் தரிசிப்பார்கள்; அவருடைய நாமம் அவர்களுடைய நெற்றிகளில் இருக்கும்" (வெளிப்படுத்தல் 22:4) ஆயிர வருட ஆட்சியின் முடிவில், மனுக்குலம் தேவனுடைய முகத்தை காண்பார்கள். அதாவது, தேவனுடைய தயவு முழுமையாக அவர்கள் மேல் திரும்பியதை உணருவார்கள். அப்போஸ்தலர் 3: 19 ல்

பேதுரு விவரித்தபடி, இயேசுவின் இரண்டாம் வருகையுடன் இந்த செயல்முறை தொடங்கியது. "ஆனபடியினாலே கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்து இளைப்பாறுதலின் காலங்கள் வரும்படிக்கும், முன்னே குறிக்கப்பட்ட இயேசுகிறிஸ்துவை அவர் உங்களிடத்தில் அனுப்பும்படிக்கும்," "The Greek word for "presence" is *prosopon* (Strong's 4383). It means "from the face of, as a mark of favor" (Volume 2, page 188). கிறிஸ்துவின் இரண்டாம் வருகையோடு தேவனுடைய தயவு திரும்ப தொடங்கியது. இது இராஜ்யத்தின் வேலைகள் முடியும் வரை முழுமைப் பெறாது.

இறுதியாக, தேவனுடைய ஆழ்ந்த அன்பை இந்த உலகம் புரிந்துகொள்ளும். ஒவ்வொன்றும் தேவனுடைய தன்மைக்கு ஒத்ததாக மாற்றப்படும். பரிசுத்தம், தூய்மை மற்றும் அன்பு அவர்களின் இருதயங்களிலும் மனதிலும் பொறிக்கப்படும். ஒருவரின் நெற்றியில் பொறிக்கப்படும் இதுவே அடையாளத்தின் குறிப்பாகும். ஒரு முறை எஜமான்கள் தங்களுடைய சொந்த அடிமைகளுக்கு அடையாளம் போட்டது போல, மனுக்குலமும் நித்திய ஜீவனைக் கொடுப்பவருக்கு தன்னை தத்தம் செய்யும். இது சபை தேவனுடைய அடையாளத்தை தங்களுடைய நெற்றிகளில் முத்திரையாக பெற்றதற்கு ஒப்பாக உள்ளது. (வெளிப்படுத்தல் 7:3) இதுவே தெய்வீக அங்கீகாரத்தின் அடையாளம்.

**ஜீவநதி**

"பின்பு, பளிங்கைப்போல் தெளிவான ஜீவத்தண்ணீருள்ள சுத்தமான நதி தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனத்திலிருந்து புறப்பட்டுவருகிறதை எனக்குக் காண்பித்தான். நகரத்து வீதியின் மத்தியிலும், நதியின் இருகரையிலும், பன்னிரண்டுவிதமான கனிகளைத்தரும் ஜீவவிருட்சம் இருந்தது, அது மாதந்தோறும் தன் கனியைக் கொடுக்கும்; அந்த விருட்சத்தின் இலைகள் ஜனங்கள் ஆரோக்கியமடைகிறதற்கு ஏதுவானவைகள்." (வெளிப்படுத்தல் 22: l,2) நகரத்தின் வழியே பாயும் ஜீவநதி, தேவனும், இயேசுவும் இருக்கிற சிங்காசனத்திலிருந்து பாயக்கூடிய ஜீவ நதியாகும். இது எசேக்கியேல் 47ல் உள்ள நதியைப் போன்றது, ஆலயத்திலிருந்து பாய்கிறது, இது கிறிஸ்துவையும், சபையையும் சித்தரிக்கிறது. இது கிழக்கு வாசலைக் கடந்து சவக்கடலுக்கு பாய்கிறது. இதில் உப்பு அதிகம் இருப்பதால், சவக்கடலில் உயிர் இல்லை. இது மனுக்குலத்தின் மரணத்தின் கல்லறையை பொருத்தமாக அடையாளப்படுத்துகிறது. ஆனால் ஜீவ நதி தொடும் அனைத்தும் உயிர் பெறுகிறது. "அப்பொழுது என்கேதிதுவக்கி எனெக்லாயிம் மட்டும் மீன்பிடிக்கிறவர்கள் அதின் கரையிலே நிற்பார்கள்; அதெல்லாம் வலைகளை விரிக்கிற ஸ்தலமாயிருக்கும்; அதின் மச்சங்கள் பெரிய சமுத்திரத்தின் மச்சங்களைப்போலப் பல ஜாதியும் மகா ஏராளமுமாயிருக்கும்." (எசேக்கியேல் 47:10) ஒவ்வொரு தேசமும், ஒவ்வொரு தனிமனிதனும் அந்த ஜீவ நதியால் தொடப்பட்டு, உயிர்ப்பிக்கப்படுவார்கள். அவர்கள் எண்ணிக்கையில் மகா ஏராளமுமாக இருப்பார்கள்.

இதற்கு மாறாக, எசேக்கியேலில், இந்த நதி புதிய எருசலேமின் சுவர்களுக்குள் இருப்பதாக விவரிக்கப்பட்டுள்ளது. நகரத்திற்குள் நுழைந்த பிறகு, மரணத்திலிருந்து எழுப்பப்பட்டவர்கள் அந்த நதியினால் வளர்க்கப்பட்ட கனிகளை புசிப்பார்கள். "நகரத்து வீதியின் மத்தியிலும், நதியின் இருகரையிலும், பன்னிரண்டு விதமான கனிகளைத்தரும் ஜீவவிருட்சம் இருந்தது, அது மாதந்தோறும் தன் கனியைக் கொடுக்கும்; அந்த விருட்சத்தின் இலைகள் ஜனங்கள் ஆரோக்கியமடைகிறதற்கு ஏதுவானவைகள்" (வெளிப்படுத்தல் 22:2) இது ஏதேன் தோட்டத்தில் இருந்த ஒரே "ஜீவ விருட்சத்தை" (ஆதியாகமம் 2:9)குறிக்கிறது. வெளிப்படுத்தலில், நதியின் இருபுறமும் உள்ள ஜீவ விருட்சம் ஒன்றுக்கு மேற்பட்ட மரங்களைக் குறிப்பதைக் குறிக்கிறது. இந்த சித்திரம் எசேக்கியேல் 47:7ல் இருந்து வந்தது, "நான் நடந்துவருகையில், இதோ, நதியோரத்தில் இக்கரையிலும் அக்கரையிலும் வெகு திரளான விருட்சங்கள் இருந்தது."

இந்த மரங்கள் 12 விதமான கனிகளை மாதந்தோறும் விளைவிக்கிறது. 1,000 வருடத்தில், இந்த 12 விதமான கனிகள், ஆண்டுக்கு 12 முறை அறுவடைச் செய்யப்பட்ட, 144,000 கனிகளால் ஜாதிகளுக்கு உணவளிக்கப்படுகிறது. 144,000 பேர்களைக் கொண்ட சபை வகுப்பார், மனரீதியாகவும், ஒழுக்க ரீதியாகவும், உடல் ரீதியாகவும், ஜீவிக்கக்கூடிய வழிமுறைகளை உலகிற்கு கொண்டுவருவார்கள். (R3625). மாதாந்திர அறுவடையைக் குறித்து ரசல் கூறுகையில்,"அந்த கனிகள் மனுஷரின் மாறும் நிலைமைகளுக்கு ஏற்றவாறு மாற்றியமைக்கப்படுகிது, அதாவது ஒவ்வொரு மாறும் பருவத்திற்கு ஏற்ற கனிகளாக இருக்கும்" என்று குறிப்பிடுகிறார். (R334). விருட்சங்களின் இலைகள், தேசங்களை குணமாக்குகின்றன. பாவம் நம் இனத்திற்கு பல நோய்களைக் கொண்டுவந்துள்ளது. இவை அனைத்தும் தேவனுடைய இராஜ்யத்தின் வல்லமையினால் குணமாகும். 144,000 x 144,000 ஐ பெருக்கினால், நமக்கு 20,736,000,000 கிடைக்கிறது. ஒருவேளை நித்திய ஜீவனை வழங்கப்படக்கூடியவர்களின் எண்ணிக்கையாக இருக்கலாம்.

இரண்டு வகுப்புகள் காட்டப்பட்டுள்ளன நித்திய ஜீவனைப் பெறும் அனைவரும் புதிய எருசலேமின் சுவர்களுக்குள் இருப்பார்கள் மற்றவர்கள் வெளியே இருப்பார்கள். இவர்கள் தங்களை சுத்திகரித்து கொண்டு, நீதிக்கு அர்ப்பணிப்பதற்கு அதற்குள் பிரவேசிக்க மறுப்பவர்கள் அல்லது பரிசுத்தமான பெரும் பாதையில் பயணித்து, இறுதி சோதனையில் விசுவாசமற்றவர்களாக நிரூபிக்கப்பட்டு, இரண்டாம் மரணத்திற்குள் தள்ளப்படுபவர்கள். (வெளிப்படுத்தல் 22:19) இவை

மத்தேயு 25 ன் வெள்ளாட்டு வகுப்பாக, நகரத்திற்கு வெளியே காட்டப்பட்டுள்ளது. "பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலைபாதகரும், விபசாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரகாராதனைக் காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் என்றார்." (வெளிப்படுத்தல் 21:8) தேவபக்தியற்றவர்கள் அகற்றப்படுவது, மனுக் குலத்திற்கு பெரும் நிம்மதியைத் தரும்.

இந்த அழகான சித்திரத்தில் எழுச்சியூட்டும் தேவனுடைய வார்த்தைகள் உள்ளன,"அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்" (வெளிப்படுத்தல் 21:4) நம்முடைய பரலோகத் தந்தை இறங்குவதைப் போலவும், குழந்தைகளின் கண்களில் இருந்து கண்ணீரைத் துடைப்பதைப் போலவும் இருக்கும்.

"இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை, முந்தினவைகள் ஒழிந்துபோயின" சகல துக்கங்களுக்கும் காரணமானவைகள் இல்லாமல் போகும்.

"அப்பொழுது, ராஜா தமது வலதுபக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து: வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள்." (மத்தேயு25:34)

"அவர்கள் சதாகாலங்களிலும் அரசாளுவார்கள்." (வெளிப்படுத்தல் 22:5) இந்த வார்த்தைகளோடு தரிசனம் நிறைவடைகிறது. இறுதியாக, பாவம் மற்றும் மரணம், தீமை மற்றும் ஊழல் ஆகியவற்றோடு நீண்ட காலமாக ஒரு கடினமான பயணத்திற்கு பிறகு, மனுக்குலம் பூமி எங்கும் இராஜாக்களாக இருப்பதற்கு ஆதிக்கம் கொடுக்கப்படும். தேவனோடு நேரடியான உடன்படிக்கையின் உறவில் அவர்கள் என்றென்றும் பரிபூரண மனிதர்களாக ஆட்சி புரிவார்கள். தேவனுடைய மகத்தான ஆதிக்கத்திற்கு அனைவரும் அடிபணிவார்கள்.

# நிராகரிப்பு (அ) மறுப்புவாதத்தில் எழுச்சி

சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கி வைக்கிற மனுஷருடைய எல்லாவித அவபக்திக்கும் அநியாயத்துக்கும் விரோதமாய், தேவகோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டிருகிறது. ரோமர் 1:18

மறுப்புவாதம் (அ) நிராகரிப்பு முதன் முதலில் 1987 ஆம் ஆண்டு பிரெஞ்சு வரலாற்றாசிரியர் ஹென்றி ரூசோ தி விச்சி சிண்ட்ரோம் புத்தகத்தில் தோன்றியது. பேரழிவை மறுப்பதற்கும் ரூசா வேறுபடுத்தினார் அவர் அதை எதிர்மறைவாதம் என்று குறிப்பிட்டார். இது வரலாற்றுக் குற்றங்களை மறுப்பதைக் குறிக்கும்.

நிராகரிப்பின் கூறுகள் பின்வருமாறு ஏமாற்றுதல், தகவல்களை பொய்யாக்குவது அல்லது உண்மையை மறைப்பது மறுப்பு உண்மைகளை கூறுவது பொய்யானது அல்லது பழியை மாற்றுவது சார்பியல் [RELATIVICATION] பிற குற்றங்களை ஒப்பீடு செய்தல் சாதாரணமாக்கல் ஒரு செயலை விவரிக்க இனப்படுகொலைக்கு பதிலாக (பேரழிவு) மாற்று வார்த்தையைப் பயன்படுத்துதல்.

1933 - 1945 முதல் ஐரோப்பாவிலிருந்து யூதர்களை அகற்ற நாஜி ஜெர்மனியின் முயற்சி குறித்து பல்வேறு நாடுகளுக்கு இப்போது கல்வி தேவைப்படுகின்றன. கல்வியானது அமெரிக்காவிலுள்ள பதினொரு மாநிலங்களுக்கும் தேவையானதாக உள்ளது. படுகொலை, இனப்படுகொலை மற்றும் பிற வெகு ஜன வன்முறைச் செயல்களின் ஒழுக்கக்கேட்டை எதிர்கொள்ளவும், தொடர்புடைய வரலாற்று நிகழ்வுகளின் காரணங்களை பிரதிபலக்கவும் மாணவர்களை தயார்படுத்துங்கள் என ஓரிகன் அறிவுறுத்தி நிர்ணயித்து சமீபத்தில் ஒரு புளோரிடா உயர்நிலைப்பள்ளி முதல்வர் ஒரு பெற்றோருக்கு மின்னஞ்சல் அனுப்பிய பின்னர், தனது பள்ளி ஏன் அத்தகைய அறிவுறுத்தலை வழங்கவில்லை என்று ஆச்சரியப்பட்டார். " பேரழிவு ஒரு உண்மை வரலாற்று நிகழ்வு என்று சொல்ல முடியாது" என்று ஆச்சரியப்பட்டார்.

நம்முடைய இன்றைய உலகக் கண்ணோட்டத்தை விளக்க ஒருவர் பொதுவாக புறநிலை வரலாற்று உண்மைகளை விரைகிறார். அரசியல் நிகழ்ச்சி நிரல்கள் கல்வியாளர்கள், செய்தி ஊடகங்கள் மற்றும் அரசியல் பண்டிதர்கள் வரலாற்று நிராகரிப்புவாதத்தில் ஈடுபட வழிவகுக்கும் போது, சரியான உலகப் பார்வையை உருவாக்குவதற்கான முயற்சிகள் தடைபடுகின்றன.

நிராகரிப்புவாதம் முதன்மையாக நாஜ் ஜெர்மனியின் செயல்களுடன் தொடர்புடையது என்றாலும், இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் நடந்த அடடூழியங்களும் சிதைக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஓட்டோமன்களால் ஆர்மீனியர்களின் இனப்படுகொலை (1915) இம்பீரியல் ஜப்பான் எழுதிய நேக்கிங் படுகொலை (1937), ருவான்டாவில் ஹீட்டஸால் துட்ஸியின் இனப்படுகொலை (1994) தீவிர இஸ்லாமியர்களால் உலக வர்த்தக மையத்தில் இனப்படுகொலை (2001)

அடோர்ப் ஹிட்லரின் உறுதியான சுயசரிதை எழுதிய பிரிட்டிஷ் வரலாற்றாசிரியர் இயன் கெர்ஷா, ஹிட்லரின் ஜெர்மனியிலிருந்து பாடத்தை வரையறுக்குமாறு 1999ல் கேட்கப்பட்டார். ஹிட்லர் உயர்ந்தபோது, கலை, அறிவியல், கல்வி மற்றும் தொழில்துறையில் ஜெர்மனி முன்னேறியது. "நாகரீகம் எப்படி இருக்கிறது என்பதை இது காட்டுகிறது." என அவர் பதிலளித்தார். ஆனால் ஹிட்லர் ஒரு இராணுவத்தை மிக விரைவாகக் கட்டினார். ஆறு வாரங்களில் ஜெர்மனி சக்தி வாய்ந்த பிரெஞ்சு இராணுவத்தை அழித்தது. ஜன்ஸ்பீன், மீத்தோவன் மற்றும் பாக் ஆகியோரை உலகிற்குக் கொடுத்த கலாச்சாரம் ஆறு மில்லியன் யூதர்களைக் கொன்றதை நியாயப்படுத்தியது. மனித முன்னேற்றத்தின் பல கட்டங்களில் மக்கள் மிகவும் முன்னேறிய இடங்களில் அது நடக்க முடியுமானால், அது எங்கும் எந்த நேரத்திலும் நிகழலாம், வரலாறு சிதைக்கப்பட்டு மறுக்கப்படும் போது

### தேவனின் வார்த்தைகள் மட்டும் நம்பகமானது

"நமக்கு முன் வைக்கப்பட்ட நம்பிக்கையைப் பற்றிக்கொள்ளும்படி அடைக்கலமாய் ஓடிவந்த நமக்கு இரண்டு மாறாத விசேஷங்களினால் நிறைந்த ஆறுதலுண்டாகும்படிக்கு எவ்வளவேணும்

பொய்யுரையாத தேவன் அப்படிச் செய்தார் (எபிரெயர்: 6:18RVIL)

இன்று நாம் உலகம் முழுவதும் பொது மற்றும் தனியார் ஊடகங்களின் நல்லதும் தீயதையும் காண்கிறோம். விஷயங்களை மறைத்து வைப்பது கடினம் லூக். 8 : 17 உண்மைகளைத் தவிர்ப்பது அல்லது ஒரு பக்கச்சார்பான பார்வையை முன்வைக்க படங்களை மாற்றுவது எளிது. ஒரு குறிப்பிட்ட பார்வையை ஆதரிக்க அறிக்கையிடல் பெரும்பாலும் சிதைக்கப்படுகிறது. ஒவ்வொன்றும் படுக்கைக்கு தங்கள் சொந்த காரணத்தை மிகவும் முக்கியமாகக் கருதுகின்றன. இதனால் சகிப்புத்தன்மை இல்லை. பகிரங்கமாக வெளிப்படுத்தப்படும் பகைமை, ஆதரிக்க மறுக்கிறவர்கள் மீதாக இருக்கும். துரதிர்ஷ்டவசமாக, சில சமயங்களில் இதன் பலனானது வருத்தத்தை ஏற்படுத்தும் வகையில் அமையக்கூடும். உலக வரலாற்றில் அப்போதாவது அமைதியான மற்றும் பக்கச்சார்பற்ற பகுத்தறிவுக்கு அழைப்பு விடுத்த ஒரு காலம் இருந்திருந்தால், அது இப்போதுதான் ஆனால் வெறும் பகுத்தறிவு எவ்வளவு புத்திசாலித்தனமாக இருந்தாலும், ஒருபோதும் யாருக்கும் நம்பிக்கையைத்தரமுடியாது. எந்த காரணத்தை அடிப்படையாகக் கொண்ட சில நம்பகமான அடித்தளத்தைக் காணமுடியாது.

வேதாகமச் சத்தியத்தின் வாயிலாக மாத்திரமே நாம் ஒரு ஆறுதலைப் பெறக்கூடும். தேவ வார்த்தைகளிலிருந்து மாத்திரமே, நம்பத்தகுந்த சத்தியங்களை காரணங்களோடும், மிகுந்த ஆறுதலை செய்தியின் மூலமாகவும் கண்டறிந்து பெறவும் இயலும். நம்முடைய நம்பிக்கை காரணம் மற்றும் உண்மையில் உறுதியான அடித்தளத்தை அடிப்படையாகக் கொண்டிருப்பது இன்று எவ்வளவு அவசியம், ஏனென்றால் பல குழப்பமான முரண்பாடுகளை நாம் எதிர்கொள்கிறோம். வேதாகமத்தின் வரலாறுகளானதும் யேகோவாவின் வாக்குறுதிகளும் உண்மையும் மற்றும் சிதைவிற் உட்டாதவைகளுமாகும். எபிரெயர் 6 : 18 பரலோகச் சத்தியங்களானது எப்பொழுதும் மாற்றத்திற்கு ரியதன்று. அழிவின் வீழ்ச்சியை நோக்கி ஒரு சுயநல உலகின் வேகத்தை எங்களால் தடுக்க முடியாது. ஆனால் சத்தியமும் நீதியும் ஆட்சி செய்யும் ஒரு புதிய உலகத்தை தேவன் விரைவில் நிறுவ உள்ளார் என்பதைக் கேட்கும் பலருக்கு நாம் செல்ல முடியும். "உன் தேவன் இராஜரீகம் பண்ணுகிறாரென்று" ஏசாயா. 52:7 என்று கூறும் வண்ணமாக நாமனைவரும் வரப்போகிற புதிய அரசாட்சியின் பிரதிநிதிகளாகயிருக்கிறோம்.